# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
பார்க் வீதி,
கொழும்பு 2. இலங்கை

மலர் 2 இதழ்கள் 8/9 நவம்./டிசம். 1976

## பொருளடக்கம்

### சிறப்புக் கட்டுரைகள்

யஹியா அப்துல் மஜீத் 22 உயிர் வாழ்வன எல்லாம் நீரிலிருந்து உற்பத்தியானவை

டொரிக் டி. சூசா 24 தேசியமயத்துக்கு முன்னர் பெருந்தோட்டத்துறை

ஆர். டி. டி. லிவேரா 26 இலங்கையில் சேமிப்புகளும் கூட்டுறவுத் துறையும் (2ம் பகுதி)

### தலைமைக் கட்டுரை

3 தகவல் — பொதுசனத் தொடர்பு

### நிரல்கள்

02 நிகழ்ச்சிக் குறிப்பேடு

18 பொருளாதாரம்

20 வியாபாரப் பொருட்கள்

**வாசகர் தயவு செய்து கவனிக்க**

எதிர்பாராத விதமாக, அச்சடிப்பில் ஏற்பட்ட தாமதத்தை ஈடுசெய்யும் முகமாக நாம் 1976 நவம்பர்/டிசம்பர் இரு மாதங்களுக்குமான இரு இதழ்களையும் ஒருங்கிணைத்துள்ளோம், எவ்வாறாயினும் வருட சந்தா செலுத்திய எமது வாசகர்கள் பன்னிரண்டு தனிப் பிரதிகளைப்பெற உரித்துடையவர்கள் என்பதற்கு நாம் உறுதியளிக்கின்றோம்.

**அடுத்த இதழில்:**

- இலங்கையின் பொருளாதாரம், பொருளாதார வரலாற்றுக் கண்ணோக்கில் அதன் பரிமாணம், பிரச்சினைகள் வாய்ப்புக்கள் பற்றிய ஓர் ஆய்வு.
- சனத்தொகையும் அபிவிருத்தியும் — இலங்கையின் கிராமிய பொருளாதாரத்திலிருந்தும் இந்தியாவின் அனுபவத்திலிருந்தும் ஓர் ஆய்வு.
- அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் முகாமைத்துவம், அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்களில் தற்போதைய முகாமைத்துவ அமைப்பின் விளைவு பற்றிய ஓர் ஆய்வு.

**அட்டைப்படம்:**

பி. எஸ். வீரசிங்க (புத்தக அட்டைப்படம் தீட்டுவதில் சிறப்புத் தேர்ச்சியுடைய ஓர் ஓவியர்).

பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விபரங்களையும் உரையாடல்களையும் பலவேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளியல் வளர்ச்சி முறையிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவின்மையைத் தகர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமுதாயப் பணித் திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாகும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களேயாம். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

1 1976 செப்டெம்பர் இறுதிவரை அதன் ஏற்றுமதி வருவாய் 21 கோடியே 33 இலட்சம் ரூபாவாக, மிகக் கூடுதலாகச் சம்பாதிக்கப்பட்ட ஆண்டைவிட 2 கோடியே 50 இலட்ச ரூபாவால் அதிகரித்துள்ளது என்று அரசாங்க மாணிக்கக்கல் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

மக்கள் வங்கியின் 178 வது கிளை மஸ்கெலிய நகரில் திறக்கப்பட்டது.

இந்தோ பசுபிக் மீன்பிடிச் சபையின் 17 வது அமர்வு கொழும்பில் இலங்கை மீன்பிடித் தொழில் அமைச்சரினால் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இப் பிராந்தியத்தைச் சேர்ந்த 17 நாடுகளின் பிரதிநிதிகளும் ஐ. நா. நிறுவனப் பார்வையாளரும் இதில் கலந்துகொண்டனர்.

3 தத்தம் நாடுகளில் தேசியமயமாக்கப்படாத வெளிநாட்டு வங்கிகளின் கிளைகளைத் தேசியமயமாக்கும் நடவடிக்கையை மிக முக்கியமான அம்சமாகக் கொண்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் 7 வது வரவு செலவுத் திட்டம் தேசிய அரச பேரவையில் நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டது.

5 மலேசியா, பிலிப்பைன்ஸ், யப்பான் ஆகிய நாடுகளுக்கு 12நாள் நல்லெண்ணவிஜயத்தை மேற்கொண்டு பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க புறப்பட்டுச் சென்றார்.

வியாபார நிலையக் கையேற்புச் சட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் ஒக்ஸிஜன் கொம்பனியின் தனிப்பட்டோரின் கம்பனியான இலங்கை ஒக்ஸிஜன் லிமிட்டட் அரசாங்கத்தினுல் பொறுப்பேற்கப்பட்டது.

7 இரு நாடுகளுக்கு மிடையே வியாபார நிலுவையைச் சமமாக்கும் பொருட்டு மக்கள் சீனக் குடியரசு 69 இலட்சம் டொலர் பெறுமதியுள்ள மரக்கட்டைகளுக்கான ஒரு கட்டளையை மலேசியாவுக்கு அனுப்பியுள்ளதோடு அதிகமாக மலேசிய ரப்பரையும் தாழஎண்ணெயையும் வாங்குவதாகவும் இணங்கி உள்ளது.

10 ஆசியாவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள பெரிய நாடுகளுக்கு ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் வழங்க உள்ள மானியமான 2 கோடியே 40 இலட்சம் டொலரின் ஒரு பகுதியாக இலங்கை 24 இலட்சம் டொலரை உதவியாகப் பெறும் என பிரஸல்ஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

11 அடுத்த ஆறு ஆண்டுகளில் 20 பாரிய வடிகால் திட்டங்களுக்காக 379 கோடியே 60 இலட்சம் ரூபாவைச் செலவிட அரசாங்கம் திட்டமிடுகிறது என நீர்ப்பாய்ச்சு அமைச்சுப் பேச்சாளர் கூறினர்.

12 சர்வதேசநாணய நிதி இலங்கைக்கு 1 கோடியே 58 இலட்சம் (ஏறத்தாழ 12 கோடியே 50 இலட்சம் ரூபாவை) வழங்கி உள்ளது என கொழும்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

15 கரை ஓரத்திலிருந்து கடலுக்குள் 320 கி.மீ. ஐக் கொண்ட பொருளியல் வலயம் ஒன்றினை இந்தியா பிரகடனப்படுத்தி உள்ளது. இந்த எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள வளத்தைப் பயன்படுத்தும் அதிகாரம் இந்தியாவுக்கு உண்டு.

ஒபெக் நாடுகள் மேற்கிலிருந்து வாங்கும் உற்பத்திப் பொருள்களின் விலைகளுடன் எண்ணெய் விலைகளை சமப்படுத்துவதை ஆராய ஒபெக் நாடுகளின் பொருளாதார ஆணைக்குழு ஐந்து நாட் கூட்டத்தை வியென்னவில் ஆரம்பித்தது. டிசெம்பர் நடுப்பகுதியில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட இருக்கிறது.

17 இவ்வாண்டில் 20 இலட்சம் டொலர் பெறுமதியான உரத்தையும் அரிசியையும் வழங்குவதை உள்ளடக்கிய பொருளாதார உதவியை யப்பான் வழங்கத் தயாராயிருக்கிறது என டொக்கியோவில் யப்பான் பிரதம மந்திரி திரு. மிக்கி இலங்கைப் பிரதமரிடம் கூறினர்.

கடந்த ஜனவரிக்குப் பிறகு ஒக்டோபரில் யப்பானின் சென்மதி நிலுவைக் குறை 10 கோடி டொலராக இருந்தது என டொக்கியோவில் யப்பான் நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

19 தேசிய அரச பேரவையில் வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு சாதகமாக 92 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் பெற்று நிறைவேறியது.

20 ஈரான் அதன் ஐந்தாவது அபிவிருத்தித் திட்டத்துக்காக சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து 50 கோடி டொலரைக் கடன் பெற முடிவு செய்துள்ளது என லண்டனில் அறிவிக்கப்பட்டுள்ளது. 1973 இல் எண்ணெய் விலை நான்கு மடங்காக உயர்ந்ததன் பின்னர் யூரோ நாணயச் சந்தையிலிருந்து ஏழு வருடங்களுக்கான இக் கடனைப் பெறுதல் இதுவே முதல் தடவையாகும்.

22 தனியார் துறையுடனுன கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் ஐந்து நாள் வேலை வாரத்தை நடைமுறைப் படுத்தும் வாய்ப்புக்களை தொழில் அமைச்சு ஆராய்ந்து வருகிறது என உத்தியோக வட்டாரங்கள் தெரிவித்தன.

தனது வங்கி விகிதத்தை $\frac{1}{2}$ சத வீதத்தால் குறைத்து 9 சதவீத மாக்கியுள்ளது என கனடா வங்கி அறிவித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை அங்கோலா மக்கள் குடியரசை ஐக்கிய நாடுகள் சபையில் சேர்ப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

26 சருவதேசக் கூட்டுறவு மாநாட்டில் பங்குபற்றும் வளர்முக நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையே அடிப்படைப் பிரச்சினைகளில் பாரதூரமான கருத்து வேறுபாடு நிலவுவதாக, மாநாட்டின் கூட்டுத் தலைவரான வெனிசுலா அரசாங்க அமைச்சர் பெரெஸ் குரேரோ பாரிசில் அறிவித்தார். அதற்கான காரணம் மேற்கு நாடுகளே என்றும் கூறினர்.

இந்தியாவில் இயங்கும் கல்டெக்ஸ் கம்பனியின் கிளைகளைத் தேசியமயமாக்குவதற்கான உடன்படிக்கையில் ஐ. அ. கல்டெக்ஸ் எண்ணெய்க் கம்பனியின் உரிமையாளரும் இந்திய பெட்ரோ இரசாமன கைத்தொழில் நிறுவனத்தாரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

28 பணவீக்கத்தைத் தடுக்கும் முகமாக அமெரிக்க டொலரைப் பொறுத்த வரையில் அவுஸ்திரேலிய நாணயத்தை எதிர்பாராதவிதமாக 17.5 சதவீதத்தால் அவுஸ்திரேலிய அரசாங்கம் பெறுமதிக் குறைப்பு செய்ததாக அறிவித்துள்ளது.

பொதுநலவரசு விஞ்ஞான சபையின் ஒன்பதாவது கூட்டம் அதன் அமர்வை கொழும்பில் நடத்தியது.

29 திட்டமிடல் பொருளாதார அமைச்சில் உணவு போசாக்கு கொள்கைத் திட்டப் பிரிவு ஒன்றினை அமைக்க அரசாங்கம் அனுமதி வழங்கி உள்ளது என கொழும்பில் அறிவிக்கப்பட்டது.

30 சருவதேச வணிகர் மன்றம் அதன் 24 வது அமர்வை கொழும்பில் ஆரம்பித்தது.

''சிறு தொகையினருக்கு செல்வம், அதிகாரம், அறிவு ஆகியவற்றுக்கு எதிராக யுத்தமொன்றை ஆரம்பித்தீர்கள், செல்வம், அதிகாரம், அறிவு என்பன அகிலம்பரந்ததாக ஆகுமுகமாக பெருமையோடு மரணித்தீர்கள்.''

(1918ல் லெனின்கிராட்டில் மார்ஸ் சதுக்கத்தில் வீழ்ச்சியுற்ற புரட்சிவாதிகளின் ஞாபகார்த்தக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பு.)



**அபிவிருத்தித் தகவல்**

ஜுஸாகாவில் ஒரு விவசாயப் பணியாளர் ஒரு கருத்தரங்கம் நிகழ்ச்சிக்காக → கிராமவாசிகளின் பேட்டியை பதிவு செய்கிறார்.

# தகவல் — பொதுசனத் தொடர்பு

மனிதன் ஒரு தொடர்பு கொள் விலங்கினமாகும். தகவல்கள் கிடைக்கப் பெறல், ஏனையோருடன் தொடர்பு கொள்ளல் போன்ற உற்சாக மூட்டிகள் இல்லாது அவனால் வாழ முடியாது. கற்றுக் கொள்ளவும் அதனைப் பகிர்ந்து கொள்ளவும் கூடிய உருவில் மானிட சூழ்நிலைகளின் அம்சங்களை மீளுருப்படுத்தக் கூடிய மனிதனின் ஆற்றலும்; விம்டமொன்றினை ஏற்றுக் கொள்ள, பிரதிபலிக்க, பதிவுசெய்து பேண, பின்னர் அதனைத் தகவல் உருவில் வெளிப்படுத்தக் கூடிய மனித மூளையின் ஆற்றலுமே மானிட தொடர்பு கொள்ளலைச் சாத்தியமாக்கக் காரணங்களாகும். ''தகவல்கள் மூலமான சமூக கலப்பு'' என வரை விலக்கணம் கூறப்பட்ட பொதுத் தொடர்புத் துறையின் துணையின்றி எந்த ஒரு மனிதனோ சமுதாயமோ அன்றித் தேசமோ வாழ முடியாத அளவுக்கு அது அத்தியாவசியமாயுள்ளது. பகுத்தறிவுடையோனாக நடந்து கொள்வதற்கு, மனிதன் தனது சுற்றுடலிலிருந்து தகவல்கள் தங்கு தடையின்றி தொடர்ந்து கிடைக்கப் பெறுவதிலேயே தங்கி நிற்கின்றான். ஒரு சமுதாயம் அதன் பொதுத் தொடர்பு முறைகளைச் சுற்றியே பின்னப்பட்டுள்ளதுடன் முற்றாகவே ஒன்றிலொன்று தங்கி நிற்கும் ஒரு உலகில் வாழ்வதற்கு தேசங்களுக்கு தகவல்கள் அவசியமாகும். ''அறிவே ஆற்றல்'' எனக் கூறிய பிரான்ஸிஸ் பேகனின் கூற்று பல வழிகளில் உறுதியாக நிரூபிக்கப்பட்ட போதிலும் இன்றைய சமுதாயத்தில் அறிவே மாற்றமுமாகும். அறிவைப் பெறுதலைத் துரிதப்படுத்துதல் மாற்றத்தின் உத்வேகத்தை அதிகரிப்பதாகும். நிலப் பிரபுத்துவ காலத்தில் அமைந்திருந்ததான மாற்றங்களுக் குட்படாத உலகம் இன்றில்லை. ஒரு காலத்தில் தனித்திருந்த தேசங்கள் இன்று காலனித்துவ பிணைப்புகள், சுயேச்சை இணைப்புக்கள் போன்ற புறச் சக்திகளின் உறவுகளினால் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. முன்னர் தகவல், அறிவுத் துறைகளின் பிரதான மூலங்களுடன் தொடர்பற்றுத் தனித்து நின்ற நாடுகளிடையே இன்று பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் கலாச்சாரத் துறைகளில் பிராந்திய ஒத்துழைப்பு நோக்கிய நடவடிக்கைகள் அறிவுப் பரிமாற்றத்தின் புதிய அவசியங்களைத் தோற்றுவித்துள்ளது, இன்றைய உலகம் முன்னேற்றம் காண்பதற்கான போட்டியும், ஆக்கிரமிப்பும் நிறைந்ததாகத் தோற்றம் தரும் அதே வேளையில் இச் சுற்றுடல் சூழ்நிலை விடுக்கும் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான ஆயுதமாகவும் அதே வேளையில் கவசமாகவும் தகவல் பயன்படுகிறது.

நிலப்பிரபுத்துவ காலத்தில் பரிமாறிக் கொள்ளப்பட்டதான, செய்திகளையும் விளம்பரங்களையும் உள்ளடக்கியதான தகவல்கள் அன்றாட அனுபவத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாயமைந்ததோடு பரிமாறிக் கொள்ளப்பட்ட தகவலின் பிரதான மூலம் உரையாடலாகும். எழுத்து மூலமான பரிமாற்றம் குழுக்களுக் கிடையிலமைந்தது. படிப்படியாக மக்கள் தங்களது குழுவுக்கு வெளியிலுள்ளோர்களையும் அவர்களது கலாச்சாரங்களையும் அறிந்து கொண்டனர். ஆனால் இத்தகவல் பரிமாற்றம் இந்நிலையிலும் வாய்மூலமானதாகவே அமைந்தது.

முன்னெப்பொழுதும் சிந்தித்தும் பார்க்காத அளவுக்கு தகவல் பரிமாற்றங்களுக்கான வழிகளைத் திறந்து விட்ட ஐரோப்பாவின் கைத்தொழில் புரட்சியுடன் தகவல் பரிமாற்றத் துறையில் தரமிக்க ஒரு திடீர் முன்னேற்றம் ஏற்பட்டது.

தகவல் பரப்பலில் முன்னெப்பொழுதுமே சாத்தியமானதெனக் கருதப்படாத பல வழிமுறைகளைத் தோற்றுவித்த ஐரோப்பாவின் கைத்தொழில் புரட்சியுடன் தகவல் பரிமாற்றத்துறை தரத்தில் ஒரு பெரும்பாய்ச்சலில் முன்னேற்றம் கண்டது. ஆளுக்கு ஆள் தகவல் பரிமாற்றம் செய்து மிக மந்தகதியில் தகவல் பரிமாற்றம்

நடைபெற்றதற்குப் பதிலாக உலகின் பல்வேறு பாகங்களுக்கும் ஒரே வேளையில் செய்தி பரப்புவதற்கும், அதனைப் பெருமளவில் உற்பத்தி செய்வதற்கும் ஏதுவான சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பொதுத் தகவல் முறையில் மக்கள் தற்போது பங்கு கொள்வது சாத்தியமாகியது. இதன் விளைவாக, இதுகால வரையிலும் துரதிர்ஷ்டவசமாக சம்பந்தமெதுவு மில்லாது தான் வாழ்ந்து வந்த உலகின் பல்வேறு நிகழ்வுகள் பற்றியும் தான் அன்றாடம் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு மக்களுக்குக் கிடைத்தது. தொழில் நுட்பத்தின் வளர்ச்சி, அறிவு, சிந்தனை, அனுபவம் என்பவற்றைப் பரிமாறிக் கொள்ளல் என்பன மக்கள் சமுதாயத்தைப் புரட்சிகர சமுதாயமாக ஆக்கியதோடு மனித ஆற்றலின் புதிய எல்லைகளையும் அமைத்தன.

கைத்தொழில் புரட்சியின் தோற்றமும் அசையக்கூடிய அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டமையும், பத்திரிகை அச்சுத் தொழிலும் தகவல், அறிவு ஆகியவற்றை பெருந்தொகை மக்களுக்குப் பரப்புவதை இலகுவாக்கின. பல இடங்களிலும் பரந்துபட்டும் பெருந்தொகையினராகவும் வாழ்ந்த காரணத்தினால் ஒரு குழுவினரோடு மற்றக் குழுவினர் தொடர்பு கொள்ள முடியாது வாழ்ந்து வந்த மக்கள் குழுவினர் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்வதையும் பிரசுரங்கள் இலகுபடுத்தின. எனவே சமூக கலப்புக்கள், அறிவு, மற்றும் ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் என்பவற்றைப் பரப்புவதில் செய்திப் பத்திரிகைகள், காலாந்திரிகள், மற்றும் புத்தகங்கள் என்பன பிரதான மூலங்களாகும். பல வருடங்களாக தொடர்ந்து நிகழ்ந்த இந்தச் சமூக கலப்பு, மனிதன் தான் ஏற்கனவே பெற்ற அறிவை மேலும் வளர்க்கவும் புதிய அறிவினைப் பரப்பவும் உதவியது. அறிவைப் பெறும், சேமிக்கும், பரப்பும் வேகம் கடந்த வருடங்களில் கூடிக் கொண்டே போயின. மதிப்பீடுகளின்படி 1500 ம் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்த முழுக் காலப் பிரிவிலும் ஐரோப்பாவில் பிரசுரமான புத்தகங்களின் எண்ணிக்கை 1000 த்தைத் தாண்டவில்லை. ஆனால் அதே காலப் பிரிவுடன் ஒப்பிடும்போது தந்திரயான எனும் பௌத்த மதப் பிரிவை மாத்திரம் சார்ந்த 500 புத்தகங்களை சீனச் சக்கரவர்த்தியின் தூதர் ஒருவர் இலங்கையிலிருந்து பெற்றுச் சென்றதாகக் கூறப்படுகிறது 1950 ம் ஆண்டளவில் உற்பத்தி வேகம் தீவிர அதிகரிப்புக் காட்டியது. வருடத்துக்கு 1,20,0000 புத்தகங்கள் என்ற வீதத்தில் ஐரோப்பா புத்தக உற்பத்தி செய்தது. அதாவது முன்னர் ஒரு நூற்றாண்டில் பிரசுரிக்கப்பட்டவை இப்பொழுது 10 மாதங்களில் வெளியாகியது. 1960 ம் ஆண்டளவில் உற்பத்தி வேகம் மேலும் அதிகரித்தது. முன்னர் 1 நூற்றாண்டில் உற்பத்தி செய்யப்பட்டவற்றை உற்பத்தி செய்ய தற்போது 7½ மாதங்களே தேவைப்பட்டது. 60 ம் ஆண்டுகளின் நடுப் பகுதியாகும்போது தினமொன்றுக்கு 1000 புத்தகங்கள் வீதம் உற்பத்தி அதிகரித்தது. இவ்வுற்பத்திக் கோட்பாடு ''தகவல் நெருக்கடி'' அல்லது ''தகவல் , கட்டுமீறல்'' எனக் குறிப்பிடப்பட்டது. இன்று தகவல் பல மூலங்களூடு வெளிப்பாய்கின்றது. இத் தகவல்கள் இன்று ஒவ்வொரு தனி நபரினதும் ஒவ்வொரு செய்கைக்கும், சமூகத்தின் ஒவ்வொரு தொழிற்பாட்டுக்கும் அவசியமாகும். அது தற்கால வாழ்க்கையின் சகல அம்சங்களினதும் நெருக்கடியான தேவையாகும். தகவல் இன்றி அரசாங்கம் செயற்பட முடியாது. ஒரு வர்த்தக நிறுவனம் வெற்றிகரமாக செயல்படுவதற்கு சந்தைநிலை, கைத்தொழில், புதிய கண்டுபிடிப்புகள் முறைகள் என்பன பற்றிய தகவல்கள் அவசியப்படுகின்றன. உத்தியோகக் கல்வியாளனுக்கு தான் சிறப்புத் தேர்ச்சி பெற்ற துறையில் மேலும் இறுதியான கண்டுபிடிப்புகளையும், தேர்ந்த முறைகளையும் அறிந்து கொள்வதற்கு தகவல்கள் அவசியப்படுகின்றன. ஒரு நிர்வாகி தனது தீர்மானம் மேற் கொள்வதற்குத் தேவையான புள்ளிவிவரங்களையும், தரவுகளையும் பெற்றுக் கொள்ளவும் தகவல் அவசியமாகின்றது. தனக்குப் புறத்தேயிருந்து தான் பெறும் அறிவு, அனுபவங்கள் மூலம் ஒரு தனி நபருக்குக் கிடைக்கும் உந்தூக்கம் இன்றி அவனால் வாழ முடியாது. தான் வாழும் சமுதாயத்தைப் பற்றித் தான் அறிந்து கொள்ளவும், தனது நாட்டிலும் வெளியுலகிலும் அன்றாடம் நடப்பவற்றையிட்டும் அறிந்தும்கொள்ளாது அவனால் சரிவர செயல்பட முடியாது.

**அபிவிருத்திக்கான ஒரு அடிப்படை வளம்**

தகவல்களைப் பெறல் களிப்பூட்டல் போன்ற மனிதனின் தேவைகளை பொதுசன தொடர்பு ஊடகம் தற்போது வழங்குகின்றது. செய்திப் பத்திரிகைகள், காலாந்திரிகள், புத்தகங்கள் என்பன ஆட்களுக் கிடையேயான தொடர்பு கொள்முறைகளைக் குறைவுபடச் செய்கின்றது. இன்றைய தகவல் சுற்றாடல், தகவல் வெளிப்போக்கில் நிபுணத்துவ முறைகளை அதிகரிப்பதாயுள்ளது. தொழில் நுட்ப அபிவிருத்திகள்

## இலங்கையில் புத்தக உற்பத்தி

*1970—1975ல் வெளியிடப்பட்ட மொழி அடிப்படையில் வகுக்கப்பட்ட தலைப்புக்களினதும் பிரதிகளினதும் எண்ணிக்கை*

| | 1970 | | 1971 | | 1972 | | 1973 | | 1974 | | 1975 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தலைப் புக்கள் | பிரதி கள் | தலைப் புக்கள் | பிரதி கள் | தலைப் புக்கள் | பிரதி கள் | தலைப் புக்கள் | பிரதி கள் | தலைப் புக்கள் | பிரதி கள் | தலைப் புக்கள் | பிரதி கள் |
| சிங்களம் ... | 744 | 5,079,248 | 607 | 3,248,992 | 759 | 5,410,357 | 641 | 4,621,091 | 557 | 4,750,977 | 540 | 2,194,648 |
| ஆங்கிலம் ... | 360 | 1,776,681 | 294 | 998,560 | 344 | 1,250,353 | 344 | 2,071,818 | 361 | 1,509,393 | 285 | 724,298 |
| தமிழ் ... | 264 | 1,269,015 | 238 | 689,687 | 249 | 1,047,397 | 250 | 1,530,679 | 269 | 1,156,242 | 222 | 576,324 |
| 2 அல்லது அதற்குக் கூடிய மொழிகளில் | | | 104 | 156,873 | 248 | 1,048,710 | 265 | 745,395 | 254 | 877,467 | 102 | 457,442 |
| மொத்தம் ... | 1368 | 8,124,944 | 1243 | 5,094,112 | 1600 | 8,756,817 | 1500 | 8,968,983 | 1441 | 8,294,079 | 1149 | 4,252,712 |

தகவல்: தேசிய நூலக சேவைகள் சபை

அகிலத்தை காலத்தினாலும் தூரத்தினாலும் சுருங்கச் செய்கின்றன. தகவல்கள் சுயமாக வெளிப்பாய்வதற்குக் குறுக்காயிருந்த தடைகளை இது அகற்றியது. புதிய கண்டுபிடிப்புகளுக்கிடையிலான கால இடைவெளி குறைவுபடல், தொழில் நுட்ப மாற்றங்கள், அதன் விளைவுகளால் சமுதாயத்தில் ஏற்படும் தாக்கங்கள், தகவல் மற்றும் தொடர்புச் சேவைகளில் சமுதாயத்தின் தங்கியிருப்பு அதிகரித்தலும், இத்தேவைகளைப் பூரணப்படுத்துவதற்காக பல்வேறு முறைகள் கடைப்பிடிக்கபடலும் இன்றைய தகவல் சுற்றாடலைச் சூழ்ந்துள்ள அம்சங்களாகும். தகவல்கள் கூடுதலாகக் கிடைக்கப் பெறுதலின் காரணமாக சமுதாயத்தின் மீதான அதன் தாக்கம் கோட்பாட்டு ரீதியான மாற்றங்களையும் ஏற்படுத்தியது. அபிவிருத்திக்கான ஒரு அடிப்படை வளமாக சிலரால் அறிவும், தகவலும் கருதப்படுகிறது. ''கைத்தொழிலுக்கு முந்திய ஒரு சமுதாயம் மூலப் பொருட்களை அடிப்படையயாகக் கொண்ட இயற்கைக் கெதிரான ஒரு விளையாட்டில் ஈடுபடுகிறது. அதில் விளைவுகள் குறைந்துபட்டுக் கொண்டே செல்லும். ஆனால் கைத்தொழிலுக்குப் பிந்திய ஒரு சமுதாயம், அறிவு ஓட்டத்தை ஒழுங்காற்றும் ஒரு அடிப்படையாக தகவலையும், தகவலைப் பயன்படுத்தலையும் மையமாகக் கொண்டமையும்'', என நிலங்கமும் சிதாராமனும் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும் ''தகவல் சட்டு மீறல்'' என்பது ஒரு கற்பனையே என்றும் தகவலை இலகுவாகப் பெறுவதிலுள்ள தடை அதன் பரிமாணமல்ல ஆனால் தகவல் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தும் அதன் அமைப்பு முறைகளேயாகும் என நிலைநாட்டுவோரும் உள்ளனர். புத்தகங்கள், ஏடுகள், அறிக்கைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் போன்றவை அதிகரிக்கும் அதே வேளையில் மிகக் குறுகிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெறும் உத்தியோகக் கல்வி ஆளணியினரும் அதிகரிப்பதாக அவர்கள் வாதிடுகின்றனர். மேலும் தகவல் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துதலை இலகுவாக்கும் பல நவீன தொழில்நுட்ப முறைகளும் கிடைக்கக் கூடியனவாயுள்ளன. எனவே தகவல்கள் வெளிப்பாயும் பல்வேறு ஊடகங்களினதும் ஆற்றலினை மதிப்பிடுவதே உண்மையான பிரச்சினையாகும்.

### தகவல் துறையினை இணைக்கும் பாகங்கள்

தகவல் ஓட்டத்தின் ஏனைய ஊடகங்களின் வலிமையை மதிப்பிட முன், தகவல் துறையை அமைக்கும் பாகங்களை சுருக்கமாக நாம் அறிந்து கொள்ளல் அவசியமாகும். தகவல் உற்பத்தி, சேமிப்பு, திருப்பிப் பெறல், தகவல்களை ஒழுங்குபடுத்தலும் பிரதிபண்ணுதலும், தகவல் சந்தை என்பன போன்ற பல தொழிற்பாட்டு மூலங்களை அது உள்ளடக்கியுள்ளது. அடிப்படையில் தகவல் நடைமுறையானது தகவலைப் பயன்படுத்துவோருக்கும் அறிவை வெளியாக்குவோருக்குமிடையில் தொடர்பு ஏற்படுத்துதலாகும்.

தகவலை ஒரு தனி நபரோ அல்லது ஒருவரோடு ஒருவர் தொடர்புடைய ஒரு மக்கள் குழுவினரோ உருவாக்கலாம். புதிய கண்டுபிடிப்புகள், அமுலிலுள்ள தரவுகளின் சேமிப்பு, விஞ்ஞானிகளாலும் ஆராய்ச்சிப் பணியாளர்களாலும் கண்டுபிடிக்கப்படும் புது நடைமுறைகளின் அபிவிருத்தி கல்விமான்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், நிருபர்கள் ஆகிய சகலரினதும் பணிகள் அனைத்தும் தகவலை உற்பத்தி செய்கின்றன. அவர்கள் உலகெங்கும் பரந்துள்ள ஒரு பல்லினக் குழுக்களை உருவாக்குகின்றன. வர்க்கம், மொழி, பிரஜைகள் குழு என்பன உட்பட சமூக பொருளாதாரக் காரணிகள் எல்லாம் மொத்தத் தகவல் ஓட்டத்தில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன.

அவ்விதம் உருவாக்கப்பட்ட தகவல்களை ஆட்களுக்கிடையிலான நேரடி உரையாடல், விரிவுரைகள், கடிதப் பரிமாறல்கள், என்பன போன்ற பாரம்பரிய தகவல் மூலங்களினூடாகப் பகிரலாம், பலர் இன்னுமே கடிதங்கள் மூலமாகவே தகவல்களைப் பரிமாறுகின்றனர். ஆரம்ப காலத்தில் எழுத்தாளர்கள் தமது கருத்துக்களையும், கண்டுபிடிப்புகளையும் நண்பர்களுக்கு கடிதங்கள் மூலமாகவே தெரிவித்தனர். தற்காலத்தில் புத்தகங்களின் கையெழுத்துப் பிரதிகள், அச்சுக்கு முந்திய பிரதிகள் ஆகியவற்றையும் பரிமாறிக்கொள்ள இம் முறை பயன்படுகிறது. மகாநாடுகள், சொற்பொழிவுகள், சங்கங்களின் கூட்டங்கள் ஆகியவற்றிலும் தகவல்கள் பரிமாறப்படுகின்றன. இம் முறைகளினால் வெளியிடப்படும் தகவல்களின் முக்கியத்துவம் எவ்வளவெனின் பலரும், அறிஞர்கள் உத்தியோகக் கல்வியாளர்கள்உட்பட, இத்தகைய கூட்டங்ளுக்குச் சமுகமளித்து தமது துறைசார்ந்த அறிவில் புதிய கண்டுபிடிப்புகள் என்ன என்பதை அறிவதில் ஆர்வம் காட்டுகின்றனர். இம் முறைகளினால் வெளிப்படுத்தப்படும் தகவல்களை அளவிடுதல் இயலாத ஒரு காரியமாயினும் தகவல் ஓட்டத்தில் அதற்கு ஒரு முக்கிய இடம் உண்டு என்பதை மாத்திரம் கூறலாம்.

பாரம்பரிய பொதுத் தொடர்பு ஊடகங்கள், செய்திப் பத்திரிகைகள், ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு, சினிமா, செய்தித் தொடர்பு செயற்கோள்கள், புத்தகங்கள் காலாந்திரிகள், ஏனைய அச்சடிக்கப்பட்டவைகள், மேலும் பிரசுரிக்கப்படாத ஆவணங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், தொழில் நுட்ப அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கும். இக்கட்டத்தில் நாம் பொதுத் தொடர்பு சாதனங்களின் பணியின் நோக்கம் பற்றி கேள்வி எழுப்புவது பொருத்தமானதாகும்.

### பொதுத் தொடர்பு ஊடகங்களின் பங்கு

பொதுத் தொடர்பு முறைகள், விசேடமாக பொதுஜனத் தொடர்பு சாதனம் தகவலைத் தீவிரமாகப் பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவான ஒரு மிகவும் ஆற்றல் மிக்க சக்தியாகும். அதனை அறிவற்றோர்களுக்கு அறிவூட்டவும் அல்லது அறியாமையைத் தொடர்ந்து நிலைபெறச் செய்வதன் மூலம் மக்களை புறவினத்தவர்களாக்கவும் பயன்படுத்தலாம். உலகம் இன்று செல்வந்த நாடுகளாகவும், செல்வம் மறுக்கப்பட்ட நாடுகளாகவும், உள்ளோர் இல்லாதோராகவும் பிளவுபட்டுள்ளது. தனியொவ்வொரு நாடும் கூட வசதிபடைத்தோர், வசதி மறுக்கப்பட்டோர், படித்தோர் பாமரர் என பிளவுபட்டுள்ளன. உலகில் சமாதானமும் அமைதியும் நிலவ வேண்டுமாயின் இவ்வேறுபாடுகள் சமப்படுத்தப்பட வேண்டுமென்பது அதிகமாக உணரப்பட்டு வருகின்றது. காலம் காலமாக மனித சமுதாயம் ''பெற்று வந்த அறிவும் அனுபவமும் நிறைந்த ஒரு பாரிய அறிவுக்குதம் உண்டு. எமது பல பிரச்சினைகளுக்கு அதிலே பதிலிருக்கலாம் அபிவிருத்தியுறும்

நாடுகளிலும் அபிவிருத்தியுற்ற நாடுகளிலும் பெருமளவு ஆராய்ச்சி அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் நிறைவேற்றப்பட்டுக் கொண்டுமிருக்கின்றன. இவ்வறிவினை, அபிவிருத்தியுறும் நாடுகள் மிக உயர்ந்த, மிகத் துரிதமான வளர்ச்சி வீதத்தை அடைவதற்காகப் பயன்படுத்தலாம். எனவே இந்த அறிவு மிக அத்தியாவசியமான ஒரு மூலவளமாகும். மேலும் நியாயமான உலக பொருளாதார ஒழுங்கொன்றினை ஏற்படுத்துவதில் பயன்படக்கூடிய சர்வதேச மூலவளமும் இதுவாகும். எனவே திரிபில்லாது, பாரபட்சமில்லாது அறிவினை ஆளுக்கு ஆள், நாட்டுக்கு நாடு பரப்புவதில் தொடர்பு முறைகளின் உதவி அவசியமாகும். ஆனல் உண்மையில் இது நடப்பதில்லை. விசேடமாக சர்வதேசத் துறையில் இது நடப்பதில்லை. ''வெளி நாட்டுப் பிரசன்னம்'' சிறிய நாடுகளின் பொதுத் தொடர்பு முறைகளில் உறுதியான பிடிப்புக் கொள்ளவும் முடியும். ஏனையோரின் கலாச்சாரங்கள் வாழ்க்கை முறைகள் பற்றிய தகவல்களைப் பரிமாறி சகல மக்களும் சகல நாடுகளும் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க ஊக்குவிப்பதன்மூலம் பொதுத் தொடர்பு துறையினுல் சர்வதேச புரிந்துகொள்ளலை ஏற்படுத்தவும் உதவலாம்.

ஒரு சமூகம் தகவல்களை மையமாகக் கொண்டு பின்னப்பட்டிருக்குமாயின், அறிவு ஒரு சர்வதேச மூலவளமாகக் கருதப்படுமாயின், அதனைப் பயன்படுத்துவோர் அம் மூலவளத்தினை அணுக சம அருகதையுடையவர்களாயிருத்தல் அவசியம். எவ்வாருயினும் இந்த இலட்சியத்துக்கு எதிராக பல காரணிகள் செயல்படும் போக்கினையுடையன. மொழித் தடை, பூகோளத் தடைகள், பொருளாதாரத் தடைகள், தொழில் நுட்ப அறிவுகள் மீதான கட்டுப்பாடுகள் என்பன தகவலைப் பெறுவதில் அனைவருக்கும் சர்வதேச ரீதியிலான சம அருகதையை வழங்குவதில்லை.

செல்வமிக்க, அபிவிருத்தியுற்ற நாடுகளில் தகவலினுல் பயன்பெறுவோர்கள் பெறும் தரமான, மற்றும் அதே யளவான தகவல்களை அபிவிருத்தியுறும் நாடுகளில் உள்ளோர் பெறமுடியாதுள்ளதையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காட்டுகின்றன. முதலீட்டு முதன்மைகள் தகவல்களைப் பெறும் நடைமுறைகளை மட்டுப்படுத்துவதுடன் அதன் விளைவாக தகவல்களைப் போதியளவு பெறமுடியாமையும், அவற்றைப் பெறுவதில் பெருந் தாமதமும் ஏற்படுகின்றன. மேலும் அபிவிருத்தியுறும் நாடுகளில் நேரடிப் பொருளாதார நன்மைகளைத் தரும் தேவைகள் மற்றும் தேசிய தேவைகள் ஆகியவற்றுக்கு முதன்மைத்துவம் வழங்கப்படுவதன் காரணமாக தகவல் தேவைகள் மேலும் கீழ் தள்ளப்படுகின்றன. உதாரணமாக இலங்கையில் மொத்த வரவு செலவுத் திட்டத்தில் மிக அற்பமான ஒரு தொகையே தகவற் துறைக்காக ஒதுக்கப்படுகிறது. எவ்வாருயினும் தகவற்றுறையின் முக்கியத்துவத்தை அரசாங்கங்கள் கூடுதலாக அங்கீகரித்து வருவதுடன் தேசிய இலக்குகளை அடைவதற்காக மூலவளங்களைப் பயன்படுத்துவதற்கும் முயற்சிகள் செய்து வருகின்றன.

அபிவிருத்தியுற்ற முன்னேறிய நாடுகளில் அபிவிருத்தியுறும் நாடுகள் பொருளாதாரத்திற்காக தங்கியிருத்தலின் காரணமாக அந் நாடுகளிலிருந்து அபிவிருத்தியுறும் நாடுகளுக்குக் கிடைக்கப் பெறும் தகவல்கள் தரத்தில் மிகவும் சந்தேகத்திற்குரியனவாகும். சுவிடனிலுள்ள ''டக் ஹமர்சில்ட் நிறுவகத்தின் அறிக்கை'' கூறுவதுபோல் ''தற்போதைய சூழ்நிலைகளில் தகவலும் கல்வியும் பொதுசன அபிப்பிராயத்தைத் தனது நலனுக்காகவும், தேவைகளுக்காகவும் பயன்தரும் முறையில் கட்டுப்படுத்தும் அதிகார அமைப்பின் ஏகபோகமாக இருப்பதோடு முன்னரே தீர்மானிக்கப்பட்ட சிந்தனைகளையும், அறியாமை, அந்நியக் .கோட்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்தச் செய்வதாகவும் அமைந்துள்ளன.'' தகவலைப் பரப்பும் பொதுசன ஊடகங்களை உற்பத்தி செய்வோர் நிதிவளங்களும் தொழில் நுட்ப அறிவும் நிரம்பப் பெற்ற நாடுகளிலேயே செறிந்து காணப்படுவதாலேயே இது சாத்தியமாகியுள்ளது. இவைசளை அபிவிருத்தியுறும் நாடுகளுக்குக் கிடைக்கச் செய்வதில் அவர்கள், தகவல் ஓட்டத்தைத் தாங்கள் கட்டுப்படுத்தும் வாய்ப்புக் கிடைக்காவிடின்; தயக்கம் காட்டுகின்றனர். எனவே தகவலோட்டம் என்பது ஒரு வழிப்பாதையாகவே அமைந்துள்ளது. இரு வழிப் பாதையாக அமைவதன் விளைவுகளை எதிர்நோக்க அபிவிருத்தியுற்ற நாடுகள் தயாராயில்லை.

## இலங்கையில் புத்தக உற்பத்தி

1970 — 1975

பொருளடிப்படையில் வகுக்கப்பட்ட தலைப்புக்கள்

| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1975 |
|---|---|---|---|---|---|---|
| இலக்கியப் பாடப் புத்தகங்கள் | 134 | 164 | 231 | 112 | 103 | 92 |
| சட்டம், பொது நிர்வாகம் சமூக நலன் | 113 | 77 | 124 | 59 | 108 | 71 |
| அரசியல், பொருளியல் | 83 | 65 | 159 | 143 | 101 | 25 |
| வரலாறு, வாழ்க்கை வரலாறு | 67 | 74 | 47 | 30 | 26 | 29 |
| சமயம், சமயவியல் | 57 | 81 | 88 | 59 | 55 | 51 |
| மொழியியல் | 54 | 23 | 26 | 14 | 17 | 10 |
| புவியியல், பயண இலக்கியம் | 20 | 18 | 13 | 5 | 4 | 7 |
| விவசாயம், காடுவளர்த்தல் | 20 | 18 | 30 | 8 | 13 | 18 |
| வைத்திய அறிவியல் | 20 | 6 | 13 | 7 | 11 | 12 |
| இயற்கை அறிவியல் | 18 | 27 | 59 | 24 | 21 | 20 |
| கணிதம் | 18 | 16 | 16 | 9 | 2 | 6 |
| தத்துவஞானம், உளவியல் | 16 | 19 | 15 | 20 | 15 | 10 |
| இலக்கியம்(வரலாறு, விமர்சனம்) | 15 | 15 | 24 | 20 | 18 | 10 |
| தொழில் நுட்ப வியல் கைத்தொழில், வர்த்தகம் கைப்பணி | 11 | 9 | 11 | 9 | 6 | 3 |
| சமூகவியல், புள்ளிவிவரம் | 10 | 27 | 11 | 6 | 12 | 10 |
| கல்வி | 10 | 15 | 40 | 35 | 49 | 28 |
| உப-மொத்தம் | 666 | 654 | 907 | 560 | 561 | 402 |
| ஏனையவை | 702 | 589 | 693 | 940 | 880 | 747 |
| மொத்தம் | 1,368 | 1,243 | 1,600 | 1,500 | 1,441 | 1,149 |

தகவல்: தேசிய சுவடிக்கூட பணிப்பாளரின் நிருவாக அறிக்கை

## ஆதிக்கம் செலுத்தல் — தங்கியிருத்தல் உறவு

பின்வரும் பந்தி எடுத்துக் காட்டுவதுபோல் செய்திப் பத்திரிகைகள், சினிமா, வானொலி, தொலைக்காட்சி என்பன போன்ற பொது சன ஊடகம் எல்லாமே தங்களது செய்தித் திரட்டல்களுக்காக சர்வதேச செய்தித் தாபனங்களிலேயே தங்கி நிற்கின்றன. யுனெஸ்கோ நிறுவகத்தினால் 1972 ல் நடத்தப்பட்ட ஒரு மதிப்பீட்டின்படி 90 நாடுகளிடம் சொந்த செய்தித் தாபனங்கள் இருக்கும் அதே வேளையில் 40 நாடுகளிடம் தேசிய செய்தித் தாபனங்கள் எதுவுமேயில்லை. ஐந்து தேசிய செய்தித் தாபனங்கள் ஏஜென்ஸி பிரான்ஸ் பிரெஸ்ஸி (பிரான்ஸ்;) அசோசியேட்டட் பிரஸ் (அமெரிக்கா) ராய்டர்ஸ் (பிரிட்டன்) டாஸ் (ரஷ்யா) யுனைட்டட் பிரஸ் இன்டர்நெஷனல் (அமெரிக்கா) என்பன தமது தொழில்நுட்ப, நிதிப்பலம் மூலமாக செய்தித் துறையில் ஏகபோகம் செலுத்துகின்றன. இந்த ஐந்தையும் தவிர எகிப்து, யூகோஸ்லாவியா, இந்தியா, யப்பான், இத்தாலி, போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஆசிய நாடுகளைச் சேர்ந்த தேசிய செய்தித் தாபனங்களும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஆயினும் இவைகள் மேற்படி ஐந்து பூதங்களுக்கும் இணையாக முடியாது. மூன்றாம் உலக நாடுகளில் விநியோகிக்கப்படும் செய்திகளின் 75% சதவீதமானவை விதேசிய செய்தித் தாபனங்களாலேயே வழங்கப்படுபவையாகும். இந்நாடுகளின் ஆதிக்கமும் கட்டுப்பாடும் செவிப்புல - காட்சி ஊடகம் மூலமான பொதுசனத் தொடர்புத் துறையில் குறிப்பிடத்தக்களவு கூடுதலாகும். வானொலி, தொலைக்காட்சி போன்ற துறைகளில் தகுந்த அமைப்புக்கள் மூன்றாம் உலக நாடுகளில் இல்லாமையே இதற்குக் காரணமாகும். மூன்றாம் உலக நாடுகள் வொய்ஸ் ஒப் அமெரிக்கா, பிபிஸி, அல்லது ரேடியோ பிரான்ஸ் போன்றவைகளிலேயே தமது நாட்டுச் செய்திகளுக்காகத் தங்கி நிற்கின்றன.

''கைத்தொழில்மய நாடுகளின் வாழ்க்கை முறைகளைப் பிரகடனப் படுத்துவலதுடன் தமது உற்பத்தியையும், தொழில் நுட்பட அறிவுகளையும் மூன்றாம் உலக நாடுகளுக்கு அவைகளால் விற்க முடிகின்றது. தொலைக்காட்சியில் காட்டப்படும் சவர்க்கார விற்பனைக்கான கலை நிகழ்ச்சியின் மூலம், மிகச் சிறந்த விற்பனையாளன் ஒருவன் செய்யக்கூடியதை விடவும் மிகக் கூடுதலான அளவு மூன்றாம் உலக நாடுகளின் சந்தைகளுள் அச் சவர்க்காரம் விலை பெற முடிகின்றது'' மொமாடுஸ் மொக்டார் திம். ஆபிரிக்கக் கண்டத்தில் 92% சதவீதமான நிகழ்ச்சிகள் இறக்குமதி செய்யப்பட்டவையே. ஆசியாவில் இது 50% சதவீதமாகும். எனவே இந்நாடுகளின் மக்கள் வெளிநாட்டு வாழ்க்கை முறைகள், வாழ்க்கைப் பெறுமானங்கள், கலாச்சாரம், கண்ணோக்கம் ஆகியவற்றை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளையே கேட்கவும் காணவும் செய்கின்றனர். எனவே பொருளாதார வளங்கள், தாபன அமைப்பு, தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் சிறப்புயர்வுத் தன்மையை வகிக்கும் சில நாடுகளைக் கொண்ட ஒரு சிறுபான்மையினம் தங்களது சொற்களையும் காட்சிகளையும் ஏழை நாடுகள் மீது திணிக்க முடிவதோடு செல்வந்த - ஏழை நாடுகளுக்கிடையே ஆதிக்கம் - தங்கியிருத்தல் உறவினை நிலைநிறுத்தவும் முடிகிறது. இத்தகைய கலாச்சார காலனியாதித்துவத்திற்கெதிராகஆட்சேபம் தெரிவிப்பதற்கான காரணம், அவை வெளிநாட்டு உற்பத்தி என்பதல்ல. மாறாக அவர்களது ரசிகர்களது பிரச்சினைகளுடன் தாபன ரீதியான உறவு முறையொன்று இல்லாமையேயாகும். சுருங்கக் கூறுவதாயின் ரசிகர்களை அவர்களது வாழ்க்கைக்கும் புறம்பான வரலாற்றினதும் அனுபவத்தினதும் காட்சியைப் பார்வையிடும் வெறும் பார்வையாளர்களாக அது மாற்றி விடுகிறது.

தகவல் துறையில் வெளிப்படையாகவே தெரியும் இந்த ஒரு பக்கச் சார்பினை வெற்றி கொள்ளவும் (அகில உலகதகவல் ஓட்டத்தில் 15—20% சதவீதம் மாத்திரமே ஏழை நாடுகளிலிருந்து உருவாகின்றன) மூன்றாம் உலக அபிவிருத்தியுறும் நாடுகள் புறம்பான ஒன்றாக நடத்தப்படுவதைத் தவிர்க்கவும் அவசியமான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 1973 ல் அல்ஜீயர்ளில் கூடிய மூன்றாம் உலக நாடுகளின் உச்சி மகாநாடு தீர்மானித்தது. கூட்டுச்சேரா நாடுகள் தத்தம் உள்ளூர் மற்றும் வெளியூர் அரசியல் அபிவிருத்திகள் பற்றியும் உலகைப் பற்றியும் செய்திப் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், மற்றும் காலந்திரிகள் மற்றும் தத்தமது நாடுகளின் செய்திச் சாதனங்கள் மூலமாகவும் தகவல்களைப் பரப்ப வேண்டுமெனவும், இத்துறையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு திட்டங்களை வகுக்க வேண்டுமெனவும் இணங்கப்பட்டது. இத் தீர்மானம் பின்னர் லிமா மகாநாட்டிலும் கொழும்பு மகாநாட்டிலும் எடுத்து ஆராயப்பட்டு கூட்டுச்சேரா நாடுகளின் செய்தித் தாபனங்களது ஒருங்கமைப்பொன்றினை ஏற்படுத்தி கூட்டுச் சேரா அபிவிருத்தியுறும் நாடுகளிடையே செய்திகளையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

தகவல் ஓட்டத்தில் இந்த அசமத்துவத்தை நீக்குவதற்கு, செய்திகளைக் கையாள்வதில் பல்வேறு கூட்டுறவுத் திட்டங்களை பல சர்வதேச செய்தித் தாபனங்கள் மேற்கொள்ள முயன்றன. யுனெஸ்கோ நிறுவனம் இத்துறையில் முன்னணி வகிக்கின்றது. ஆவணப்படுத்தல் நிலையங்களை நிறுவுவதற்காக தொழில்நுட்ப உதவிகளை வழங்கல், தகவல் ஆளணியினரைப் பயிற்றுவித்தல் போன்ற பல நடவடிக்கைகளை அது மேற்கொண்டுள்ளது. விஞ்ஞான தொழில் நுட்பத் துறையில் நடவடிக்கைகளைக் கூட்டிணைப்பதற்காக ''யுனிஸிஸ்ட்'' நிறுவகத்தை அமைத்துள்ளது. விஞ்ஞான சங்கங்களின் சர்வதேச சபை, விடுதலை இயக்கங்களின் சர்வதேச சம்மேளனம் ஆவணப் படுத்தலின் சர்வதேச சம்மேளனம் என்பன இத்துறையில் ஈடுபடும் ஏனைய சில சங்கங்களாகும்.

ஐ. நா. வின் ஏனைய முகவராண்மைகளான உணவு விவசாய தாபனம், சர்வதேச தொழில் தாபனம், உலக சுகாதார தாபனம் போன்றவையும் இப் பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ளன. பல அபிவிருத்தியுறும் நாடுகளிடம் நவீன தகவல் சேவை இருப்பினும் வெளிநாடுகளிலிருந்து தகவல்களைப் பெறும் முறையில் உள்ள இடைவெளி இச் சேவைகளின் பயனில் எதிர்த் தாக்கத்தை விளைவிக்கின்றன.

## மொழி பெயர்ப்புக்கள்

உலக தகவற் குதத்தினை சமமாக அணுகுவதிலுள்ள மற்றொரு தடையென்னவெனில் மொழியாகும். விஞ்ஞான தொழில் நுட்பத்

துறையில் உலகில் பிரசுரமாகியுள்ள மொத்த பிரசுரங்களில் 40% சதவீதமானவை ஆங்கிலத்திலேயே என மதிப்பிடப்பட்டுள்ளது. எக்காலத்திலும் இது இவ்வாறு இருக்கவில்லை. 19 ம் நூற்றாண்டில் விஞ்ஞானம் பரப்பிய மிகப் புகழ்பெற்ற மொழி பிரெஞ்சு மொழியாகும். இரசாயனம் போன்ற துறைகளில் ஜெர்மன் மொழி சிறப்பிடம் பெற்றது. பாரம்பரியலைப் பொறுத்தவரை சமஸ்கிருதம், கிரேக்கம், பாளி, லத்தீன் போன்றவை புகழ் பெற்றிருந்தன. அவைகளே அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவின் காவிகளாகும். 20 ம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் என்பன தகவல் பரம்பலில் முக்கிய மொழிகளாக இடம்பெற்றன. ஆனால் 2 ம் உலக மகா யுத்தத்தின் பின் ஆங்கிலம் 50% சதவீத இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் ரஷ்ய மொழியும் முக்கியத்துவம் பெற்றது. இன்று விஞ்ஞானப் பிரசுரங்களில் 40% சத வீதமானவை ஆங்கிலத்திலேயே இருந்த போதிலும் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன் மொழிகள் யப்பான், சீன, ரஷ்ய மற்றும் கிழக்கைரோப்பிய மொழிகளுக்கும், அபிவிருத்தியுற்ற நாடுகளின் சுதேசிய மொழிகளுக்கும் இடம் விட்டு விலகுகின்றன. சமூக விஞ்ஞானத் துறையில் 1973 ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வின்படி 40% சத வீதமான தொடர் பிரசுரங்கள் ஆங்கிலத்திலும், 14 சத வீதமானவை பிரஞ்சிலும், 8 % சதவீதமானவை ஜெர்மனிலும், 10 சத வீதமானவை ஸ்பானிய மொழியிலும், 9% சத வீதமானவை சிலாவானிக் மொழியிலுமே பிரசுரமாகியுள்ளன.

எனவே தகவல் பரிமாற்றத்தில் மொழி பெயர்ப்புச் சேவைகள் ஒருமுன் நிபந்தனையாகும். ஆனால் இங்கும் எழும் பிரச்சினை யென்னவெனில் பிற மொழியாக்கங்களை தங்களது மொழியிலேயே தரவும் தங்களது ஆக்கங்களை பிறமொழியினர் புரிந்துகொள்ளுமாறு சமர்ப்பிக்கக் கூடியவர்களுமான சிறப்புத் தேர்ச்சிபெற்ற மொழி பெயர்ப்பாளர்களைப் பெறுதலேயாகும். இப் பிரச்சினை ஒரு நாட்டுக்கு மாத்திரம் அல்லது ஒரு குழுவினருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. ஆனால் இது அபிவிருத்தியுறும் நாடுகளில் மிகப் பாரிய பிரச்சினையாகும். பெரும்பாலான அபிவிருத்தியுறும் நாடுகள் ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளன. இச் சேவையை வழங்குவதில்கூட பிரச்சினைகள் உள்ளன. இலங்கையில் போதனை மொழி சிங்களத்துக்கும் தமிழுக்கும் மாற்றப்பட்டதை யடுத்து பாடப் புத்தகங்களை மொழிபெயர்ப்பதற்கு அரசாங்கத்தினால் முயற்சிகள்மேற் கொள்ளப்பட்டன. இதைத் தவிர "மார்கா" நிறுவகம் கடந்த சில வருடங்களுக்கு முன் ஆரம்பித்த மொழிபெயர்ப்புத் திட்டத்தைத் தவிர்த்து இலங்கையில் புதிய சிந்தனைகளையும், இலங்கைக்கு வெளியே பிரசுரிக்கப்பட்டவைகளையும் சிங்கள தமிழ்மொழிகளில் மக்கள் வாசிப்பதற்கு கிடைக்கச் செய்ய முயற்சிகள் செய்யப்படவில்லை.

கடந்த ஆறு ஆண்டுகளில் (1970 - 1975) இலங்கையில் பிரசுரிக்கப்பட்ட தமிழ் சிங்களப் புத்தகங்கள் பற்றிய விவரங்களைப் 4-ம் பக்க அட்டவணை காட்டும்.

அறிவை அணுகுவதை மறுத்தல் ஆழமான சமூக - பொருளாதார - அரசியல் விளைவுகளைக் கொண்டுள்ளது. அந்நிய மொழிகள் மூலம் இந் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் புதிய அறிவும் சிந்தனைகளும், ஆங்கிலம் கற்ற சிறுபான்மையினருக்கும், பெரும்பான்மையினருக்கு மிடையில் நிலவும் பொதுத் தொடர்பு இடை வெளிகளையும், தடைகளையும் நிலைநிறுத்தவே உதவும், மேலும் ,தொழில் பெறுகையின் தமது வாய்ப்பான சூழ்நிலையைப் பயன்படுத்தவும் அதன் மூலம் தமது வருமான மட்டத்தை அபிவிருத்தி செய்து கொள்ளவும் இது உதவும். பொருளாதாரத் துறையில், ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பினர், மேற்குலக வாழ்க்கை முறைகளை அனுபவித்துக் கொண்டும் தங்களது வாழ்க்கையின் அந்தஸ்து நிலையைத் தொடர்ந்து பேணுவதற்காக மக்களின் உண்மையான தேவைகளுக்குப் புறம்பாக வேறு திசையில் நிதி வளங்களைத் திசை திருப்பினர். இன்று அவர்கள் அந்நிய மொழியினைப் புரிந்து கொள்ளும் தமது ஆற்றல் காரணமாக நாட்டின் தீர்மானம் மேற்கொள்ளும் முக்கிய பதவிகளை வகிக்கக் கூடியவர்களாயுள்ளனர். அப்படியாயின் இன்றைய அவசரத் தேவை தகவல் பொதுத் தொடர்பு இடைவெளியை நிரப்புவதும், சிங்களம் - தமிழ் கற்ற மக்களுக்கு அறிவு இலகுவில் கிடைப்பதற்கு வழிகோலலுமாகும். ஆனால் சிங்களம் வெறுமனே இந்நாட்டுக்கு மட்டுமே சொந்தமான மொழியாதலால் சிங்கள வாசகர் முற்றாகவே இந்நாட்டில் பிரசுரமாகும் புத்தகங்களிலேயே தமது புது அறிவுக்காகத் தங்கியிருத்தல் வேண்டும். ஆனால் இங்குதரப்பட்டுள்ள அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளது போன்று சிங்களத்தில் பிரசுரமாகும் புத்தகங்கள், காலாந்திரிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். புத்தக உற்பத்தியை மட்டுப்படுத்தும் ஒரு காரணி யென்னவெனில் புத்தக விற்பனைக்காக உள்ள சந்தை வாய்ப்பாகும். எனவே பிரசுரகர்த்தாக்கள் தங்களுக்கு இலகுவில் விற்கக் கூடிய' சந்தை உறுதியுடைய ஜனரஞ்சன இலக்கியங்களையே பிரசுரிக்கின்றனர் என்பது மார்கா நிறுவனம் நடத்திய ஆய்விலிருந்து தெரியவந்தது. மக்கள் விருப்பத்தில் கற்பனைக் கதைகளே முதலிடம் பெறுகின்றன. 1970 - 75 க்கிடையில் பிரசுரிக்கப்பட்ட புத்தகங்கள் பற்றிய பாடங்களின் அடிப்படையிலான வகைப்படுத்தல் அட்டவணையிலிருந்து பொருளாதாரம், சமூக விஞ்ஞானம், விஞ்ஞானமும், அரசியல் சிந்தனைகளும் போன்ற பாடங்களில் பிரசுரங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். ஆனால் 'செய்திப் பத்திரிகைகளை வாசிப்பதில் உள்ள ஆர்வம் பற்றி நடத்திய ஒரு மதிப்பீட்டின்படி சிங்களத்தில் கிடைக்கக்கூடிய எத்தகைய தகவல்களையும் பெற்றுக்கொள்வதற்கு மக்கள் ஆர்வமுடையோராயுள்ளனர்" என மேலும் கூறுகிறது. செய்திப் பத்திரிகைகளில் வெளிவரும் சிறப்புக் கட்டுரைகள் பரவலாக வாசிக்கப்படுவதுடன் நடப்பு விவகாரங்கள், அரசியல் விஞ்ஞானம் போன்ற துறைகளில் அறிவுப் பரம்பலின் மூல ஊற்றாக அவை கருதப்படுகின்றன எனவும் "மார்கா" அறிக்கை கூறுகிறது. அரசியல் செய்திப் பத்திரிகைகளுக்கான கிராக்கி குறைவாயிருப்பதிலிருந்து செய்திப் பத்திரிகைகளை வாசிப்போர் அவற்றின் தகவல், அறிவு உள்ளடக்கத்திற்காகவே அவற்றை வாசிக்கின்றனர் என்று தெளிவாகின்றது.

தகவலை அணுகுவதில் அசமத்துவம் நிலவுவது போலவே கிடை

க்கக்கூடிய தகவலை சரியான முறையில் பயன்படுத்துவதற்கான ஆற்றல்களும் சாதனங்களும் தனிக் குழுக்களும் நாடுகளுக்கு மிடையில் வேறுபடுகின்றன ஒரு சிலரால் தோற்றுவிக்கப்படும் அறிவினைப் பலருக்குப் பரப்பும் ஒரே ஆரம்பகால சாதனம் நூலகங்களே. இந்த நூலகங்கள் புத்தகங்களினதும், கையெழுத்துப் பிரதிகளினதும் சேமிப்பிடமாகத் திகழ்ந்ததோடு அவை ஏனைய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளைப் போன்றே கோயில்கள், மடாலயங்கள் அரச சபைகளை மையமாகக் கொண்டே அபிவிருத்தியடைந்தன. பாடரீதியான வகைப்படுத்தல்கள் இருக்கவில்லை. பிற்காலத்தில் தோன்றிய பாடரீதியான வகைப்படுத்தலும் பொருளடக்கத்தை விடவும் சுற்றுடலிலிருந்தே எழுந்தன. எனவே கோயில்களையும் மடாலயங்களையும் சார்ந்து நின்ற வாசிகசாலைகள் அதே முறையில் தொடர்ந்து வளர்ச்சி கண்டன. இவ்வகையின் உதாரணங்களை நாம் இலங்கையின் மகாவிகாரையுடன் இணைந்த புராதன சின்னங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம். நூற்றுண்டுகளில் கல்வித் துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்களின் நூலகங்கள் விருத்தியுற்றன. கற்றறிந்த பணக்காரர்களால் பேணப்பட்டு வந்த நூலகங்கள் பின்னர் அவர்களால் விற்கப்பட்டு அல்லது மரணசாசனம் மூலம் அன்பளிக்கப்பட்டு அரச நூலகங்களாக அல்லது மாநகர சபை நூலகங்களாக மாறுவதற்கான கருவாக அமைந்தன. சால் டிகோசிஹேநியா, லெனின் அரச நூலகம் போன்ற ரஷ்யாவிலுள்ள நூலகங்களும், பிரிட்டனிலுள்ள பிரிட்டிஷ் நூதனசாலை நூலகமும் பிரான்ஸிலுள்ள பிபிலோத்கி நசனேல் டி பிரான்ஸி நூலகமும் இத்தகைய முறையில் அபிவிருத்தி கண்ட நூலகங்களுள் சிலவாகும்.

பெரும்பாலான இந்நூலகங்களை நூலகங்கள் என்பதை விட புத்தக சேமிப்புக்குதங்கள் எனலாம். இவற்றின் மேப்புகள் பொதுவானவை. 19 ம் நூற்றுண்டளவில் ஒரு குறிப்பிட்ட பாவனையாளருக்குச் சேவையாற்றுவதற்கென அபிவிருத்தியுற்ற விசேட நூலகங்கள் தோன்றின. கைத்தொழில் புரட்சியுடன் இந்நூலகங்கள் கைத்தொழில் பிராந்தியங்களிலும் அரசாங்க திணைக்களங்களிலும் விஞ்ஞான நிறுவகங்

## சோசலிஸ நாடுகளில் பொதுத்தொடர்பு சாதனம்

சோசலிஸ நாடுகளில் பொதுத் தொடர்பு சாதனங்களை மேம்படுத்துதல் சமூகத்தின் வர்க்க அடிப்படையின் பகுப்பாய்விலும் ஆட்சிக்குழுவினரினால் ஒரு கட்டுப்பாட்டு முறையாக பயன்படுத்தப்படுவதிலுமே ஆரம்பிப்பதாகக் கூறப்படுகிறது. இதை விளக்குவதற்கு இந்நாடுகளில் புரட்சியைக் கொண்டுவருவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சில உபாயங்களுக்கு நாம் ஓரளவு மீள வேண்டும். எல்லாத் துறைகளிலும் முதலாளித்துவ கட்டுப்பாடு அன்று நிலவியதாக உணரப்பட்டதன் காரணமாக முன்னணிப் படையினரைக் கொண்ட பலம் வாய்ந்த தலைமையினடிப்படையில் மிக உயர்ந்த ஒழுக்கக் கட்டுப்பாடுடைய கட்சி யொன்றே நாட்டை புரட்சிக்கு இட்டுச் செல்ல வேண்டும் என லெனின் சித்தாந்தம் நிறுவினார். போராட்டத்தில் சிந்தனைகளினதும் அறிஞர்களினதும் பங்கினை லெனின் வலியுறுத்தினர். சோசலிஸ மனோ உணர்வினை அவர்களுக்கு (தொழிலாளர்களுக்கு) வெளியிலிருந்தே கொண்டு வரவேண்டும். உழைக்கும் வர்க்கம் தனது சொந்த முயற்சிகளால் தொழிற்சங்க உணர்வினை மாத்திரமே விருத்தி செய்ய முடியும்'' என அவர் மேலும் கூறினர். ஒழுங்கமைப்பின் அவசியத்தையும் முன்னணிப் படைக் கோட்பாட்டினையும் லெனின வலியுறுத்தினர். கட்சியிலிருந்து மிகக் கவனமாகத் தெரிவு செய்யப்பட்ட புரட்சியையே தொழிலாகக் கொள்ளும் மனோ உணர்வுடைய ஒரு சிறு குழுவினரால் அமைக்கப்பட்ட ஒரு சிறு முன்னணிப் படை புரட்சிச் சிந்தனையினதும் செயலினதும் மையமாக அமையலாம். சகல துறைகளையும் அளாவி நிற்கும் முதலாளித்துவ அமைப்பு முறையை முறியடிப்பதற்கு இத்தகைய ஒரு தாபன அமைப்பு அவசியமென உணரப்பட்டது.

இந்தப் பின்னணியிலே தான் நாம் சோசலிஸ நாடுகளில் பொதுத் தொடர்பு சாதனங்களை நோக்க வேண்டும். மக்களுக்கும் புரட்சிக் கட்சிக்கு மிடையிலான ஒரு தொடர்பு ஊடகமாகவே பொதுத் தொடர்பு சாதனங்கள் பெரும்பாலும் கருதப்படுகின்றன. பத்திரிகை பற்றிக் குறிப்பிடுகையில் லெனின் ''கூட்டுப் பிரசாரகர், கிளர்ச்சியாளர், அமைப்பாளர்'' என்ருர். ஸ்டாலின் இது பற்றிக் கூறுகையில் ''மக்களுக்கும் கட்சிக்கு மிடையிலான உந்துவிசை) என்ருர். அச்சடித்த செய்திப் பத்திரிகைகள் 1000 சுவரொட்டி செய்திப் பத்திரிகைகளாலும் சித்திர செய்திப் பத்திரிகைகளாலும், மாற்றீடு செய்யப்பட்டன. கையெழுத்து அல்லது தட்டச்சுப் பத்திரிகைகள் தொழிற்சாலைகளின் அறிவித்தல் பலகைகளிலும், மற்றும் முக்கிய பொதுத் தொடர்பு நிலைகளிலும் போடப்பட்டன. தொழிற்சாலைகளின் உற்பத்தி நடவடிக்கைகள், உள்ளூர் மட்டச் சூழ்நிலைகள் பற்றிய செய்திகள் என்பவற்றை சுவர்ச் செய்திப் பத்திரிகைகள் பிரசுரித்ததோடு கடின உழைப்பாளிகளைப் பாராட்டியும், சோம்பேறிகளைக் கண்டித்தும் எழுதியது. உள்ளூர் கட்சி நிருவாகிகளால் தீவிர கண்காணிப்புச் செய்யப்பட்டு பகுதிநேர ஆசிரியர்களால் சுவர்ப் பத்திரிகைகள் கருவுருப்படுத்தப்படுகின்றன. இந்த ஆரம்ப கால முன்னணிக் கோட்பாடும், மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய மனோ உணர்வுக் கருவியாக பொதுத் தொடர்புச் சாதனத்தைப் பயன்படுத்துதலும் சில சோசலிஸ நாடுகளில் சுமார் அரை நூற்றுண்டுக்குப் பின்னரும் இன்னமும் அதே உருவில் நிலைத்து நிற்கின்றன. அதாவது அந்நாடுகளில் முதலாளித்துவ எதிர்ச் சூழ்நிலை அகற்றப்பட்ட பின்னரும் நிலைத்து நிற்கின்றது.

இத்தகைய இறுக்கமான கட்டுப்பாட்டுத் தோற்றம் காரணமாக பிரதான பிரச்சினைகளில் (சித்தாந்தக் கண்ணேக்கில் விவாதிக்கப்பட்டாலும் கூட) ஓரளவு ஒரு தலைப்பட்ச தீர்மானம் நிறைவேற்றப்படுவதாக உணரப்படுகிறது. எனவே ஒரே சமூக-பொருளாதார நிகழ்வுகளுக்கு வெவ்வேறு நாடுகளின் வெவ்வேறு பொதுத் தொடர்பு சாதனங்கள், குறிப்பிட்ட கட்சிக் கண்ணேட்டத்தில், ஆயினும் ஒரே மார்க்ஸிஸ - லெனினிஸ சித்தாந்த அடிப்படையில் வெவ்வேறு விளக்கங்கள் கொடுக்கின்றன. பொதுத் தொடர்பு சாதனங்களின் இந்த முரண்பட்ட கருத்து வெளிப்பாட்டை அவை இலகுவில் அடையாளம் கண்டு கொள்வதில்லை. ஆனல் மேற்படி கட்சியின் தலைமைத்துவத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மேற்படி பொதுத் தொடர்பு சாதனங்களும் தமது கருத்துக்களை மாற்றிக் கொள்கின்றன.

இதனுல், 1950 ல் குருஷேவும் தோழர்களும் பதவிக்கு வந்த வேளையில் ஸ்டாலினின் கருத்துக்கள் இகழ்வு படுத்தப்பட்டது போன்ற பாரம்பரிய திருப்பங்களையும் பொதுத் தொடர்பு சாதனங்களின் மூலம் காணலாம். கடந்த ஒரு வருடகாலமாக சீனப் பிரசுரமான ரிவின்ஹுவாவைப் படிக்கும் ஆவல் மிக்க வாசகர்கள் அது தனது கடந்தகால கருத்தோட்டங்களிலிருந்து பின்னேக்கிச் செல்வதை அவதானிக்காமலிருக்க முடியாது. இது சீனவில் இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் மாற்றங்களை யொட்டி மாறுபடுவதையும் அவதானிக்கலாம். இது செங்கியாவோ சிங்கை வெளியேற்றியதுடன் வலது நோக்கிச் சென்ற குழுவினருக்கு எதிரான பிரச்சாரத்தைத் தோற்றுவித்த முக்கிய நிகழ்ச்சியான ''டியன் மியன் சதுக்க சம்பவம்'' (என சீனர்கள் அன்று பெயரிட்ட சம்பவம்) முதல் வேறுபடுகின்றது. செங்கியாவோசிங்கினுலும், கூ என்லாயினுலும் வகிக்கப்பட்ட பல பதவி நிலைகளை ஒதுக்கித் தர வேண்டுமெனவும், அவர்களது கொள்கைகள் குறித்தும் ''நால்வர்'' கொண்ட கோஷ்டியினர் விடுக்கும் கோரிக்கைகளுக்கு எதிரான கடுமையான கண்டனத் தாக்குதல்கள் இப்பொழுது சீனப் பொதுத் தொடர்பு சாதனங்களில் எதிரொலிக்கின்றன. ஒரு வருடத்துக்கு முன் இப்பொழுதுத் தொடர்பு சாதனங்கள் தாம் வெளியிட்ட அதே கருத்துக்களை இப்பொழுது வெளியிடுவதில்லை. அவ்வேளையில் அவை தற்போது வெளியிட்ட கருத்துக்களை வெளியிட்டதுமில்லை. எனவே தெளிவாகவே சோசலிஸ நாடுகளின் பொதுத் தொடர்பு சாதனங்களில் ஒரு தன்னிச்சைப் போக்கு குடி கொண்டுள்ளது. பொதுத் தொடர்பு சாதனங்களில் முதலாளித்துவ கட்டுப்பாடுகளை சோசலிஸ நாடுகள் வெற்றி கொண்டுள்ள போதிலும் அதனிடத்தில் மிக உயர்ந்த மட்டத்திலான ஒரு தன்னிச்சைப் போக்கினை அமர்த்தியுள்ளது. எனவே இந் நாடுகளில் பொதுத் தொடர்பு சாதங்கள் பூரணத்துவமடைந்த கருவிகளாயில்லை. அவற்றில் அபிவிருத்தி காணப்பட வேண்டியது அவசியமாகும். ஆயினும் அபிவிருத்தி எத்திசை நோக்கியிருத்தல் வேண்டுமென்பது சூழ்நிலையில் தங்கியிருக்கும் ஒன்ருகும்.

களிலும் ஆராய்ச்சித் தாபனங்களிலும் அமைக்கப்பட்டதோடு நூலகங்கள் பெறும் புத்தகச் சேமிப்புக் குதங்கள் என்ற நிலை மாறுபட்டு ''அவை அறிவு பரப்பும்'' ஊற்றுக்கள் என்ற கோட்பாடு வலியுறுத்தப்பட்டது. பின்னர் அது துரிதமாக மாற்றமடையும் சமூக - பொருளாதார சுற்றுடலொன்றின் தகவல் பாவனையாளருக்கு தேவையான தகவல்களை வழங்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட தகவல் பரிமாற்ற மத்திய நிலையங்களாக அவ்விசேட நூலகங்கள் அமைந்தன.

ஒன்று அல்லது இரண்டு தசாப்தங்களுக்கு முன்தோற்றமெடுத்த சைபர்நெத்தியம் எனப்படும் யுகத்தின் தோற்றம் தரவுகளைச் சேமித்தல், தகவல் பரிமாற்றம் ஆகியவற்றின் தொழில் நுட்ப முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்து தரவு வங்கிகள், கம்பியூட்டர் மத்திய நிலையங்கள், தொலை நடைமுறை வேலைத் திட்டங்கள் என்பவற்றுக்கு வழிகோலின.

இன்று உலகில் தகவல் பரிமாற்ற சங்கிலியில் இவ்வனைத்து தகவல் பரிமாற்ற முறைகளும் சமமாக நிலை பெறுகின்றன. எவ்வாறாயினும் தற்போதைய தகவல் பரிமாற்ற முறையில் நிலவும் வேறுபாடுகள் இலகுவான தகவல் ஓட்டத்தையும், அதன் தரம், அளவு என்பவற்றையும் பாதிக்கின்றன.

அறிவுத்துறை நடவடிக்கைகள் மிகுந்த நீண்ட பாரம்பரியமுடைய நாடே இலங்கை. நூலகங்களின் வளர்ச்சியும் இந்த இலக்கியத்துறை நடவடிக்கையுடன் ஈடு கொடுக்கக் கூடியதாயிருந்தது. திரிபிடக புத்தகங்கள் எழுதப்பட ஆரம்பித்த 1 ம் நூற்றாண்டுடன் நூலகங்களும் வளர்ச்சி பெற ஆரம்பித்தன வெனக் கூறலாம். ஆனால் நூலகங்கள் பற்றிய நேரடிக் குறிப்புகள் பொலன்னறுவைக் காலத்திலேயே முதன் முதலாகக் கிடைக்கக் கூடியனவாயுள்ளன. பொலன்னறுவையில் இரண்டு நூலகங்களையும், உறுஹுணையில் 128 நூலகங்களையும் 1 ம் பராக்கிரபாகு மன்னன் கட்டியதாக சூலவம்சம் கூறுகிறது. இலக்கிய நடவடிக்கைகளும் அறிவுத்துறை நடவடிக்கைகளும் அடுத்த நூற்றாண்டுகளிலும் தொடர்நது நடைபெற்றன. ஆனால் 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரின் வருகையுடன் அறிவு ஆசனங்களான மடங்களும், நூலகங்களும் அழிக்கப்பட்டதுடன் புத்தகங்களும் எரிக்கப்பட்டன. அதிகம் இலக்கிய நடவடிக்கைகள் நிகழ்வுற்ற கோட்டே ராஜதானிக் காலம் இதன் காரணமாக அடுத்த இரு நூற்றாண்டுகளில் நிகழ்வுகளெதுவுமற்றுக் காணப்பட்டன.

1734 ல் சிங்கள அச்சகம் நிறுவப்பட்டதும் அச்சுத் தொழிலில் பத்திரிகை அறிமுகப்படுத்தப்பட்டதும் இலக்கியங்களதும், நூலகங்களதும் வளர்ச்சிக்கு புதிய திசை காட்டியது. 19 ம் நூற்றாண்டில் கிறித்தவ மதபிரசார நிறுவகங்கள் தமது மத பிரசார நடவடிக்கைகளுக்காகவும் கல்வி நோக்கங்களுக்காகவும் புத்தகங்களை பிரசுரிக்க ஆரம்பித்தன. இலக்கிய கல்வித்துறை நடவடிக்கைகளின் அதிகரிப்பும், பல்வேறு சங்கங்கள் நிறுவகங்கள் ஏற்படுத்தப்பட்டமையும் இதன் அபிவிருத்திக்கு மேலும் உதவின. ரோயல் ஆசியடிக் சங்கத்தின் இலங்கைக் கிளையின் நூலகமும் அரசாங்க ஓரியன்டல் நூலகமும் முறையே 1845 லும் 1870 லும் தாபிக்கப்பட்டன, பின்னையது கொழும்பு நூதனசாலை நூலகத்திற்கான கருவாக அமைந்தது.

19 ம் நூற்றாண்டில் சந்தா செலுத்தும் நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் பொது நூலகங்கள் அமைத்தல் ஆரம்பித்தன. கொழும்பு நூலகம் 1813 லும் புறக்கோட்டை நூலகம் 1829 லும் ஆரம்பிக்கப்பட்டதுடன் 1935 ல் அவை இரண்டும் கொழும்பு பொது நூலகமாக ஒன்றிணைக்கப்பட்டன. நூலகங்களின் வரலாற்றின் நவீன கட்டம் 1920 ல் பல்கலைக்கழக கல்லூரி நூலகம் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆரம்

(21ம் பக்கம் பார்க்க)

### இலங்கையில் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் (1975)

| பொருளடிப்படையிலான வகுப்பு | சிங்களம் | ஆங்கிலம் |
|---|---|---|
| கவிதை | 69 | — |
| சட்டம், பொது நிர்வாகம் சமூக நலன் | 9 | 46 |
| பௌதிகம், பொருளியல் | 54 | 32 |
| வரலாறு, புதை பொருளியல் | 14 | 11 |
| சமயம், சமயவியல் | 98 | 74 |
| புவியியல் | 5 | 1 |
| விவசாயம், காடு வளர்த்தல், பண்ணை | 7 | 23 |
| வைத்திய அறிவியல் | 6 | 29 |
| இயற்கை அறிவியல் | 7 | 14 |
| பாலனம், கணக்கியல் சந்தைப்படுத்தல் | 5 | 19 |
| தொழில்நுட்பவியல், கைத்தொழில் வர்த்தகம், கைப்பணி | 14 | 17 |
| இலக்கியம் | 36 | 2 |
| சமூகவியல், புள்ளிவிவரம் | 5 | 5 |
| கல்வி | 6 | 14 |
| நுண்கலை | 22 | 7 |
| சிறுவர் சஞ்சிகை | 14 | — |
| ஏனையவை* | 158 | 96 |
| *பாடசாலைச் சஞ்சிகைகள், மனையேடுகள் பொதுப் பத்திரிகைகள் | 529 | 390 |

தகவல்: தேசிய நூதன சாலைத் திணைக்களம்

### இலங்கையில் உள்ள புதினப் பத்திரிகைகள்

1976 மார்ச்சு மாதம் வெளியிடப்பட்டனவற்றின் எண்ணிக்கை

| | தினசரி | வாரம் | இரு வாரம் | மாதம் | ஒழுங்கற்றவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| சிங்களம் | 6 | 25 | 7 | 15 | 8 | 61 |
| தமிழ் | 4 | 7 | — | 5 | 4 | 20 |
| ஆங்கிலம் | 5 | 7 | 1 | 6 | — | 19 |
| இரு மொழி | — | 2 | — | 1 | — | 3 |
| மொத்தம் | 15 | 41 | 8 | 27 | 12 | 103 |

தகவல்: தேசிய சுவடிக்கூட திணைக்களம்

*1976 மார்ச் இறுதிவரை தேசிய திணைக்களத்தில் 129 புதினப் பத்திரிகைகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றுள் சிங்கள வெளியீடுகள் 76, தமிழ் 25, ஆங்கிலம் 25; இரு மொழிகளில் 3. அவற்றுள் 26 வெளியிடப்படுவதில்லைபோல் தோன்றுகின்றது. ஏனைய 103 உம் மொழி அடிப்படையில் மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

# ஒரு புதிய உலக செய்தித் தொடர்பு – தகவல் கட்டுக்கோப்பு

— சக்கரவர்த்தி ராகவன்

ஒரு புதிய செய்தித் தொடர்பு — தகவற் கட்டுக்கோப்பு என்றால் என்ன அர்த்தம் என்பதைப் பற்றியும் அதன் உட்பொருள்கள் என்ன என்பதைப் பற்றியும் எத்தகைய தெளிவான கருத்துருவாக்கமும் நிர்ணயமும் இல்லை. இத்தகைய புதியதொரு கட்டுக்கோப்பு என்பது, வெகுஜன தகவற் சாதனங்கள் மேற்கத்திய கைத்தொழில் மயமான நாடுகளைச் சேர்ந்த ஒரு சில பல்தேசிய ஸ்தாபனங்களது ஆதிக்கத்தின் கீழ் இருந்துவரும் தற்போதைய நிலைமையில் ஒரு முன்னேற்றத்தைப் பிரதிபலிக்க வேண்டுமென்றே கருதப்படுகிறதென்பது தெளிவு.

தற்போதுள்ள கட்டுக்கோப்பின் அடிப்படை, நவீன கைத்தொழில் மயமான நாடொன்றில் வெகுஜன தகவற்சாதனங்கள் ஆற்றும் பங்காகும். தொழில் நுட்பவியல் முன்னேற்றங்களின் பயனாக அளவிலும் சக்தியிலும் முன்னெப்போதுமில்லாதவாறு வளர்ச்சியடைந்துள்ள வெகுஜன தகவற் சாதனங்கள் தங்கள் பிரதான பணியில், என்ன இருந்து வருகிறது, எது முக்கியமானது, உலகத்துக்கு எது சரியானது என்பதை நாம் அறிந்து கொள்ளும்மத்திய பாதைகளாக விளங்குகின்றன. அவை எங்கள் கலாசாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதுடன், அதனைப் பிரதிபலித்துப் பரப்பவும் செய்கின்றன. இன்று நிலவும் பொருளாதார ஒழுங்கின் அடிப்படைக் கலாசாரமானது, தனித்தன்மைகளைக் கொண்ட ஓர் அலாதியான பொருள் என்ற முறையிலும் மனித மதிப்புக்களின் களஞ்சியம் என்ற முறையிலும் தனி நபருக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவமாகும். எனினும், இதற்கு நேர்முரணாக வெகுஜன தகவற் சாதனங்கள் ஒவ்வொரு தனித்தனி மனிதனினதும் சுயமான மதிப்பை வலியுறுத்துவது போலத் தோன்றும் அதே வேளையில், பொதுவாக மனித வல்லமையையும் பெறுமதியையும் குறைத்து மதிப்பிடும் ஒரு நோக்கின் வாயிலாக இதனைப் பற்றிப் பொய்யான ஓர் உணர்வைச் சிருஷ்டித்துள்ளன.

உதாரணமாக அமெரிக்க டெலிவிஷன் பெருந்தொகையான ஆனால் திட்டவட்டமான இரசிகர்களை நோக்கி ஏவப்படுகிறது என்பதும், அமெரிக்கா ஒரு ஜனநாயக நாடு (அதன் தலைவர்கள் மக்களின் விருப்பப்படி செயலாற்றுகிறார்கள்); அதன் பொருளாதாரம் (வழங்கல் — தேவை நியதிகளுக்குக் கட்டுப்பட்ட) தடையிலாச் சந்தைப் போட்டியை அடிப்படையாகக் கொண்டது; கடவுள் உயிருடனிருப்பதும் அவர் வெண்ணிறமாகவும் ஆணாகவும் அமெரிக்காவின் ஆதரவாளராகவுமிருப்பதும் மிகப் பெரும்பாலும் சாத்தியம் என்ற நம்பிக்கையை வலுப்படுத்துவதே அதன் சங்கேதப் பணியாகும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. (கடவுள் இருக்கிறார் என்பது நீங்கலாக) இந்த உண்மைகள் நிரூபிக்கத்தக்க பொய்களாகும் என்ற உண்மையே டெலிவிஷன் உலகில் தோன்றாத உண்மையாகும். வெண்ணிறமாகவும் ஆண்களாகவும் ஆனால் மிகச் சிறு தொகையினராகிய தெரிவு செய்யப்பட்டவர்களின் கைகளில் செல்வமும் அதிகாரமும் குவிக்கப்பட்டிருக்கும் உண்மை; மிக முக்கியமான அரசியல் பிரச்சினைகளை முடிவு செய்வதில் 'ஜனநாயக' முறையின் அர்த்தமற்ற பொருந்தாத் தன்மை எனும் உண்மை, முடிவின்றி உற்பத்தியை விரிவாக்கும் கட்டளைகளால் நுகர்வைக் கட்டுப்படுத்துவதும் நியாயமற்ற முறையில் தந்திரமாக நடப்பிப்பதும்; வெகுஜன தகவற் சாதனங்களால் வெளியிடப்படாத உண்மைகள் இவை தாம்.

அமெரிக்க டெலிவிஷனைப் பொறுத்துள்ள உண்மை, மையத்திலிருந்து சுற்றுவட்டத்துக்கு அனுப்பப்படும் தகவல்களால் சிருஷ்டிக்கப்படும் மனக் கருத்துக்கு மேலும் பொருந்துவதாகும். கைத்தொழில் மயமான உலகுக்குள்ளே, ஒரு போலி அபிவிருத்தி முறையின் மூலம் வட அமெரிக்க சமூகம் சாதிக்கப்பட வேண்டிய இறுதி இலட்சியமாகச் சித்திரிக்கப்படுகிறது; மையத்திலுள்ளதிலிருந்தும் வித்தியாசமாகச் சுற்று வட்டத்திலுள்ள ஒவ்வொன்றும் ஏளனத்துக்குரியதாயிருக்கிறது.

இது அச் சமூகத்தின் மதிப்பு முறையிலிருந்தும் தகைமையையும் சாதனையையும் தீர்மானிப்பதற்குரிய அதன் அளவுகோல்களிலிருந்தும் பிறக்கின்றது.

மேலும், தற்போதுள்ள ஒழுங்கு — நுகர்வோர் சமூகமும் விரிவாகிவரும் கைத்தொழில் முறையும் — உயிர் பிழைத்திருப்பது, சமூக, பொருளாதார, அரசியல் உண்மைகளைப் பற்றிப் பொய்யான ஓர் உணர்வை வளர்ப்பதைப் பொறுத்திருக்கிறது. தற்போதுள்ள ஒழுங்கு இடையாறாது விரிவாகிவரும் உற்பத்தியோடும் நுகர்வுடனும் தொடர்ந்து ஸ்திரமாக இருந்து வரவேண்டுமானால், இந்தப் பொய்யான நிலை அத்தியாவசியமாகும். எதிர்பார்க்கைகள் ஒரு நியாயமான மட்டத்தில் நிறுத்தப்பட வேண்டும்; தேவை பொருத்தமான வழிகளில் செலுத்தப்பட வேண்டும். இத்தகைய ஒரு முறைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவோர் பொருளாதார ரீதியிலும் சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் வளைந்து கொடுக்கக் கூடிய குடிமக்கள்; அம் முறைக்குள்ளே கல்வியினதும் தகவலினதும் பணி இத்தகைய குடிமக்களைச் சிருஷ்டித்துப் பராமரிப்பதாகும்.

நவீன கைத்தொழில் மயமான சமுதாயத்தில் தனி நபருக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தைப் பூரணமாக்குவது தட்டுப்பாடு எனும் கருத்தாகும். எது தட்டுப்பாடாயுள்ளதோ அதற்குச் சந்தையில் உயர்ந்த மதிப்புண்டு; அது விற்கப்படத்தக்கது; அதிக இலாபத்தைத் தருவது அதைக் கட்டுப்படுத்தவல்ல தனி நபரோ அல்லது கோஷ்டியோ அதிக வெற்றி பெறுவதோடு இறுதியில் அதிக சக்தியும் பெறுகிறார். இக் கருத்து இயற்கை மூல வளங்களுக்கும் சரக்குகளுக்கும் சேவைகளுக்கும், ஏன் தகவலுக்கும் அறிவுக்கும் கூடப் பொருந்தும்.

கைத்தொழில் மயமான சமுதாயத்தின் இந்தக் கருத்துக்களும் செயல் முறைகளும் தற்போதுள்ள சர்வதேச செய்தித் தொடர்பு — தகவற் கட்டுக்கோப்பின் வாயிலாகச் சுற்று வட்டத்துக்கும் பரப்பப்படுகின்றன. நாட்டுக்குள்ளே, பல நாடுகளுக்கிடையேயும் கூட, தனி நபர் திறமைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் உடைத்தாயிருக்கும் ஒரு வினைத்திறன், தனி நபரின் திறமைக்குரிய ஓர் அளவு கோலாகும் தகுதி பெறாது. கைத்தொழில் சமுதாயத்தின் மதிப்பு முறை, ஒற்றுமைப்படுத்தும் வினைத் திறன்களை விட வித்தியாசப்படுத்திக் காட்டும் வினைத்திறன்களையே வளர்க்கின்றது.

அதனால்தான், தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும், தகவலைப் பற்றிய தற்போதைய கருத்து, எது ஒற்றுமைப்படுத்துகிறதோ அல்லது எது பொதுவாக உள்ளதோ அதற்கு உயர்ந்த பெறுமதி அளிக்காது. எது வழி பிறழ்ந்து செல்கின்றதோ அல்லது எது தட்டுப்பாடாக உள்ளதோ அதற்கு உயர்ந்த பெறுமதி வழங்குகின்றது. இதனால்தான் மனிதன் நாயைக் கடித்தால் புதினம் என்றும் நாய் மனிதனைக் கடித்தால் புதினமல்லவென்றும் கருதப்படுகிறது.

தனியொரு கலாசாரத்தைக் கொண்ட ஒரு நாட்டுக்கு இது பொருந்துவதோடு, மூன்றாம் உலக நாடுகளில் நிலவும் பல்வகைக் கலாசாரங்களுக்கும் மேலும் பொருந்துவதாயுள்ளது.

சர்வதேச செய்தித் தொடர்புக்கும் தகவலுக்கும் தற்போதுள்ள கட்டுக்கோப்புகள் — மையத்தினால் கட்டுப்படுத்தப்படும் இவை யாவும் — இரு வேலைகளைச் செய்கின்றன. முதலாவதாக, அவை மையத்தைப் பற்றிப் பொய்யான உணர்வை அல்லது அபிப்பிராயத்தைச் சுற்றுவட்டத்துக்குள்ளே பரப்புகின்றன. அதைப் பரப்புபவர்கள் அதிலேயே வளர்க்கப்பட்டிருப்பதனால் அதை நம்புகிறார்கள் என்பது அதன் பொய்த் தன்மையை எவ்விதத்திலும் குறைத்துவிடவில்லை. இரண்டாவதாக, அவர்கள் மூன்றாம் உலகிலுள்ள கலாசாரங்களில் எது வழி பிறழ்ந்துள்ளது என்பதைத் தேடிப் பார்த்து — ஏனெனில் அது மட்டுமே விற்கப்படத்தக்கது — மூன்றாம் உலகின் மற்றப் பகுதிகளுக்கும் மையத்துக்கும் பரப்புகிறார்கள்.

ஒரு மூன்றாவது வேலையும் செய்யப்படுகிறது: அஃதாவது, சுற்றுவட்டத்தைப் பற்றி மையத்துக்கு அனுப்பப்படும் தகவல் திரட்டாகும். நவீன அதிகாரக் கட்டுக்கோப்புகள் தகவல்களை மையத்திலிருந்து சுற்றுவட்டத்துக்கு அனுப்புவது மாத்திரமன்றி, சுற்றுவட்டத்தில் உருப்பெறும் அபிப்பிராயங்கள் மாறுதல்கள் அல்லது புதிய நிலைமைகளைப் பற்றிய தகவல்களையும் மையத்துக்கு அனுப்ப ஏற்பாடு செய்கின்றன. இது மூன்றாம் உலகிலுள்ள 'சூழலைக் கண்காணிக்கும்' ஒரு முறை — மையத்தின் அதிகாரத்தில் தாக்கம் ஏற்படுத்தக் கூடிய மூன்றாம் உலகிலுள்ள நிலைமைகளில் ஏற்படும் பல்வேறு மாறுதல்களை உற்றுக் கவனிப்பதாகும். சுற்றுவட்டத்தைப் பற்றி அனுப்பப்படும் இத்தகவல் திரட்டு மையத்திலுள்ள அரசாங்கங்களினதும் முகாமைகளினதும் நன்மைக்காகும். எனினும், மையத்திலிருந்து சுற்றுவட்டத்துக்கு இதேபோன்ற சேவையொன்று கிடைக்கக் கூடியதாயில்லை.

இதெல்லாம் 'தகவல் சுதந்திரம்' என்ற குடையின் கீழ் நடத்தப்படுகிறது.

இச் சந்தர்ப்பத்தில், ஒரு புதிய சர்வதேச செய்தித் தொடர்பு — தகவற் கட்டுக்கோப்பை அமைப்பதன் முக்கியத்துவமும் அவசியமும், புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கை அமைப்பதன் அவசியத்துக்கு மேற்பட்டதாகும். உலகத்திலுள்ள பல்வகைப்பட்ட கலாசாரங்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றை அழித்து மேற்கத்திய (கைத்தொழில் மயமான) உலகின் ஒற்றைக் கலாசாரத்தில் மீண்டும் உருவாக்குவதைவிட அவற்றை ஆதரித்து வளர்ப்பதற்கும் புதிய கட்டுக்கோப்பு மூலாதாரமாகும்.

# தகவலும் அபிவிருத்தியும்

அபிவிருத்தி பற்றிய உண்மைகளையும் இவ்வுண்மைகளின் மிக ஆழமான அர்த்தபுஷ்டியையும் உள்நாட்டிலும், சர்வதேசரீதியிலும் அறிந்து கொள்ளப் பிரஜைகள் எல்லோருக்கும் உரிமையுண்டு. நாம் கண்டுள்ளது போல், தற்போதுள்ள நிலைமைகளில், தகவலும் கல்வியும் சர்வதேசத் துறையில் தனது சொந்த நோக்கங்களுக்குப் பொதுஜன அபிப்பிராயத்தை உபாயமாகக் காரியப்படுத்தும் அதிகாரக் கட்டுக்கோப்பினால் பெரும்பாலும் ஏகபோக உரிமையாகக் கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேசச் செய்தித் தொடர்புகளில் கிட்டத்தட்ட ஏகபோக உரிமையைக் கொண்டுள்ளமை, தற்போதுள்ள தகவல் அமைப்பின் ஓர் அடிப்படை அம்சமாக விளங்குகிறது.

இன்று வளர்முக நாடுகளிலுள்ள பிரச்சினை, அடிப்படையில், கைத்தொழில் மயமான நாடுகளின் பிரச்சினையிலிருந்து வேறுபட்டதாகும். அமெரிக்காவில், பிரிட்டனில் அல்லது பிரான்ஸில் தகவல் அமைச்சுகள் தங்களுடைய முக்கியத்துவத்தில் பெரும் பகுதியை இழந்துவிட்டன. அவை அரசாங்க அமைப்பில் ஒரு சிறிய பங்கை மட்டுமே ஆற்றுகின்றன. உதாரணமாக, தனியாருக்குச் சொந்தமான செய்தித் தொடர்புச் சாதனங்கள் இந் நாடுகளிலுள்ள எழுத்து மூலமான பத்திரிகைகளில் பெரும் பகுதியாக அமைந்துள்ளன. இந்தத் தனியார் ஸ்தாபனங்கள் செலுத்தும் அதிகாரமும் செல்வாக்கும் எவ்வளவோ அதிகமாயிருப்பதால், இந்நாடுகளில் அரசாங்கத் தலையீடு சுதந்திரம் பற்றிய எண்ணக் கருத்துக்களில் தலையிடுவதாகுமென்றே அடிக்கடி கருதப்படுகிறது. இவ் வெண்ணக் கருத்துக்கள் பெரும்பாலும் உண்மையான கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துடன் தொடர்புடையவையல்ல; (கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், உண்மையில். எவ்வித கட்டுப்பாடுமன்ற நிலையில் இருந்துவர முடியாதென நாம் எடுத்துக் காட்டியுள்ளோம்). ஆனால் சுதந்திரம் பற்றிய மன எண்ணங்களைக் கோடிட்டுக் காட்டுவதற்காகவும் தனிப்பட்ட முதலாளித்துவ நலன்களுக்காகவுமே தெரிவிக்கப்படுகின்றன.

அநேக காரணங்களுக்காக வளர்முக நாடுகளில் நிலைமை வேறுவிதமாயிருக்கிறது. முதலாவதாக, வானொலி வளர்முக உலகிலே இன்றும் முதல் முக்கிய ஸ்தானத்தையே வகித்து வருகிறது; பெரும்பாலும் அரசாங்கக் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது, இந்நாடுகளிலுள்ள அரசாங்கம் அடிக்கடி வெளிநாட்டு ஸ்தாபனங்களால் நடப்பிக்கப்படும் ஒரு சிலரைக் கொண்ட ஆளும் வர்க்கத்தின் கைகளில் இருந்து வருவதாலும் வானொலி அடிக்கடி அரசாங்கத்துக்குச் சொந்தமான ஏகபோக உரிமைப் பொருளாக இருந்து வருவதாலும் வானொலியில் வாக்கலங்கார உபாயங்களைக் கையாண்டு உண்மையான கருத்து வெளிப்பாட்டை அடக்கி யொடுக்குவதே பிரஸ்தாப வெளிநாட்டு ஸ்தாபனங்களின் உண்மையான நோக்கமாதலின் மக்களின் எழுத்தறிவு விகிதம் குறைவாயுள்ளதனையொட்டி எழும் பிரச்சினைகளைச் சமாளிப்பது அவர்களுக்குச் சாத்தியமாகின்றது. மேலும், வளர்முக நாடுகளிலுள்ள எழுத்து மூலமான பத்திரிகைகள், பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு, நவீன இயந்திர சாதனங்களில்லாமை, உயர்வான உற்பத்திச் செலவுகள் போன்ற அநேக பிரச்னைகளை எதிர் நோக்குகின்றன. இதனால் பத்திரிகைகள் அடிக்கடி சாதாரண மக்களால் பெற முடியாமற் போகின்றன.

எனினும், மிக முக்கியமான தென்னவெனில், தகவலின் பங்களிப்பேயாகும். செய்திகளைத் தருவது, பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் பொழுதுபோக்க உதவுவது கல்வியூட்டுவது, அபிவிருத்தியைத் தூண்டுவது அல்லது அபிவிருத்திக்கு நோக்கங் கொடுத்து ஊக்குவிப்பது ஆகிய பரந்த கடமைகளைத் தகவல் ஆற்றுவதாக இப்பொழுது பொதுவாக அங்கீகரிக்கப்படுகிறது. எனினும், அந்த அபிவிருத்தியில் எந்த அம்சங்களைப் பற்றிய செய்திகள் அறிவிக்கப்படாமல் விடப்படுகின்றனவோ அவையே ''அபிவிருத்திச் செய்தித் தொடர்பு முறை'' எனப்படுவதில் அடங்கியுள்ள பெரும் பகுதியைப் பற்றிய மறைக்கப்பட்ட செய்தியாக இருந்து வருகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் கல்வியும் நோக்கத்துடன் கூடிய ஊக்குவிப்பும் அல்லது தூண்டுதலும் அரசியல், பொருளாதாரக் காரணங்களுக்கா ஒப்பியல் ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன. புதிதாக வெளிப்படும் நாடுகள் அல்லது அதைப் பார்க்கிலும் அந்நாடுகளின் அரசாங்கங்கள் பொருளாதார அபிவிருத்தியில் தாங்கள் முதலிடமளிக்க வேண்டியவைபற்றி இடையறாது முடிவு செய்ய வேண்டிய நிலையில் இருந்துள்ளன. ஏனென்றால், அவற்றிற்குக் கிடைக்கக்கூடியதாயுள்ள மொத்த நிதிகள் பொதுவாக முழு நாட்டினதும் மொத்தத் தேவைகளை விடக் குறைவாகவே இருந்தன.

மூன்றாம் உலக நாடுகள் தங்களுடைய மக்களுக்கு இப்பொழுதுள்ளதைவிட மேலான வாழ்க்கையைச் சாதிப்பதற்காகத் துரிதமான பொருளாதார அபிவிருத்தி காணும் இலட்சியத்தைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளன. இந் நாடுகளில் பெரும்பாலானவை தங்களுடைய பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்கேற்ற கட்டுக்கோப்பை ஏற்படுத்துவதற்காகப் பொருளாதார வேலைத் திட்டங்களைத் தயாரித்துள்ளன. (இத்தகைய திட்டங்கள் அடிக்கடி கடதாசித் திட்டங்களாகவே இருந்து வருகின்றனவென்பது யாவருமறிந்த விஷயம்.) பொருளாதார அபிவிருத்தியின் இந்த ஆரம்பக் கட்டத்திலேதான் இன்றைய வெகுஜன செய்தித் தொடர்பு முறை ஒருவிசேஷ பங்கைப் பொறுப்பேற்கின்றது. ஏனெனில், வெகுஜன தொடர்புச் சாதனங்களால் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவையான நீண்ட, மெதுவான சமூக உருமாற்றத்தைத் துரிதமாக்கவும் இலகுவாக்கவும், குறிப்பாக இந்தத் தேசிய முயற்சிக்குப் பின்பலமாக மனித வளங்களைத் திரட்டும் பணியை விரைவுபடுத்தவும் சுலபமாக்கவும் முடியும்.

முடிவு செய்யும் அத்தியாவசிய முறை மிக விரிவாகப் பரப்பப்படுவதவசியம் என்பதையும் வளர்முக நாடுகள் உணர்ந்துள்ளன. தகவல்கள் தலைவர்களுக்கும் கிராமத்துக்குமிடையே மேலும் கீழும் தங்குதடையின்றித் தாராளமாகப் பரவுவது மட்டுமன்றிப் பக்கத்திலிருந்தும் பரவுவதவசியமாகும்; மக்கள் தங்களுக்கிடையே விஷயங்களைப் பற்றி உரையாடித் தங்கள் சொந்தக் குழுக் கூட்டங்களில் முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்

யும்வேலைக் கடமைக்குப் பெரும்பாலும் வெகுஜன செய்தித் தொடர்புச் சாதனங்களால் மட்டுமே உதவ முடியும். ஏனெனில், வெகுஜன செய்தித் தொடர்புச் சாதனங்களே சகல மட்டங்களிலும் நிகழும் விவாதங்களுக்கு உரிய தகவல்களைக் கொடுத்து, பிரச்சினைகளைத் தெளிவாக்குவதற்கு உதவ முடியும். வெகுஜன செய்தித் தொடர்புச் சாதனங்கள் இந் நாடுகளின் சமூக, பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கும் மக்களின் அபிலாஷைகளுக்கும் இசைவாகச் செயலாற்றினாலன்றி இந் நாடுகளின் அபிவிருத்தி முறைக்குத் திட்டமான உதவி நல்க முடியாது.

வளர்முக நாடுகளின் கட்டுக்கோப்பும் அவற்றிற்கும் வளர்ச்சி பெற்ற நாடுகளுக்குமிடையே யிருந்து வரும் பரஸ்பர உறவும் அமைந்திருக்கும் விதத்தைக் கவனிக்குமிடத்து, வளர்முக நாடுகளிலுள்ள தகவல் - பிரசாரப் பிரச்சினைகளை வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ, சோஷலிஸ்ட் நாடுகளிலுள்ள தகவல் - பிரசாரப் பிரச்சினைகளை நோக்கும் அதே முறையில் நோக்க முடியாதென்பது தெளிவு. அபிவிருத்திப் பணி மீது தகவல்கள் பிரயோகிக்கக் கூடிய அனுகூலமான தாக்கம் தெளிவானது. இத் தாக்கத்தைச் சாதிப்பதிலுள்ள தடைகளும் இப்பொழுது மிகத் தெளிவாகத் தெரிகின்றன. சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும் ஒரு புதிய தகவல் அமைப்பு அமைக்கப்படுவதும் ''தற்போது இடத்துக்கிடம் அனுப்பப்பட்டு வரும் செய்திகளில் பெரும்பாலானவற்றின் குறிப்பிடத்தக்க அம்சமாயுள்ள இனத்தை மையமாகக் கொண்டு நிலவும் தப்பெண்ணங்களை நீக்கிவிட்டு . . . . . . புதிய சர்வதேச உறவுகளுக்கு அவற்றின் மனிதப் பரிமாணத்தை அளிக்கவும் சமத்துவ அடிப்படையிலும் மக்களின் கலாசார, அரசியல், சமூக, பொருளாதார பேதா பேதங்களை அங்கீகரித்தும் பல்வேறின மக்களிடையே மெய்யான ஒத்துழைப்பு ஸ்தாபிக்கப்படுவதை ஊக்குவிக்கவும்'' உலகளாவிய முயற்சி மேற்கொள்ளப்படுவதற்குரிய அறைகூவல் விடுப்பதும் இன்றைய அவசரத் தேவைகளாகும்.

## பொதுசனத் தொடர்பு சாதனமும் அதன் உளவியல் செய்தியும்

பொதுஜனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் திரட்டி விநியோகிக்கப்படும் தகவல்கள் பக்கம் சாராது நடு நிலையானவையாக இருப்பது இல்லை. தகவல்களை அவரவர்களுக்கு ஏற்ற வகையில் எவ்வித பாணியில் விநியோகிப்பது என ஏற்கனவே தீர்மானிப்பதென்பது பெரும்பாலும் நடைமுறைச் சாத்தியமானதல்ல. இருந்தாலும் ஒவ்வொரு சாதனமும் தாமளிக்கும் தகவல்களை விரும்பத்தக்க மக்கள் கூட்டத்தை ஏற்கனவே திரட்டி விடுகின்றன. அதே போல் பொது மக்களும் தங்களுக்கேற்றசாதனத்தை முன்கூட்டியே தெரிவு செய்து விடுகின்றனர். இவ்வாறு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் செய்வது அந்தந்த நாடுகளின் சமூக பொருளாதாரத்திலும், வர்க்க அமைப்பிலும் தங்கியுள்ளது.

உலகெங்கும் ஒவ்வொரு கணமும் பல கோடிக் கணக்கான சம்பவங்கள் நடைபெறுகின்றன. அவற்றை யெல்லாம் தகவல்களாத் திரட்டி விநியோகிக்கலாம். அதே போல் கோடிக் கணக்கான தகவல்களை மக்கள் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களின் மூலமாகத் தெரிந்து கொள்கிறார்கள். இது எவ்வாறு நடைமுறைப் படுத்தப்படுகிறது என அறிவதற்கு முன்னர் சமூக பொருளாதார கட்டுக்கோப்புகளுக்கிடையிலான பரஸ்பரத் தொடர்புகளைப் பற்றி நன்றாகத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். முதலில் சர்வதேச தொடர்புகளையும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளையும் விபரித்த பின்னர் தேசியத் துறை பற்றி ஆராயலாம். கூட்டுச் சேரா நாடுகளை உள்ளடக்கிய புதிய உலக தகவல்கள் ஒழுங்குகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி கடந்த ஈராண்டு காலத்தில் பல ஆலோசனைகள் நடாத்தப்பட்டன. ஆனால் உள்ளூரில் அதற்கிணையான புதிய தகவல் ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொள்ளாததனால் அக் கோரிக்கைகளும், ஆலோசனைகளும் செயலற்று விட்டன. எங்கள் நாடும் மூன்றாவது உலகத்தின் அங்கத்துவ நாடாக இருந்தாலும் நிலப்பிரபுக்களுடனும் அவர்களைப் போன்ற ஏனையோருடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. எனவே எமது உள்ளூர் அமைப்பு முறையினைப் பற்றி நாம் விரிவாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

சுதந்திரத்தின் விளைவால் இலங்கையில் புதிய சமூக சக்திகளும், புதிய ஆதிக்க வர்க்கமும் உருவாகின. எனவே இலங்கை — சோவியத் ரஷ்யா, சீனா போன்ற சோஷலிஸ நாடென்றோ, பிரித்தானியாவைப் போன்ற தாராள ஜனநாயக நாடென்றோ சொல்வது அர்த்தமற்றது. தகவல் துறையில் சில சமயங்களில் வகுப்புவாதிகளினதோ குறிப்பிட்ட சில குழுக்களினதோ கட்டுப்பாட்டின் காரணமாக அமுலிலுள்ள சக்திகள் தவறான அம்சங்களை ஏற்படுத்தி விடுகின்றன. உண்மையான பிரச்சாரகரின் உணர்வுகளை தொழில் ரீதியாக இயங்கும் அமெரிக்க விளம்பர நிறுவனங்கள் விகாரப்படுத்தி, விரக்தியை ஏற்படுத்தி விடுகின்றன. நமது நாட்டில் நடக்கும் விடயங்களை பிரபல சிங்களப் பத்திரிகையான 'சிலுமின' சுவையுடன் புலப்படுத்தி வருகின்றது. அதனுடன் கேலிச் சித்திரத்தின் மூலமாகவும் மாறிவரும் வகுப்புவாத அமைப்புக்கள் பிரதிபலிக்கப்படுகின்றன

தகவல்களை தெளிவாகப் படித்து உணரவேண்டிய அத்தியாவசியத்தையும், தெளிவான வரையறையையும் பொதுஜனத் தொடர்பு சாதனங்கள் கொண்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தமட்டில்பொதுஜனத் தொடர்பு சாதனங்களான வானொலியையும் பத்திரிகைகளையும் கட்டுப்படுத்தி வெளியிடப்படும் தகவல்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை எவரும் சுட்டிக் காட்ட முடியும். இலங்கை மக்கள் படிப்பறிவும், பேச்சாற்றலும் உடையவர்கள். கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் அரசாங்கங்கள் மாறியுள்ளன. இருந்தும் அத்தேர்தல்கள் பொதுஜனத் தொடர்பு சாதனங்களின் மூலம் பாரிய பிரச்சாரத்தினை மேற்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றியுள்ளன.

# ஒரு புதிய செய்தி உணர்வு

— அமிதபா சௌத்துரி

அடுத்த ஐந்து அல்லது ஆறு வருடங்களில் வளர்முக உலகிலே வாழ்க்கை எது போன்று தோற்றமளிக்கும் என்பது பற்றிய பயங்கர உண்மைகளை நோக்கும் போது — கோடானு கோடி வேலைகளும் புகலிடங்களும் பாடசாலைகளும் ஏக்கர் கணக்கான விவசாயக் காணிகளும் எங்களுக்குத் தேவையாயிருக்கும்; ஆனால் நாம் அவற்றைக் கொண்டிருக்க மாட்டோம் — நாம் எதைப் பற்றிப் பேசுகிறோம்? மகத்தான புரட்சிகளைப் பற்றி நாம் பேசுகிறோமா? அவை வருவதற்காக நாம் காத்திருக்க இயலுமா? இல்லை — மெல்ல மெல்ல முன்னேறி, நாம் உயிர் பிழைத்திருக்க வேண்டியிருக்கிறது. புரட்சிகளைப் பற்றிப் பேசவோ அல்லது கடந்த காலத்தைப் பற்றி மீண்டும் எண்ணிக் கொண்டிருப்பதோ — கடந்த காலத்து அச்சுறுத்தல் முறையான ஏகாதிபத்திய, காலனி ஆதிக்கப் போக்குகளைப் பற்றி எப்பொழுதும் பேசிக் கொண்டிருப்பது — எங்களை வெகுதூரத்துக்கு இட்டுச் செல்லாது. ஜனத்தொகைக் கட்டுப்பாடு கூட எங்களை வெகு தூரத்துக்கு இட்டுச் செல்லாது. எங்களை அதைரியப்படுத்தி விறைக்கச் செய்யும் உண்மையாதெனில் அடுத்த ஐந்து அல்லது ஆறு வருடங்களில் ஜனத்தொகை சம்பந்தமாக நாம் என்னென்ன நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டபோதிலும், எங்களுடைய நிலைமையில் அறவே எத்தகைய மாற்றமும் ஏற்படாது என்பதாம். அவை தனியொரு நபரையும் குறைக்காதென்பது திண்ணம். சுயமாகவோ அல்லது ஒப்பியல் ரீதியிலோ எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவே மாட்டாது.

இந் நிலைமையிலேயே நாம் கேட்கிறோம்: இது குறித்துப் பத்திரிகையாளர்கள் என்ன செய்கிறார்கள்? எங்களுக்கு என்ன பங்கு இருக்கிறது? பெரிய வியாக்கியானங்களுக்கு மட்டும் செவிசாய்த்துக் கொண்டும், சாட்டுக்கு ஒரு சில விளக்கங்களை வாயிலிருந்து உதிர்த்துக் கொண்டும் நாம் விலாதத்தில் இறங்கி விடுவோமா அல்லது நாம் ஆற்றுவதற்கு இன்னொரு பங்குண்டா? என்று, இக் கேள்விகளை நாங்களே எங்களிடம் கேட்டுக் கொண்டு வந்துள்ளோம்; மிக அடக்கமான முறையில் நாம் ஒரு புதிய செய்தி உணர்வை — ஒரு புதிய செய்தி மதிப்பை அபிவிருத்தி செய்ய, சிருஷ்டிக்க முயன்று வருகிறோம். நாம் அதை ''அபிவிருத்திச் செய்தி'' என்று அழைக்கிறோம். இது செய்தியை எழுதுவதிலும் நுட்பமாக விசாரித்தறிந்து அறிக்கை செய்வதிலும் ஒரு புதிய, முற்றிலும் புதியதொரு கருத்தாகும்.

இப் பயங்கர உண்மைகளின் எதிரில் நாம் என்ன சாதிக்க முடியும்? முதலாவதாக, உலக அபிவிருத்தி என்னும் பிரமாண்டமான பணி தொடர்ந்து நிறைவேற்றப்படவேண்டுமென்பதைப் பொது மக்கள் அறியச் செய்வதன் மூலம் நாம் இந்த அளவு சாதிக்கலாம். இதில்லாவிட்டால், எத்தகைய விடையும் கிடைக்காது. உண்மையில் எந்தப் பரிகாரமும் இல்லையென்று நாம் பிரசங்கம் செய்கிறோம். ஆனால், சிறிதளவு நிவாரணம் உள்ளது. இப் பணியை முன்னேற்றுவதற்கு உதவுவது எங்களுடைய கடமை; எங்கள் சுதந்திரத்தை நாம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு; எங்கள் தொழிலுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடெனப் பத்திரிகையாளர்களின் இச் சந்ததியினராகிய நாம் கருதுகிறோம்.

உண்மைகளை நாம் நோக்கும் போது, ஒரு பக்கத்தில், மிகப் பயங்கரமாகத் தோற்றுகிறது . . . . . . ஆனால் அது மிகப் பெரியதொரு மனித நாடகமாகவும் விளங்குகிறது. அபிவிருத்தி முறையில் பயிற்சி பயிலிக்கப்பட்டு வரும் இவர்கள் செயற்பாடற்ற வாய்மூடி மௌனிகளல்லர். கடந்த 20 விருந்து 25 வருடங்கள் வரை செய்யப்பட்டுள்ள அபிவிருத்திப் பணிக் கிரமம் ஒன்றைச் செய்துள்ளது. அவர்கள் வருமானப் பகிர்வு முறையை அது மாற்றவில்லை. அவர்களை எவ்விடத்தும் உயர்த்தவில்லை. அவர்களுடைய வறுமையைக் குறைக்கவில்லை. அபிவிருத்திக் கிரமம் சுரண்டலைக் குறைத்து விடவில்லை. கடந்த காலம் விட்டுச் சென்றவை இன்னும் இருந்து வருகின்றன. ஆனால் அபிவிருத்திக் கிரமம் இதனைச் செய்துள்ளது: இப்பொழுது முன்னேறிச் செல்ல வேண்டுமென்ற விருப்பத்தை அது மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவிலோ அல்லது பாகிஸ்தானிலோ அல்லது பங்களாதேஷிலோ, பிலிப்பைன்ஸிலோ அல்லது மலேசியாவிலோ எல்லாம் ஊழ்ப்படி நடக்குமென்று, கருத்தூடன் செயலற்ற பாமர மக்களாக அவர்கள் இருந்து வந்த காலம் மலையேறி விட்டது. முன்னேறிச் செல்ல வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்.

எனவே, ஒரு புறத்தில் இந்தப் பயங்கர நிலைமை இருந்து வருகிறது. மறு புறத்தில், இந்தோனீஷியாவிலே, எழுதப் படிக்கத் தெரிந்த மக்களில் 40 சதவிகிதத்தினர் உங்களுடைய வாசக நேயர்களாயிருக்கிறார்களென்பதும் அவர்கள் முன்னேறிச் செல்ல வேண்டுமென விரும்புகிறார்களென்பதும் உங்களுக்குத் தெரியும். பிலிப்பைன்ஸிலே, ஜனத் தொகையில் ஏறக்குறைய 60 விருந்து 80 சதவிகிதத்தினர் வரை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கின்றார்கள். நீங்கள் எழுதுவதை அவர்களால் படிக்க முடியும். அவர்கள் வானொலியினதும் டெலிவிஷனினதும் செல்வாக்குக்கு உட்பட்டவர்களாயிருப்பதுடன் அவர்கள் முன்னேறிச் செல்ல வேண்டுமென்றும் விரும்புகிறார்கள்.

அப்பொழுது இங்கு, எங்கள் தலைமுறையைச் சேர்ந்த ஒவ்வொரு பத்திரிகையாளரும் ஆற்ற வேண்டிய குறுகிய, சிறிய ஆனால் மிகுந்த சுவை நிரம்பிய பணிப் பகுதியும் நிறைந்த அர்த்தபுஷ்டியுள்ளதுமான பங்கு உள்ளது: முதலாவதாக இந்த இயக்கம் முன்னேறிச் செல்ல உதவுவது. இரண்டாவதாக ஊழல் மிகும் இந்த ஓட்டைக் குழாய்களெல்லாம் அடைக்கப்படுவதற்கு வகை செய்வது.

ஊழல்களை எதிர்த்துப் போராடுவதற்காக, எங்கே ஒழுகும் ஓட்டைக் குழாயொன்றை அடைக்க முடியும் எனப் பார்க்கும் ஒரு சிறிய பரிசோதகரின் — தண்ணீர்க் குழாய்ப் பரிசோதகரின் — வேலை போன்றது எமது வேலை. அபிவிருத்திப் பத்திரிகைத் தொழிலுக்குத் தன்னை அர்ப்பணித்துள்ள விசாரித்தறிந்து செய்தி அறிக்கை செய்யும் ஒரு நிருபர் தன் முன்னே ஒரு குறிக்கோளை ஸ்தாபித்துக் கொள்ள முயல்கிறார். எந்தப் புதினத்தையும், எந்தச் சம்பவத்தையும், அரசாங்கத்திலிருந்து வரும் எந்த அறிவிப்பையும், எந்தக் கருத்திட்டத்தையும், எந்தப் புதிய தொழிற்சாலையையும், தெருவில் அல்லது சுவரொட்டியில் காணப்படும் எந்தப் புதிய உற்பத்திப் பொருளையும் கையாள்வதில், இந்த நிருபர் கேட்கிறார்:

''எனது நாட்டிலிருக்கும் குடிமக்களில் அடிமட்டத்திலுள்ள 20 சதவிகிதத்தினருக்கு அது எவ்வாறு உதவப் போகின்றது? வேலை வாய்ப்புக்களை அது எவ்வாறு பகிரப் போகின்றது? வருமானம் சிறு அளவினதாகவே இருந்த போதிலும் அதை எவ்வாறு சமமாகப் பகிரப் போகின்றது?'' இந்தோனீஷியாவிலுள்ள பியட்ஸ் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இந்தியாவில் ஒரு பியட் கார் உற்பத்தி செய்யப்படுமா வெனத் தீர்மானிக்கு முன்பு, தமது நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கும் சர்வதேச உரக் கூட்டு நிறுவனத்தைப்பற்றிக்கருத் தொன்றைக் கொள்வதற்கு முன்பு, அவர் இம் மூன்று கேள்விகளையும் கேட்கிறார். உயர் விளைச்சல் தரும் விதைகளைத் தமது கையில் எடுப்பதற்கு முன்புகூட, அவர் தனக்குத் தானே கேட்டுக் கொள்கிறார்: ''உயர் விளைச்சல் தரும் இந்த விதைகள் எவ்வகை ரீதியில் என்ன கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன? தொழில்நுட்ப இயலை — மற்றெல்லா இடங்களிலும் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றுள்ள மிக்க சிறப்புள்ள தொழில்நுட்ப இயலைக் கொண்டு வருவதால் சமூகத் துறையில் என்ன விளைவுகள் ஏற்படும்? ஆனால் எனது மக்களுக்கு இந்தத் தொழில் நுட்பவியல் என்ன பயனைத் தரும்? உயர் விளைச்சல் தரும் நெல்லின் விஷயத்தில் நடந்தது போல அவர்கள் தங்களுடைய வேலைகளை இழக்கப் போகிறார்களா?'' விவசாயிகள் தங்கள் வேலைகளை இழந்துள்ளனர். குடிவார விவசாயிகள் துரத்தப்பட்டுள்ளனர். பெரிய விவசாயிகள் இன்னும் பெரியவர்களாயிருக்கிறார்கள். பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் ஒரு காலத்தில் பசுமைப் புரட்சி போலத் தோற்றியது இப்பொழுது செம்புரட்சியாகி வருகிறது.

இக் கேள்விகளைத்தான் இந்தப் பத்திரிகையாளர் இப்பொழுது கேட்கிறார். பரிசீலிக்க வேண்டிய நீண்ட ஜாபிதாவொன்றை அவர் வைத்திருக்கிறார். அது சுலோகங்களைக் கொண்டதல்ல. அது கோட்பாடுமல்ல. அபிவிருத்தியை நீண்ட பெரிய மட்டத்திலிருந்து நோக்குவது அவரது பணியல்ல. நாங்கள் தெரிவு செய்த தொழிலினால் அந்த நல உரிமையை எமக்கு நாமே மறுத்துள்ளோம். சிறிய மட்டத்திலிருந்து பார்ப்பதே — விசேடப்பட்டிருப்பதே தமது பணி. ஓர் இயந்திரக் கலப்பை (டிராக்டர்) வந்து சேரும் ஒவ்வொரு முறையும், இந்தக் கலப்பை ஒரு நூற்றிருபது ஆட்களை வேலை யிழக்கச் செய்துள்ளதா? இந்த இயந்திரக் கலப்பை கோதுமையில் இவ்வளவு உணவு உற்பத்தியை விஸ்தரிப்பதற்கும் இத்தனை தொழிலாளர்களை வேலை யிழக்கச் செய்வதற்கும் ஏதுவாயிருந்துள்ளதா என்று கேட்பதே எமது பணி. விசாரித்தறிந்து செய்திகளை அறிக்கை செய்தல், பொது சேம நலம் பற்றிய செய்திகளை அறிக்கை செய்தல், ''அபிவிருத்தி பற்றிய செய்திகளை அறிக்கை செய்தல்'' என்று நாம் கூறுவது இதைத் தான். இப்போழ்துக்கும் இந்தத் தசாப்தத்தின் முடிவுக்கு மிடையேயுள்ள காலத்தில் நிலைமையை எவராலும் மாற்ற முடியாதென நான் மீண்டும் கூறுகிறேன். ஆனால், நாம் எவரிடம் சிரத்தை கொண்டுள்ளோமோ அம் மக்கள் அபிவிருத்தியை விரும்புகிறார்கள் என்ற உண்மையினால் நாம் தைரியமடைகிறோம். அவர்களுடன் சேர்ந்து ஒவ்வொரு சிறிய விரயத்தையும் எம்மால் நிறுத்த முடியுமானால் அது முக்கியமாகும். ஆதலால், ஜனத்தொகைக் கட்டுப்பாடும் முக்கிய

மாகின்றது. எனது சொந்த நாடான இந்தியாவில், நான் வசிக்கும் பிலிப்பைன்ஸில், தாய்லாந்தில் அது முக்கியத்துவம் அடைகின்றது. இன்று குடும்பத்தின் அபிலாஷைகள் எனவாயிருக்கின்றன என்பதையும், குடும்பத்தின் ஆற்றல்கள் யாவை என்பதையும் பொறுத்து, அது முக்கியமாகும்.

ஆனால், இங்கு நான் மேற்குலகிலிருந்து வந்துள்ள நண்பர்களைக் கண்டு, அபிவிருத்தி பற்றி செய்திகளை அறிக்கை செய்யும் இந்நடவடிக்கை நாங்கள் வழக்கமாகப் புதினங்களைச் சேகரிக்கும் ஒழுங்காயிருக்கத் தேவையில்லை — அது எங்களுடைய பணியாயிருப்பதற்குப் பிரதான காரணம், அதனைக் கொண்டு நாம் உயிர் பிழைக்க வேண்டியிருக்கிறது; அதனைக் கொண்டு எமது கடப்பாட்டை நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்று அவர்களிடம் கூறுகிறேன். ஆனால், ஒரு வேளை அது அவர்களுக்கும் வழக்கமாகப் புதினங்களைச் சேகரிக்கும் இடமாயிருக்கக்கூடும். உலகத்தின் இந்த மகத்தான பத்திரிகைகள் — டைம்ஸ் ஒப் லண்டன், நியூயார்க் டைம்ஸ், கிறிஸ்டியன் சயன்ஸ் மொனிட்டர் — இந்தப் பெயர்களை யெல்லாம் நீங்கள் சரசரவெனக் கூறிவிடலாம். இப் பத்திரிகைகள் பெரும் வீரப் போராட்டங்களை நடத்தியுள்ளன. அதனாற்றான் அவை பெரும் புகழ்பெற்றுள்ளன. நாம் கலந்தாலோசிக்கும் இந்த அடிப்படைப் பிரச்சினைகளைப் பற்றி — மூலப் பொருள் வளங்களிலுள்ள இடைவெளி, மேற்குலகுக்கும் எங்கள் உலகுக்கு மிடையேயுள்ள அடிகாணு இடைவெளி, மூலப் பொருள்களின் தட்டுப்பாடு, வளர்முக உலகை எதிர்நோக்கும் பேராபத்துக்கள், ஐ. நா. பொதுச் சபையின் விசேஷ கூட்டம் — இந்த விஷயங்களைப் பற்றி ஆழமாக ஆராய்ந்தறிந்து ஏன் செய்திகள் அறிக்கை செய்யப்படுவதில்லையென்று நான் பணிவுடன் அப் பத்திரிகைகளைக் கேட்கிறேன். ஏன் எத்தகைய தொடர்ச்சியான இயக்கமும் நடத்தப்படுவதில்லை? எங்கள் தொழிலுக்கு என்ன நேர்ந்துவிட்டது? ஒரு புதிய பொருளாதார ஒழுங்கு சிருஷ்டிக்கப்பட வேண்டும்; வைலாஸ் அல்லது வாட்டர்கேட் விவகாரம் சம்பந்தமாக நடந்ததுபோல, இப்புதிய பொருளாதார ஒழுங்கு எவ்வளவு விரைவில் சிருஷ்டிக்கப்படுகிறதோ அவ்வளவுக்கு மேன்மையாகும் என்று யோசனை கூற ஏன் அவ்வளவாக இயக்கம் நடத்தப்படுவதில்லை?

## பாரம்பரிய செய்தித் தொடர்பு முறைகள்

பத்திரிகைகள் வானொலி போன்ற வழக்கமான பிரசித்த செய்தித் தொடர்புச் சாதனங்களுக்குப் புறம்பாக, வழக்கிலில்லாத விட்டுத்தட்ட பாதாள செய்தித் தொடர்பு முறையொன்று இருந்து வந்துள்ளது. இலங்கையில் இதன் ஆரம்ப உருவம் உதாரணமாகப் பழங்கால ஜாதக பாரம்பரியமாகும். இது வழக்கிலுள்ள ஜாதகக்களில் விவரிக்கப்பட்டுள்ள கதைகள் ஒரு புறமிருக்க, ஜாதகக் கதைகளை வியாக்கியானம் செய்தது. மேலும், லொகாரி போன்ற நாடகம் அக்கால சமூகத்தின் நிலையைப்பற்றி இழித்து விமர்சனம் செய்தது.



பொதுத் தொடர்பு சாதனங்களில் ஒன்றாக வீதியோரச் சுவர்களைப் பயன்படுத்தல் ஆசியாவின் பல நாடுகளில் நடைபெறும் ஓர் அம்சமாகும். "மோல் போஸ்" எனும் பிலிப்பைன்ஸ் பத்திரிகை பொன்று 25 பலகைகளில் எழுதப் பட்டு காட்சி தருகின்றது.

அதைவிடச் சமீப காலங்களில், 20 லிருந்து 30 வருடங்களுக்கு முற்பட்டதான அண்மைக் காலத்தில் கூட, பல நிலையங்களிலும் கிராம மக்கள் கூட்டங்களிலும் 'கவிக்கொல காரயா' வை அல்லது நாடோடிப் பாடல்கள் விற்பவரைச் சர்வ சாதாரணமாகக் காணக்கூடியதாயிருந்தது. இங்கு பாடப்பட்ட சற்றே நிந்திக்கும் தன்மை வாய்ந்த பாட்டுகள் செல்வாக்கில் உயர்ந்தோரினதும் பண வலிமை படைத்தவரினதும் நீசச் செயல்களையும் நெறி பிறழ்வுகளையும் அடிக்கடி சுட்டிக் காட்டியதுடன், இவ்விதமாக பண வலிமை படைத்தோராலும் செல்வாக்கிலும் அதிகாரத்திலும் ஓங்கியோராலும் கட்டுப்படுத்தப்பட்ட செய்திப் போக்குவரத்துப் பாதைகளுக்கு எதிராக ஒரு மாற்றுச் செய்தித் தொடர்பு வழியையும் ஏற்படுத்தின.

வழக்கிலில்லாத இன்னொரு வகைச் செய்திப் போக்குவரத்து யாதெனில், கர்ண பரம்பரையான கொல பத்தரவாகும். கடதாசித் துண்டொன்றில் செய்தி யொன்றை எழுதி — இது பெரும்பாலும் அவதூறாகவே இருக்கும். ஆனால் மறைந்துள்ள உண்மைகளுக்குக் கவனத்தை ஈர்ப்பதாயிருக்கும் — ஒவ்வொருவரும் பார்க்கும்படியாகக் கிராமத்திலுள்ள மரங்களில் ஆணிகொண்டு குத்திவைத்து விடுவதாகும்.

மேலும், வழக்கிலில்லாத மற்றொரு விதச் செய்தித் தொடர்பு முறை யாதெனில், சுவர் எழுத்து வரைவுகளாகும். அஃதாவது, சம்பிரதாய முறைகளுக்கு அவ்வளவாக மதிப்பளிக்காமல், ஆட்களைப் பற்றிச் சுவரில் எழுதி வைப்பதாகும். சிறந்த சுவர் வரைவுகள் சிறிரியாவிலுள்ளவை யென்பதில் சந்தேகமில்லை. மிகச் சமீப உதாரணங்கள் பாடசாலைகளிலும் பல்கலைக் கழகத்திலுமுள்ள சாய்வு மேஜைகளில் காணப்படும் எழுத்து வரைவுகளாகும். உதாரணமாக, பீடுடைய வகையில் பொருளடக்கம் இன்றைய படித்த வாலிபர்களின் எதிர்பார்க்கைகளையும் ஏக்கங்களையும் அடிக்கடி எடுத்துக் காட்டுவதாயுள்ளது.

இலங்கையில், வழக்கிலில்லாத இவ்வகையான செய்தித் தொடர்பு முறை உபயோகிக்கப்படுவது, வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை விட அதிக முக்கியமாயில்லாவிடினும், ஒரு வேளை முக்கியமாயிருக்கலாம். ஏனென்றால், குறிப்பாக, கடந்த சில தசாப்தங்களில் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் நம்பத்தக்கனவாயில்லாதபடியால் பெருமளவு சமுசயத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. பரம்பரையாக மக்களிடையே இருந்து வரும் இந்தச் செய்தித் தொடர்பு வழிகளே மிகச் சக்திவாய்ந்த சாதனங்களை மட்டந்தட்ட அடிக்கடி வெற்றிகரமாக முயன்று வந்துள்ளன.

வழக்கிலில்லாத இவ்வித செய்திப் போக்குவரத்து வழிகளை அபிவிருத்தி நோக்கங்களுக்கு மென்மேலும் உபயோகிக்க அநேக நாடுகள் முயன்று வந்துள்ளன. இதற்கோர் பிரசித்திபெற்ற உதாரணம், சீனவில் சுவரொட்டிகள் உபயோகிக்கப்படுவதாகும். இம்முறை உதாரணமாக பிலிப்பைன்ஸ் உட்பட அநேக நாடுகளில் பின்பற்றப்பட்டுள்ளது. இலங்கையில் சுவரொட்டிகளும் சுலோகங்களும் செய்தித் தொடர்பு வழியாக ஜாதிக விமுக்தி பெரமுனவினால் அகில இலங்கை அடிப்படையில் உபயோகிக்கப்பட்டன. ஒரு சில மாதங்களுக்கு முன்பு மாணவர்களிடையே அமைதியின்மை ஏற்பட்டபோது இவ்வகைச் சுவரொட்டிகளுக்குப் புத்துயிரளிக்கப்பட்டது. இங்கு எடுத்துக் காட்டப்பட்ட இரு உதாரணங்களைக் கவனிக்கும்போது, இதுவும் ஒரு செய்தித் தொடர்பு முறையாகும்.

இன்னொரு புதுமையான செய்தித் தொடர்பு முறை தெருக் கூத்தின் வளர்ச்சியாகும். இலங்கையில் இது காமினி ஹத்தொட்டுவேகமவின் சிறிய நாடகக் கோஷ்டியுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. வெசாக் போன்ற திருவிழாக் காலங்களில் அவர்கள் தெருக்கடை வீதிகளில் நாடகங்களை நடத்தி வந்துள்ளதுடன் உரத்த சமூக விமர்சனச் செய்திகளை இடத்துக்கிடம் கொண்டுபோகவும் முயன்றுள்ளனர்.

## நாளாந்தப் பத்திரிகைகளின் உள்ளடக்கம்

### இரண்டு பிரதான புதினப் பத்திரிகை நிறுவனங்களின் சிங்கள ஆங்கிலத் தினசரிகளது உள்ளடக்கங்களுக்கும் விளம்பரங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள இடம் பற்றிய ஒப்பீட்டு ஆய்வு

| புதினப் பத்திரிகைகள் | உள்ளூர்ச் செய்திகள் | ஆசிரியருக்குக் கடிதங்கள் | சமூக, சொந்தச் செய்திகள் | ஆசிரியர் கருத்துக்கள் | கேலிச் சித்திரங்களும் விளக்கப்படங்களுடனான தொடர் கட்டுரைகளும் | வெளிநாட்டுச் செய்திகள் | சிறப்புக் கட்டுரைகள் (உள்ளூரும் வெளிநாடுகளும்) | விளையாட்டுக்கள் (உள்ளூரும் வெளிநாடுகளும்) | விளம்பரங்கள் | மொத்த (%) | கலம், அங்குலங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தினமின ... | 31.1 | 0.6 | 4.3 | 1.7 | 2.4 | 2.9 | 13.6 | 1.7 | 41.7 | 100.0 | 12570 |
| லங்காதீப ... | 47.1 | 0.1 | 1.8 | 2.7 | 4.6 | 9.0 | 6.2 | 3.2 | 25.3 | 100.0 | 7010 |
| டெய்லி நியூஸ் ... | 18.1 | 1.8 | 3.4 | 2.5 | — | 7.2 | 5.8 | 7.1 | 54.1 | 100.0 | 13860 |
| ஒப்சவர் ... | 25.1 | 1.5 | .2 | — | 2.3 | 23.2 | 15.2 | 19.5 | 13.0 | 100.0 | 7580 |
| டெலி மிரர் ... | 34.7 | 2.1 | 3.6 | 2.9 | 1.1 | 8.7 | 13.1 | 10.1 | 23.7 | 100.0 | 9710 |

## 1975இல் ஐந்து தினசரிப் புதினத்தாள்களின் உள்ளடக்கம் பற்றிய மாதிரி ஆய்வின் பெறுபேறுகள்

ஜனவரியிலிருந்து ஜூன் வரையிலான ஆறு மாதங்களுள் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு வாரத்தை அடக்கக் கூடியதாக (ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த) ஒரு வாரத்தின் ஒரு நாள் எடுக்கப் பட்டது. ஜூலையிலிருந்து டிசெம்பர் வரை இந்நடைமுறை ஒழுங்காகப் பின்பற்றப்பட்டது. மாதிரி ஆய்வுக்காகத் தெரிவு செய்யப் பட்ட பத்திரிகைகளில் மேல் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒன்பது வகைகளுள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள கலம் அங்குலங்கள் அளக்கப்பட்டன. இவற்றிலிருந்து 12 மாதங்களுக்குமான மொத்தம் பெறப்பட்டது. உதாரணமாக 1975 இல் ஒரே மாதிரியான 12 டெய்லி நியூஸ் பிரதிகளில் மொத்தம் 13,860 கலம் அங்குலங்கள் இருந்தன. இதனை அடுத்து தினமினவில் 12,570 கலம் அங்குலங்கள் இருந்தன. 7,010 கலம் அங்குலங்களைக் கொண்ட லங்காதீப ஆகக் குறைந்த அளவினை உடையதாக இருந்தது. இதனை விடச் சற்று அதிகமாக 7,560 கலம் அங்குலங்களைக் கொண்டதாக ஒப்சவர் காணப்பட்டது. ஆசிரியர் கருத்து, வெளிநாட்டுச் செய்திகள், விளம்பரங்கள் முதலிய ஒவ்வொரு வகையையும் உள்ளடக்கும் இடங்களின் மொத்த கலம் அங்குலங்களின் நூற்றுவீதம் மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. விளம்பரங்கள் முதலிடத்தைப் பெறும் டெயிலி நியூஸும் தினமினவும் அல்லாத ஏனைய தினசரிகளில் உள்ளூர்ச் செய்திகளே பெரும்பாலாக இடம் பெறுகின்றன.

தெரிவு செய்யப்பட்ட மாதிரி ஆய்வில் டெயிலி நியூஸில் 54.1% இடமும் தினமினவில் 41.7% இடமும் எல்லாவிதமான விளம்பரங்களுக்கும் ஒதுக்கப்பட்டிருந்தன. சிலோன் ஒப்சவர் அதன் பக்கங்களில் 13% த்தில் விளம்பரங்கள் இடம் பெறுகின்றன.

சிலோன் ஒப்சவரில் வழக்கத்துக்கு மாறாக வெளிநாட்டுச் செய்திகள் நூற்றுவீதம் அதிகமாகும் (23.2%). 29%க் கொண்ட தினமினவைத் தவிர ஏனையவை 7% இருந்து 9% வரையிலே வெளிநாட்டுச் செய்திகளை வெளியிடுகின்றன. சிறப்புக் கட்டுரைகளைப் பொறுத்தவரையிலும் அதிகமானவை (15.2)% ஒப்சவரிலும் அதற்கு அடுத்ததாக 13% ஆனவை தினமினவிலும் டெயிலி நியூஸிலும் இடம் பெறுகின்றன.

ஒப்சவரின் ஐந்தில் ஒரு பங்கில் விளையாட்டுச் செய்திகள் இடம் பெறுகின்றன. ஆங்கிலத் தினசரிகளிலேயே அதிகமான விளையாட்டுச் செய்திகள் இடம் பெறுகின்றன.

சமூக, தனிப்பட்ட செய்திகள் தினமினவில் (4.3%) முக்கிய இடம் பெறுகின்றன. ஆசிரியருக்குக் கடிதங்கள், டெயிலி மிர்ரரிலும் டெயிலி நியூஸிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. கேலிச் சித்திரங்களுக்கும் படங்களுடன் கூடிய கட்டுரைகளுக்கும் லங்காதீபவில் (4.6%) முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அடுத்ததாக இடம் பெறுவன தினமினவும் 2.4% ஒப்சவரும் 2.3 ஆகும்.

| செய்தி பெறப்பட்ட மூலநாடு | டெய்லி நியூஸ் | டெய்லி மிர்ரர் | சிலோன் ஒப்சவர் | தினமின | லங்காதீப |
|---|---|---|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க விடயங்கள் எண்ணிக்கை | 46 | 17 | 37 | 7 | 14 |
| மொத்தத்தின் % ... | 16 | 16 | 16 | 5 | 15 |
| ஐக்கிய ராச்சியம் விடயங்களின் எண்ணிக்கை | 21 | 12 | 30 | — | 10 |
| மொத்தத்தின் % ... | 8 | 9 | 16 | — | 5 |
| மேற்கு யூரோப் விடயங்களின் எண்ணிக்கை ... | 39 | 21 | 60 | 13 | 14 |
| மொத்தத்தின் % ... | 19 | 18 | 18 | 13 | 22 |
| கிழக்கு யூரோப் விடயங்களின் எண்ணிக்கை ... | 1 | 1 | 8 | 1 | — |
| மொத்தத்தின் % ... | — | 1 | 3 | 2 | — |
| ஐ.சோ.சோ. குடியரசு விடயங்களின் எண்ணிக்கை | 11 | 4 | 7 | 4 | 5 |
| மொத்தத்தின் % ... | 5 | 2 | 5 | 6 | 6 |
| சீன விடயங்களின் எண்ணிக்கை | 5 | 3 | 1 | — | — |
| மொத்தத்தின் % ... | 1 | 1 | 1 | — | — |
| மத்திய கிழக்கு விடயங்களின் எண்ணிக்கை | 28 | 16 | 23 | 4 | 14 |
| மொத்தத்தின் % ... | 9 | 14 | 9 | 4 | 17 |
| ஆபிரிக்கா விடயங்களின் எண்ணிக்கை | 16 | 10 | 11 | 4 | 5 |
| மொத்தத்தின் % ... | 9 | 8 | 5 | 5 | 5 |
| இந்தியா விடயங்களின் எண்ணிக்கை | 14 | 10 | 18 | 11 | 14 |
| மொத்தத்தின் % ... | 7 | 9 | 9 | 21 | 12 |
| ஏனைய ஆசிய நாடுகள் விடயங்களின் எண்ணிக்கை ... | 46 | 19 | 37 | 17 | 22 |
| மொத்தத்தின் % ... | 21 | 15 | 14 | 39 | 16 |
| தென் அமெரிக்கா விடயங்களின் எண்ணிக்கை ... | 9 | 4 | 2 | 2 | 2 |
| மொத்தத்தின் % ... | 5 | 5 | — | 3 | 2 |
| ஏனைய வளர்முக நாடுகள் விடயங்களின் எண்ணிக்கை ... | 11 | 4 | 10 | 2 | — |
| மொத்தத்தின் % ... | 4 | 2 | 4 | 2 | — |
| மொத்த % ... ... | 100 | 100 | 100 | 100 | 100 |
| மொத்த கலம் அங்குலம் | 1065 | 872 | 1649 | 277 | 610 |

# வீரகேசரி: அன்றும் இன்றும்

கடந்த நாற்பது ஆண்டு காலத்துள் இலங்கையில் பெரு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் நூற்று வீதம் 80 வரை அதிகரித்துள்ளது. பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக் கழகம் வரை சிங்களத்திலும் தமிழிலும் படிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. இன்றைய நிலைமையை 40 ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய நிலைமையோடு ஒப்பிடும் பொழுது பெரியதொரு வேறுபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. அன்று எழுத வாசிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். அன்று தாய்மொழி மூலம் கற்கும் வாய்ப்பும் இருக்கவில்லை. இன்றோ கல்வி கற்றோரின் தொகை அதிகரித்துள்ளது. பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தாய்மொழிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், எழுது வினைஞர்கள் ஆகியோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இத்தகையோரிடையே பத்திரிகை வாசிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளமை ஆய்வுகளிலிருந்து புலனாகின்றது. வாசிப்போரின் தொகை அதிகரித்துள்ளதோடு இத் தேவையைப் பூர்த்தி செய்யப் புதினப் பத்திரிகைகள் எவ்வாறு பணி புரிந்துள்ளன என்பதையும் எவ்வெத்துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதையும் அறியும் முகமாக வார இதழ் ஒன்றான "வீரகேசரி" பத்திரிகையின் அன்றைய இதழ் ஒன்றையும் இன்றைய இதழ் ஒன்றையும் ஒப்ப நோக்குவோம்.

கடந்த 40 ஆண்டு காலகட்டத்தில் ஈழத்துத் தமிழ் பத்திரிகை வாசகர்களது சுவையும் தர நாட்டமும் படிப்படியாகப் பல மாற்றங்களுக்கு இடமாயுள்ளன. 40 வருடங்களுக்கு முன் வெளியிடப்பட்ட வீரகேசரி வார வெளியீட்டுப் பிரதியொன்றினையும் அண்மைக் காலங்களில் வெளியான பிரதியொன்றினையும் வைத்து ஆராய்கையில் மேற்கண்ட மாற்றங்கள் தெளிவாக வெளிப்பாடு பெறுகின்றன. ஆய்வுக்கென எடுத்துக் கொண்ட பிரதிகள் இரண்டிலும் ஒன்று 1933 ம் ஆண்டிலும் மற்றது 1976 ம் ஆண்டிலும் வெளியானவை. 1933 ன் பிரதி பக்கமொன்றுக்கு 2" அகலமான 7' கலங்களைக் கொண்ட 16 பக்கங்களைக் கொண்டிருந்தது. 1976 ல் பிரசுரமான வார வெளியீட்டுப் பிரதியோவெனில் பக்கமொன்றிற்கு 1" அகலமான 8' கலங்களைக் கொண்ட 8 பக்கங்களை மட்டும் கொண்டதாகக் குறுகிவிட்டது.

1933 ல் வெளியான "வீரகேசரி" வார வெளியீடு இலங்கைத் தமிழர்களை மட்டுமன்றி இந்தியா, பர்மா, மலேயா போன்ற இடங்களிலுள்ள தமிழர்களுக்கும் சேவித்து வந்துள்ளது.

1933 ன் விளம்பரங்களைப் பொறுத்த மட்டில் 16 பக்கங்களில் விடயங்களுக்கு இடமிருக்கக்கூடியதாக கிட்டமுட்ட 15% விளம்பரங்களே பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆனால் 1976 ன் பிரதியைப் பொறுத்தளவில் கிட்டமுட்ட 38% விளம்பரங்கள் இடம் பெற்றுள்ளன. ஒரு குறிப்பிட்ட பக்கத்தில் 5% செய்திக்கோ கட்டுரைக்கோ உருவக்கூடிய இடம் கூட இல்லாது விளம்பர மயமாகவே காட்சியளிக்கிறது. விடயதானத்திலும் பார்க்க விளம்பரங்களுக்கு அதிக முக்கியத்துவம் இப்போது கொடுக்கப்படுவது இதிலிருந்து தெரிகிறது.

1933 ன் கட்டுரைகளைப் பொறுத்தளவில் அரசர்கள், ஹிட்லர், முசோலினி போன்ற சர்வதேசத் தலைவர்கள், மற்றும் தேச விடுதலைத் தந்தையரைச் சுற்றிச்சுழலும் கட்டுரைகளாகவே எல்லாம் இடம் பெற்றுள்ளன. 1976 ன் விடயங்களைப் பொறுத்தளவில் இலங்கையினது பிரச்சினைகளோடு சம்பந்தப்பட்டவையும் இலங்கை வாசகர்களையே முழுக்க முழுக்க மையமாக வைத்து அவர்களுக்கெனவே படைக்கப்பட்டவை போன்ற விடயங்கள் பிரசுரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 1976 ன் "வீரகேசரி" யில் குறிப்பிடத்தக்க அம்சமாக ஈழத்து சூழ்நிலைகளைப் படைப்புலமாகக் கொண்ட ஈழத்துச் சிறு கதையும், உள்நாட்டுச் சமூக பொருளாதார கலை கலாசாரங்களை மையமாக வைத்த சந்திப்பு, உரையாடல், மற்றும் அறிவியல் விடயங்களும் உலகச் செய்தி விமர்சனமும் இடம் பெற்றுள்ளன. 1933 ல் செய்திப்படப் பக்கமாக இருந்தது மாறி அந்த இடத்தைச் சினிமா பிடித்துக் கொண்டிருக்கிறது. இன்று வாசகர்கள் விரும்பும் விடயங்கள் 1933 லிருந்ததை விட மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. மக்கள் விருப்பில் சமூகக் கண்ணோட்டம் முக்கிய அம்சத்தினைப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

1976 ம் ஆண்டுப் பத்திரிகையில் தமிழ் மொழி, நடையிலும் சொற் பிரயோகத்திலும் பெரிய மாற்றத்திற்கு இடமாயுள்ளது. அன்றைய பிரதியில் தமிழ் மொழிக்குப் புறம்பான பல விதேசமான சொற்கள் கையாளப்பட்டிருப்பதைக் காணலாம். உதாரணமாக 'தாவா', 'தஸ்தாவேஜு' போன்ற சொற்கள் பத்திரிகை மொழிக்குச் சொந்தமானவையாகக் கருதப்பட்டு அதிகப்படியாகப் பிரயோகம் பெற்றுள்ளன. 1976 ன் பிரதியிலோவெனில் மொழியின் புனிதத்தன்மை பேணப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சியாகும்.

கடந்த 40 ஆண்டுக் காலக்கட்டத்தில் இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் சமூக பொருளாதார விழிப்புணர்ச்சியின் பிரதிபலிப்பை இன்றைய பத்திரிகைகளில் காணக்கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்க ஒரு அம்சம்.

40 ஆண்டுகளுக்கு முன் ஆங்கிலத்தில் இருந்த தகவல் விடயங்களை ஆங்கிலம் தெரியாதவர்கள் முன்னிலையில் வைக்கும் பணியாகவே தமிழ்ப் பத்திரிகைத் தொழில் இடம் பெற்றுள்ளது. அன்றைய வாசகர்கள் மத்தியில், நகரப் புறத்து வர்த்தகர்களும் கிராமப்புறத்துத் தமிழ் எழுத வாசிக்கத் தெரிந்த ஆசிரியர் சுதேச வைத்தியர் போன்றோரே முக்கிய இடத்தினை வகிக்கின்றனர்.

1976 ன் பிரதியோவெனில் இத்தகைய குறுகிய வட்டத்தினரை அல்லாது பரவலான ஒரு வாசகர் வட்டத்தைக் கொண்டுள்ளது. அரசியல், சமூக, பொருளாதார கலாசார விடயங்களுக்காக இன்று சகல மட்டத்தினரும் தமிழ்ப் பத்திரிகையின் பால் கவனம் செலுத்தி விரும்பி வாசிக்கக்கூடிய அளவுக்கு மாற்றங்கள் பல ஏற்பட்டுள்ளன.




உலகிலே மிக்க பலம் வாய்ந்த ஒரு புதினப் பத்திரிகையான "நிவ் யோர்க் ரைம்ஸ்" பத்திரிகையின் முதல் பக்கத்தின் மேற் பகுதியின் படம் இங்கே காட்டப்பட்டுள்ளது. இங்கே "நிவ் யோர்க் ரைம்ஸ்" என்னும் பெயருக்கு இடது பக்கத்திலே அடைப்புக்குள் 'வெளியிடுவதற்குத் தகுதி உள்ள எல்லாச் செய்திகளும்' என்பது பொறிக்கப்பட்டுள்ளது.

செய்திகள் எவை? செய்தி அல்லாதன எவை? வெளியிடத் தகுதி வாய்ந்தவை எவை? வெளியிடத் தகுதி அற்றன எவை? என்பனவற்றை அவர்களே தீர்மானித்து விடுகின்றனர். இவ்வாறு அவர்களால் வெளியிடத் தகுதி வாய்ந்தவை என நிர்ணயிக்கப்படும் செய்திகள் மாத்திரமே பிரசுரிக்கப்படுகின்றன. அத்தகைய செய்திகள் கூட முதலாவது உலகோடு சம்பந்தப்பட்டவையே அன்றி மூன்றும் உலகோடு தொடர்புடையனவல்ல.

அபிவிருத்தி அடைந்துள்ள நாடுகளின் செய்திகள் போன்ற வளர்முக நாடுகளின் செய்திகள் கூட லண்டன், நிவ் யோர்க் நகரங்களை அடைந்து அங்குள்ளவர்களின் விருப்பு வெறுப்புக்கிணங்கத் தரம் பிரிக்கப்பட்ட பின்னரே எமக்குக் கிடைக்கின்றன. இச் சஞ்சிகையில் தலைமைக் கட்டுரையில் மேல்நாட்டு செய்தித் தொடர்பு பற்றிய பகுதியையும் அடைப்புக்குள் உள்ள செய்தி பற்றிய குறிப்பையும் வாசிக்க.

# 1977ல் பொருளாதாரத்தின் வெளித்தோற்றம் பற்றிய சில குறிப்புகள்

தரப்பட்ட ஒரு காலப் பிரிவில் இலங்கையின் பொருளாதார எதிர்காலம் பற்றிய முன்கூற்றுக் கூறுவதற்கான எந்த ஒரு முயற்சியையும் எதிர்கொள்ளும் இரு பிரச்சினைகள் உள. அவை காலநிலை பற்றிய முன்கூற்றுக் கூறுவதிலுள்ள கஷ்டங்கள், மற்றது உலக சந்தையின் கண்ணோட்டம் எப்படியிருக்குமெனத் துணிதல். பொருளாதாரம் பெரும்பாலும் விவசாய உற்பத்தியிலேயே தங்கி நிற்கின்றது. விவசாய உற்பத்தியைத் துணிவதில் காலநிலை ஒரு முக்கிய அம்சமாகும். உதாரணமாக 1976 ல் மோசமான காலநிலை காரணமாக தேயிலை, தென்னை, நெல் உற்பத்தி என்பன எதிர்பார்ப்புகளுக்கு கீழாக வீழ்ச்சியடைந்தன. 1977 ல் காலநிலை எவ்வாறிருக்கும்? இக் கேள்விக்கு ஏற்கனவே பதில் தெரிந்து கொள்ளல் முடியாது. அதே போன்று உலக சந்தையில் பொருளாதாரம் கூடுதல் தங்கி நிற்பதன் காரணமாக (எமது கட்டுப்பாட்டுக்குள்ளில்லாத) ஏற்றுமதி இறக்குமதி விலைப்போக்குகள் எமது பொருளாதார எதிர் பார்ப்புகளில் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. ஏற்றுமதி இறக்குமதி விலைகள் எமது உண்மையான வருமானத்திலும் எமது இறக்குமதிக் கொள்ளளவிலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. எனவே 1977 ன் பொருளாதாரம் பற்றிய இந்த முற்கூற்று மாற்றங்களுக்குட்படக் கூடியதாகவே அமையும்.

### வளர்ச்சி வீதம்

நிதியமைச்சர் 1977 க்கான தனது வரவு செலவுத் திட்ட உரையில் 1976 ல் மதிப்பிடப்பட்ட (உறுதிப்படுத்தப்படாத) 2 1/2 சதவீத வளர்ச்சி வீதத்துக்கு மாறாக 1977 ல் 4 சதவீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாகக் கூறினார். இந்த அளவிலான வளர்ச்சி வீதம் உண்மையில் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒன்று என்பது மொத்த தேசிய உற்பத்தியின் மூன்றிலொரு பங்கினைப் பெறும் விவசாய உற்பத்தியின் போக்கிலேயே தங்கியுள்ளது. கடந்த வருடம் வீழ்ச்சியுற்ற தேயிலை உற்பத்தி 48 கோடி இருத்தலுக்கும், நெல் 7 முதல் 8 கோடி புசலுக்கும் இரப்பர் மேலும் கூடிய ஒரு தொகைக்கும் அதிகரிக்குமாயின் 4 சதவீத வளர்ச்சிக் கணிப்பு தவறி விட முடியாது. ஆனால் மேற்படி பயிர்களில் ஏதாவது ஒரு பயிர் தோல்வி கண்டாலும் வளர்ச்சி வீதம் 3 1/2 சதவீத மளவு குறையும். 1 1/2 சதவீத சனத்தொகை வளர்ச்சியையும் நாம் கவனத்திற் கெடுத்துக் கொண்டால் தேசிய உற்பத்தி தலைக்கு 2 முதல் 2 1/2 சதவீதபளவுக்கு குறையும்.

### பெருந்தோட்ட உற்பத்தி

1977 ல் தேயிலை உற்பத்தி 43 கோடி இருத்தலாகச் சரிந்தது. 1977 ல் இது ஓரளவு மீட்சியுறும் என தற்போதைய சூழ்நிலைகள் சுட்டிக் காட்டுகின்றன. எவ்வளவு தூரம் மீட்சியுறும் என்பது பற்றிய மதிப்பீடு கஷ்டமானதாகும். அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட தோட்டங்களில் கையாளப்படும் முகாமைத்துவ முறைகளிலான தேர்ந்த முறைகள், உரப்பசளையிடல், சுவாத்திய சூழ்நிலை என்பனவற்றில் இது அதிகம் தங்கி நிற்கும். 45 அல்லது 46 கோடி இருத்தல் வரை உற்பத்தி மீட்சியுறும் என சுமாராக மதிப்பிடலாம். 1976 ல் 35 கோடி இருத்தலாக அதிகரித்த இரப்பர் 36 1/2 முதல் 37 கோடி வரை அதிகரிக்கலாம். வரட்சி காரணமாக, குறிப்பாக 1976 ன் இறுதிக் காலாண்டுப் பிரிவில் பெரும் பாதிப்புற்ற தென்னை 1977 ஏப்ரல் வரை மோசமான விளைச்சலையே காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. மே மாதம் முதல் ஓரளவு இது மீட்சி பெற ஆரம்பிக்கும் எனினும் முழு வருடத்தையும் பொறுத்த வரையில் 20 கோடி தேங்காய்களால் வீழ்ச்சி காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### நெல்லுற்பத்தி

1976 ல் 5 கோடி புசலாக (அல்லது அதற்கும் கீழ்) வீழ்ச்சியுற்ற நெல்லுற்பத்தி 1977 ல் 70 புசலுக்கு நெல் உற்பத்தி அதிகரிப்புக் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. வரட்சி காரணமாக கடந்த இரு வருடங்களாக வட மத்திய மாகாணத்தில் மோசமாகப் பாதிப்புற்ற நெற் செய்கை திசை திருப்பப்பட்ட மகாவலி நதி நீரின் காரணமாக குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக் காட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான நெற் செய்கைப் பிரதேசங்களிலிருந்து கிடைக்கும் தகவல்கள் எல்லாம் ஒரு பெரும் மகா அறுவடை கிடைக்கும் எனச் சுட்டிக் காட்டுகிறது. 1975 லும் 76 லும் முறையே 1.2 கோடி 1.3 கோடி புசலாக இருந்த உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழான நெல் கொள்வனவு 1977 ல் 2.5 கோடி புசலாக அதிகரிக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

### கைத்தொழில் உற்பத்தி

அண்மைக் காலங்களில் மொத்த தேசிய உற்பத்தியில் 13% சத வீதத்துக்கு கைத் தொழில் உற்பத்தி பங்களித்துள்ளது. இத் துறையிலான உற்பத்தி மூலப் பொருட்களின் இறக்குமதியிலேயே பெரிதும் தங்கியிருந்ததால் அதன் இறக்குமதிக்காக ஒதுக்கப்படும் அந்நியச் செலாவணியின் தொகை இதில் முக்கிய இடம் வகிக்கின்றது. கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இவ் வருடம் கூடுதல் தொகை இதற்காக ஒதுக்கப்படும் சாத்தியங்களுண்டு. எதிர்பார்க்கப்படும் தேயிலை, இரப்பர் உற்பத்தி அதிகரிப்பும் கைத்தொழில் துறையில் அதிகரிப்பைப் பிரதிபலிக்கும். ஆனால் தென்னை பதனிடும் கைத்தொழில் துறையில் வீழ்ச்சி காணப்படலாம்.

### அரச துறை முதலீடுகள்

வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின்படி அரசாங்கத்தின் 1977 க்கான மொத்த முதலீட்டு அபிவிருத்திச் செலவினங்கள் 199.6 கோடி ரூபாவாகும். 1977 க்கான பிரதான முதலீட்டுத் திட்டங்கள் வருமாறு: —

(அ) பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டங்களிலும் குறுகிய கால செய் திட்டங்கள் மீது செலவிடுவதற்காக 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது.

(ஆ) 1977 - 78 ம் ஆண்டுகளுக்கான மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் அபிவிருத்தி திட்டங்களின்படி மொத்தம்

18 கோடி ரூபா செலவில் 2800 செய் திட்டங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன. இச்செய் திட்டங்களின் குறிப்பிடத்தக்க பரிமாணம் 1977 ல் நிறைவேற்றப்படவுள்ளது.

(இ) கைத்தொழில்துறையில் முதலீட்டுக்காக 60 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க அளவு யூரியா உரப் பசளைத் திட்டத்துக்காகச் செலவிடப்படும். குறிப்பிடத்தக்க முதலீடு செலவிடப்படும் ஏனைய திட்டங்களாவன: உருக்கு ஆலைத் திட்டத்தின் 2 ம் கட்டம், எம்பிலிபிட்டியாவில் கடதாசி ஆலை, கண்ணாடித் தட்டு தயாரித்தல், பல்புகளுக்குக் கண்ணாடிகள் தயாரித்தல், கல்சியம் கார்பைட்டு தயாரித்தல், பருத்தி நூல் ஆலை, காஸ்டிக் சோடா, குளோரின் உற்பத்தியை விஸ்தரித்தல் என்பனவாகும்.

(ஈ) காணி அபிவிருத்தி, குடியேற்றம் என்பன தொடர்பான மகாவலித் திட்ட வேலைகள் தொடர்ந்து நடைபெறும். புதிதாக அபிவிருத்தி செய்யப்பட்ட காணியில் 20,000 குடும்பங்கள் குடியேற்றப்படும். இவ் வருடத்தில் பொறுப்பேற்கப்படும் பிரதான நீர்ப்பாசனத் திட்டம் 30 கோடி ரூபா செலவிலான லுனுகம் வெஹெர திட்டமாகும்.

(உ) பொருளாதார விருத்தித் துறையில் பிரதான ஒதுக்கீடுகள் இ. போ. சவுக்கு 600 பஸ்கள் வாங்குவதற்காகவும் சமனலவேவாத் திட்டத்துக்கும் (120 மெகாவாட் மின்சக்தி உற்பத்தி ஆற்றலுடன்) மற்றும் 200 கிராமங்களை உள்ளடக்கிய கிராமிய மின்மயமாக்கல் திட்டத்துக்கும் ஒதுக்கப்பட்டுள்ளவையாகும்.

## ஏற்றுமதிகள்

தற்போதைய அறிகுறிகளின்படி, இறப்பர் தேயிலை என்பன 1977 ல் உயர்ந்த விலைகளை தொடர்ந்து பெறும் எனத் தெரிகிறது. தேயிலையின் மாற்றுப் பண்டமான கோப்பியின் உயர் விலையும், தட்டுப்பாடும் 1977 முழுவதிலும் தேயிலைக்கு உயர்ந்த விலை பெற்றுத் தருமென எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோலியம் விலை அதிகரிப்பு, அதன் விளைவாக ஏற்படும் சிந்தாடிக் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பன காரணமாக 1977ல் ரப்பர் விலைகளும் மேலும் தேறும் என எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வளவினால் விலை அதிகரிப்பு ஏற்படும் எனக் கூறுவது கஷ்டமாகும். ஆனால் வரவு செலவுத் திட்ட உரையின் போது நிதி மந்திரி தேயிலையிலும் இரப்பரிலும் சராசரி இறாத்தலுக்கு 25 சதம் (சப்பலேற்ற முன்விலை) விலை அதிகரிப்பு எதிர்பார்ப்பதாகக் கூறினார். இந்த அடிப்படையில் தேயிலை மூலமான சம்பாதிப்பு 200 கோடி ரூபாவாகவும் இரப்பர் மூலமான சம்பாதிப்பு 100 கோடி ரூபாவாகவும் இருத்தல் வேண்டும். தேங்காயின் ஏற்றுமதி விலை மிக உயர்ந்ததாக இருக்குமென எதிர்பார்க்கப்படினும் ஏற்றுமதித் தொகை 20 கோடி தேங்காய்களினால் குறைவுபடும் என மதிப்பிடப்படுவதால் தேங்காய் ஏற்றுமதிச் சம்பாதிப்புகளில் வீழ்ச்சி காணப்படலாம். 1976 ல் இரத்தினக்கல் ஏற்றுமதியினால் கிடைக்கப்பெற்ற வருவாய் அதிகரிப்பு 1977 ல் மேலும் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 1977 ல் இரத்தினக்கல் ஏற்றுமதியால் 30 கோடி ரூபா வருவாயொன்றை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. கைத்தொழில் ஏற்றுமதிகளும் 1977 ல் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காட்சி தருகிறது. மொத்த ஏற்றுமதி 470 கோடி ரூபாவுக்கு நிகரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தை விட 35 கோடி ரூபா அதிகமாகும். உல்லாசப் பிரயாணத்துறை வருவாயும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் எமது சென்மதி நிலுவையும் குறிப்பிடத்தக்களவு மேலதிகம் காட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இறக்குமதிகள்

இறக்குமதியைப் பொறுத்தளவில் மாவினதும் அரிசியினதும் விலைகள் கடந்த வருடத்தை விடவும் குறிப்பிடத்தக்களவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவுடனான இரு தரப்பு ஒப்பந்தத்தின்படி, 1976 ல் கொடுத்த விலையையும் விட மிகவும் குறைந்த விலையில் சீனாவிடமிருந்து இலங்கை 200,000 தொன் அரிசியைக் கொள்வனவு செய்யும். எதிர்பார்க்கப்பட்ட 7 கோடி புசல் நெல் உள்நாட்டில் உற்பத்தியாகுமிடத்து அரிசி இறக்குமதி 1976 ஐ விடவும் பெருமளவு குறையும். எவ்வாறாயினும் இதனால் ஏற்படும் இலாபத்தின் ஒரு பகுதி அண்மையில் பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகள் பெற்றோலியத்தின் விலையை 5 - 10 % வீதம் அதிகரித்ததனால் ஏற்படும் விலை அதிகரிப்புக்கு ஈடு கொடுக்க உதவும். நாம் பெற்றோலியம் இறக்குமதி செய்யும் நாட்டைப் பொறுத்து எமது பெற்றோலியம் கொள்வனவுச் செலவு 5 முதல் 10 கோடி ரூபாவினால் அதிகரிக்கலாம். 1976 ல் 90 கோடி ரூபாவாக இருந்த எமது பெற்றோலியம் கொள்வனவுச் செலவு 1977 ல் 100 கோடி ரூபாவாக உயரலாம். பெற்றோலியம் விலை உயர்வு இரசாயன உரப் பொருட்களின் விலையையும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் கப்பற் கட்டணத்தினையும் உயர்த்தலாம். கைத்தொழில் நாடுகளில் நிலவும் பணவீக்கம் காரணமாக (இது தொடர்ந்து உயர் மட்டத்தில் இருக்குமென அறியப்படுகிறது) இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களினதும், மூலதனப் பொருட்களினதும் விலைகள் மிகக் கூடுதலாகவே இருக்கும். எவ்வாறாயினும், ஏற்றுமதி வர்த்தகத்தின் மூலம் கிடைக்கக் கூடிய கூடுதல் வருவாயும், உணவுப் பொருட்களின் இறக்குமதிக் குறைவினால் ஏற்படும் செலவு மிச்சமும் நாட்டின் இறக்குமதி ஆற்றலை கடந்த வருடத்தை விடக் கூட்டி விடும். மேலும் பெற்றோலியம் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பினால் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட நிதி போன்ற மூலங்களிலிருந்தும் ஏனைய மூலங்களூடாகவும் கடந்த வருடத்தை விட வெளிநாட்டு உதவிகளும், கடன் வசதிகளும் கூடுதலாகக் கிடைக்குமென அரசாங்கம் எதிர்பார்ப்பதால் அது நாட்டின் இறக்குமதி ஆற்றலை மேலும் அதிகரிக்கும். எவ்வாறாயினும் கடந்த வருடங்களில் போன்று இவ்வருடமும் பழைய கடன்களுக்கு நிதியீடுகள் வழங்குவதும் நாட்டின் வெளிநாட்டு வருவாயில் ஒரு பகுதியைக் குறைக்கச் செய்யும். கூடுதல் இறக்குமதி ஆற்றல் காரணமாக அரசாங்கம் கைத்தொழில்களுக்கான மூலப் பொருட்களுக்கு கூடிய தொகை வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கீடு செய்யலாம்.

(25 ம் பக்கம் பார்க்க)

## வியாபாரப் பொருள்கள்

# தேயிலைக்கும் வாசனைத் திரவியங்களுக்குமான காட் நிறுவன சலுகைகள்

1977 ஜனவரி ஆரம்பத்திலிருந்து 15 கைத்தொழில் நாடுகளிலிருந்து தேயிலை, கோப்பி, கொகோவா வாசனைத் திரவியங்கள் போன்ற பல பொருள்கள் சம்பந்தமாக அவற்றை உற்பத்தி செய்யும் வளர்முக நாடுகள் வியாபாரச் சலுகைகளைப் பெற இருக்கின்றன.

உலக வியாபாரத் தடைகளைக் குறைக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டு தாமதமாக நடைபெற்ற மூன்றாண்டு பேச்சுவார்த்தைகளின் பயனாக முதலாவதாகக் கிடைக்கப்பெற்ற உறுதியான பெறுபேறுகளே இச்சலுகைகள் என ராய்ட்டர் செய்திச் சேவை அறிவித்துள்ளது.

ஜெனிவாவில் அமைக்கப்பெற்றுள்ள தீர்வையும் வியாபாரமும் பற்றிய பொது உடன்படிக்கை காட் நிறுவகம் அறிவித்துள்ளவாறு ஒன்பது ஐரோப்பிய பொதுச்சந்தை நாடுகளும், பின்லாந்தும், நோர்வேயும், சுவீடனும், சுவிட்சர்லாந்தும், அவுஸ்திரேலியாவும், நியூசிலாந்தும் இச் சலுகைகளை வழங்கும்.

எதிர்வரும் மாதங்களில் ஆஸ்திரியாவும், கனடாவும், யப்பானும் இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடைசியான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வழிகோலிய 1973 இன் டோக்கியோ பிரகடனத்தில் முன்னுரிமைப் பாகுபாடு காட்டப்பட்ட உஷ்ண வலயப் பொருள்களே இந்தப் பண்டங்களாகும்.

அறிவித்தலுக்கு இணங்க உரையாடலின் போது 44 வளர்முக நாடுகள் 11 கைத்தொழில் நாடுகளிலிருந்து 290 வகையான பொருள்களுக்கு சலுகை வழங்க வேண்டும் எனக் கேட்டிருந்தன.

இறக்குமதிகளுக்கான வரியையும் தீர்வையும் நீக்கவும் அல்லது குறைக்கவும் மூன்றும் உலக நாடுகளின் சில பொருள்களை தீர்வையற்றவை யாக்கவும் அபிவிருத்தி நாடுகள் முன்வந்தன.

உஷ்ண வலய உற்பத்திகளைப் பற்றி உரையாடலில் ஈடுபட்ட 70 நாடுகளைக் கொண்ட குழு சலுகைகளை மேலும் சீராக்கும் வழிவகைகளை ஆராய்ந்தது எனப் பிரகடனம் அறிவித்தது.

பல்வேறுபட்ட உலக வியாபாரப் பேரம் பேசுதலில் ஈடுபட்டுள்ள ஏழு பல்வேறு பகுதிகளுள் ஒரு பகுதி சலுகைகளையும் அவற்றை நடைமுறைப் படுத்தலையும் மீள ஆராய்ந்து கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனவரி முதலாந் திகதியிலிருந்து பொதுச்சந்தை 22 பண்டங்களுக்கான அதன் பொது வெளிநாட்டுத் தீர்வையைப் பகுதியாக அல்லது முழுமையாக இடை நிறுத்தும். இவற்றுள் கோப்பி, கொக்கோவா என்பன அடங்கும். சத்து அற்றதாக்கப்படாத வறுத்த கோப்பிக்கான தீர்வை 7% இலிருந்து 5% வீதமாகவும் கொக்கோவாவின் தீர்வை 5.4% உம் 4% உம் இருந்து 3% ஆகவும் குறைக்கப்படும். சில மிளகு வகைகளும் வாசனைத் திரவியங்களும் இச் சலுகைகளினால் பயன் அடையும்.

புகையிலை உட்பட வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளைப் பாதிக்கும் 159 தீர்வை வகைகளுக்கான பொதுப் படையான முன்னுரிமைச் சலுகைகளைச் சீராக்கும் என ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம் கூறியுள்ளது.

உஷ்ண வலயப் பண்டங்களுள் சிலவற்றிற்கு உள் நாட்டிலான வரிகளை விதிக்கும் ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தைச் சேர்ந்த சில அங்கத்துவ நாடுகள் அவற்றை அதிகரிப்பதில்லை என உறுதி கூறி உள்ளன எனப் பிரகடனம் கூறியது.

### கோப்பி

பிரேஸில் கோப்பிக்கான கூடிய ஏற்றுமதி வரிகளையும் ஆகக் குறைந்த ஏற்றுமதி விலைகளையும் அறிவித்ததன் பயனாக நவம்பர் மாத இறுதியில் லண்டன் சந்தையில் கோப்பிக்கான விலைகள் உச்ச கட்டத்தை அடைந்தன.

இதற்கிடையில் 1976 இல் கோப்பி உற்பத்தி 20% ஆல் குறையும் என எப். ஓ. ஏ. நிறுவனம் முன் மதிப்பீடு செய்துள்ளது. பிரேஸில் நாட்டின் கோப்பி உற்பத்தி 330,000 தொன்களுக்கும் 570,000 தொன்களுக்கும் இடையில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

### கொக்கோவா

ஆபிரிக்காவில் உற்பத்தி வீழ்ச்சியுடன் பார்க்கையில் 1976 இல் கொக்கோவா உற்பத்தி 10% ஆல் குறையும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எப். ஏ. ஓ. மதிப்பீட்டுக்கு இணங்க நைஜீரியாவின் உற்பத்தி 15 ஆண்டுகளில் மிகக் குறைந்ததாக இருக்கும்.

நுகர்ச்சி அதிகரித்த அதே வேளையில் கணிசமான அளவினால் உற்பத்தி குறையும் என எதிர்பார்க்கப்பட்டதற்கு அமைய குறைந்ததினால் 1976 ஒக்டோபரில் கொக்கோவாவின் விலைகள் மிக உயர்ந்து விட்டன.

### தேயிலை

உற்பத்தி மீட்சியுறுகிறது: நவம்பரில் தேயிலை உற்பத்தி மீட்சியுற ஆரம்பித்ததுடன் இதுவரை நிலவிய உற்பத்தி வீழ்ச்சி குறைவுபட

**பிரதான பயிர் உற்பத்தி நாடுகளின் புள்ளிவிவரங்கள்**
(10 லட்சம் கிலோகிராம்களில்)

| நாடு | மாதப் பிரிவு | 1975 | 1976 | வருட மொத்தம் | 1975 | 1976 |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை .. | நவம்பர் | 12.6 | 18.4 | நவம்பர் வரை | 194.0 | 179.2 |
| வட இந்தியா .. | நவம்பர் | 40.0 | 34.4 | நவம்பர் வரை | 372.5 | 398.5 |
| தெ. இந்தியா .. | நவம்பர் | 8.1 | 10.6 | நவம்பர் வரை* | 96.4 | 101.9 |
| கென்யா .. | நவம்பர் | 7.1 | 7.2 | நவம்பர் வரை | 49.9 | 55.3 |
| உகண்டா .. | நவம்பர் | 1.8 | 1.5 | நவம்பர் வரை* | 16.5 | 13.8 |
| மாளாவி .. | அக்டோபர் | 1.3 | 1.7 | அக்டோபர் வரை | 20.5 | 24.6 |
| பங்களாதேஷ் .. | நவம்பர் | 3.0 | 3.1 | நவம்பர் வரை* | 27.9 | 30.8 |
| தன்ஸானியா .. | அக்டோபர் | 1.5 | 1.7 | அக்டோபர் வரை | 11.4 | 11.4 |
| இந்தோனேசியா .. | அக்டோபர் | 4.8 | 5.1 | அக்டோபர் வரை* | 47.2 | 48.8 |
| மொஸம்பிக் .. | ஜூலை | 0.5 | 0.6 | ஜூலை வரை | 10.4 | 10.8 |
| ருவண்டா .. | செப்டம்பர் | 2.6 | 3.6 | செப்டம்பர் வரை | — | — |
| | | | | | 866.1 | 845.7 |

* மதிப்பிடப்பட்டது

ஆரம்பித்தது. 1975 உடன் ஒப்பிடும்போது 1976 செப்டம்பர் இறுதியில் 2.04 கோடி கிலோகிராமினால் வீழ்ச்சியுற்றிருந்த தேயிலை நவம்பர் இறுதியில் 1.48 கோடி கிலோகிராமாக குறைந்தது. 1975 நவம்பரில் 17.84 கோடி கிலோகிராமாக இருந்த தேயிலை உற்பத்தி அதே காலப்பிரிவில் 1976 பரில்நவம் 17.92 கோடி கிலோகிராமாக அதிகரித்தது.

உலகின் மொத்த தேயிலை உற்பத்தி நவம்பர் இறுதியில் 1975ன் தொகையைவிடவும் 2.04 கோடி கிலோகிராமினால் அதிகரித்துள்ளது. இவ்வதிகரிப்புக்கு முக்கிய காரணம் 1975ஐ விடவும் 1.8 கோடி கிலோகிராம் கூடுதல் உற்பத்தி காட்டிய வட இந்தியப தேயிலை உற்பத்தி யாகும். கென்யாவின் தேயிலை உற்பத்தி 44 லட்சம் கிலோகிராமினாலும் மாளாவியின் உற்பத்தி 44 லட்சம் கிலோகிராமினாலும், பங்களாதேசின் உற்பத்தி 29 லட்சம் கிலோகிராமினாலும், தென் இந்தியாவின் உற்பத்தி 55 லட்சம் கிலோகிராமினாலும் அதிகரித்துள்ளது.

பிரிட்டனிலிருந்து கிடைக்கும் அறிக்கையின்படி உலகின் தேயிலை நுகர்வு குறிப்பாக மத்திய கிழக்கு, ரஷ்யா ஆகிய நாடுகள் என்பவற்றில் அதிகரித்துள்ளது. பிரிட்டனிலும் இப்போக்கு அதிகரிப்புக் காட்ட அரம்பித்துள்ளது. கோப்பியின் விலைகள் தொன்றொன்றுக்கு 81 பவுன் வரை உச்ச விலைக்காட்டுவதால் தேயிலைக்கு அதிக கிராக்கி ஏற்படும் எப்பதையிட்டு முன்னணித் தரகர் நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

**தகவல்**

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பித்தது. அறிவுமட்டம் அதிகரித்ததன் விளைவாக மேலும் நூலக வசதிகளின் தேவை அதிகரிக்கவே நாடெங்கும் பரந்தளவில் சிறு சிறு நூலகங்கள் ஆரம்பிக்கப்படலாயின. கடந்த இரு தசாப்தங்களில் ஆராய்ச்சி நிறுவகங்கள், அரசாங்கத் திணைக்களங்கள், முகவராண்மைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக விசேட நூலகங்கள் தோன்றலாயின.

இவ்விதமாக இலங்கையில் பாடசாலை, பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி மட்டத்திலும், அரசாங்க திணைக்கள, நிறுவக மட்டத்திலும் பல்வேறு நூலகங்கள் உள்ளன. நூலகங்களின் அபிவிருத்தி திட்டமிடப்படாமலேயே நிகழ்ந்துள்ளது. இந் நூலகங்களை செயற்படுத்துவதற்கான நிதிகள் போதாதுள்ளதுடன் அவை தேசிய திட்டமொன்றுடன் எதுவித தொடர்புமற்ற தன்னிச்சையான சிறு குழுக்களினால் நடத்தப் படுபவையாகும். இந்த நூலகங்களை நடத்துவதற்காக பயிற்சிபெற்ற நபர்களின் பற்றாக்குறையுள்ளதோடு வசதிகளும் மட்டுப்படுத்தப்பட்டவைகளாகவே யுள்ளன.

1968 ல் தேசிய விஞ்ஞானக் சழகத்தை நிறுவியதன் மூலம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் விஞ்ஞானக் கொள்கைக்கும் அளிக்கப்பட்ட ஊக்கம் நாட்டில் விஞ்ஞான தொழில் நுட்ப தகவல்களின் மூலவளங்களை ஒன்றிணைக்கவும், அபிவிருத்தி செய்வதற்குமான அமைப்பொன்றை நிறுவுவதற்கான உந்தூக்கத்தை அளித்தது. நாட்டிலும் வேறிடங்களிலும் உற்பத்தியாகும் பெருமளவு தகவல்களை சேமித்து வைப்பதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட தகவல் பணி நிறுவகமொன்றின் அவசியம் இதனால் தெளிவாகியது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப ஆவணப்படுத்தல் மத்திய நிலைய மொன்றை ஏற்படுத்த யுனெஸ்கோ நிறுவகம் யோசனை கூறியது.

அதே வேளையில் 1970 ல் தேசிய நூலக சேவைகள் தாபிக்கப்பட்டதுடன் நூலக சேவைகளை ஒழுங்குபடுத்துவதிலும் அபிவிருத்தி செய்வதிலும் மற்றும் பொது, பல்கலைக்கழக, தொழில் நுட்ப, பாடசாலை, அரசாங்க மற்றும் விசேட நூலகங்களை மேம்படுத்தவும் அபிவிருத்தி செய்வதிலும் திட்டமிடவும் உதவிகள் வழங்கவும் அதற்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டன. மேலும் இலங்கைக்கு ஒரு தேசிய நூலகத்தை தாபிக்கும் பொறுப்பும் அதற்கு வழங்கப்பட்டது. தேசிய நூலக சேவைகள் சபை, தனது நடவடிக்கைகளின் மூலம் நூலக அபிவிருத்தியை திட்டமிடும் என்றும் பல்வேறு நூலக சேவை நிலைகளை ஒருங்கிணைத்து தகவல் பணி யமைப்பு முறையொன்றை ஏற்படுத்துமெனவும் பிரதிபண்ணுதலையும் விரயத்தையும் தவிர்க்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

## வர்த்தக மாற்று விகிதம் வீழ்ச்சியுறுவது பற்றிய கசப்பான உண்மைகள்

மூலப் பொருள்களையும் வியாபாரப் பொருள்களையும் ஏற்றுமதி செய்யும் மூன்றும் உலக ஏற்றுமதியாளர் வர்த்மகமாற்று விகிதம் சீர்கேட்டினை எதிர்நோக்குவதற்கான சிறந்த எடுத்துக் காட்டாக தேயிலை அமைகிறது. ஓர் அங்டாட் ஆய்வுக் கிணங்க 1954 க்கும் 1970 க்கும் இடைப்பட்ட காலத்தில் 152 கோடி மக்களைக் கொண்ட 48 நாடுகள் வர்த்தக மாற்று விகித வீழ்ச்சியை எதிர்நோக்கின. 1962 இலிருந்து 14 ஆண்டுகளில் ஆண்டு தோறும் 50 கோடி டொலர்களை இலங்கை இழந்துள்ளது. எமது வியாபாரப் பொருள்களின் உண்மையான விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக எமது இறக்குமதிகளுக்காக நாம் செலுத்தும் விலைகளைக் கருத்தில் கொண்டு எமது பிரதமர் நியூ யோர்க்கில் ஐ. நா. பொதுக் கூட்டத்தில் இவ்வாண்டு செப்டெம்பர் 30 ஆந் திகதி உரை நிகழ்த்திய பொழுது இவ்வாறு கூறினார்:

''இலங்கையின் ஏற்றுமதிப் பெறுமானத்தில் 50 சதவீதத்துக்கும் அதிகமானவற்றை தேயிலை பெற்றுத் தருகிறது. எமது தேயிலை உற்பத்தியை அதிகரித்துள்ளோம். பல்வாண்டு காலமாக அதன் தரத்தை உயர்த்தி உள்ளோம். 1962 இலிருந்து 14 ஆண்டுகளாக அதன் உண்மையான விலையை நோக்கி வருகிறோம். இறக்குமதிகளுக்காக நாம் செலுத்தும் விலையின் அடிப்படையில் அதனைவிட 70 சத வீதத்துக்கும் அதிகமானதாகும். ஆண்டுதோறும் இலங்கை 50 கோடி டொலர்களை இழக்கிறது என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. எமது தேசிய நாணயத்தில் குறிப்பிடுவது என்றால் இத்தொகை ஏறத்தாழ 600 கோடி டொலர்களாகும். இது எனது நாட்டின் முழு வரவு செலவுத் திட்டத்தினதும் ஓர் ஆண்டுக்கான தொகையாகும். இத்தகைய ஒரு பொருளியல் கட்டுக்கோப்பில் எவ்வளவு காலத்துக்கு எவ்வளவு தூரத்துக்கு இக்காலமனித வர்க்கம் அல்லது அதன் ஒரு பகுதியாயினும் செல்வமாயிருக்க முடியுமா? அல்லது உயிருடன் தான் வாழ முடியுமா?'' இப்போதைய பொருளியல் ஒழுங்கில் தமது நாடு அனுபவிக்கின்றவற்றை எடுத்துக் கூறி ஐ. நா. பொதுச் சபையில் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் உரை நிகழ்த்தும் பொழுது இவ்வாறு கேட்டார்.

( சிறப்புக் கட்டுரை )

# உயிர் வாழ்வன எல்லாம் நீரிலிருந்து உற்பத்தியானவை

— யஹியா அப்துல் மஜீத்

நீர் ஒரு அடிப்படை வளமாகும். ஆனால் இது எல்லாக் காலங்களிலும் எல்லாராலும் சுலபமாகப் பெறக்கூடிய ஒன்றல்ல. பாக்கியவான்களான ஒரு சிலரே (உலகக் குடிசனத் தொகையின் ஐந்தில் ஒரு பங்கினரே) குழாயைத் திருப்பியதும் நீர் பெறக் கூடிய வாய்ப்பினராய் உள்ளனர். எஞ்சியுள்ள ஐந்தில் நான்கு பங்கினர்க்கு — (இப் பங்கினர் மத்தியில் சில இந்தியக் கிராமங்களில் உள்ளோரும், ஆபிரிக்க நாடோடிகளும், இலத்தின் அமெரிக்க நகரங்களின் மோசமான நெருக்கு வாசிகளும் வேறு சிலரும் அடங்குவர்) — நீர் பெறுவதென்பது அவர்களது நாளாந்த ஜீவமரணப் போராட்டங்களில் ஒன்றாகும். நீர் நச்சுத்தன்மையடையும் போது — இது அடிக்கடி நிகழ்வது — நோய்க்கும் மரணத்திற்கும் காரணமாய் விடுகிறது. நவீன சக்திழுக்கித் தொழில் நுட்பம் அதன் நீர்த்தேவைக்கழிவு போக்கியோடு சேர்ந்து நீர்த் தட்டுப்பாட்டை மோசமாக்கி விடுகிறது. மிகையான கைத்தொழில்மயப் பிராந்தியங்களில் அதிகரித்து வரும் வீட்டுப் பாவனை, விவசாய, கைத்தொழில், பொது சுகாதாரத் தேவைகள் ஒன்றோடொன்று போட்டியிட்டு வருகின்றன.

1977 மார்ச் 14 முதல் 25 வரை ஆர்ஜென்டீனாவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் நீர் மகாநாடு, இன்றிலிருந்து 2000 மாவது வருடம் வரை தோன்றக்கூடிய நீர் தேவைகள் மீதான உலகம் பூராவுமுள்ள திட்டமிடுவோரின் கவனத்தைத் தன் பக்கம் இழுக்கும்.

சூடானில் ஐந்து வருடங்கள் நீர்ப்பாசன, நீர்மின்சக்தி அமைச்சராக இருந்த ஜனாப். அப்துல்மஜீத் நீர் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பாரிய அனுபவம் பெற்றவர். ஈராக்கிற்கும் சிரியாவிற்கும் இடையிலுள்ள யூபிரெட்டிஸ் ஆற்றுப் பிணக்கிற்காக அரபு லீக்கிற்காக உருவாக்கப்பட்ட தொழில் நுட்பக் குழுவின் தலைவராக அண்மையில் இவர் இருந்திருக்கிறார். 1960 முதல் 1969 வரை நைல் நதி நீம் நீருக்கான நிரந்தர இணைத்தொழில் நுட்ப ஆணைக்குழுவின் நிர்வாக உறுப்பினராகவும் இவர் இருந்துள்ளார். இவரே இம் மாநாட்டின் செயலாளர் நாயகமும் ஆவார்.

உயிர் வாழ்வன எல்லாம் நீரிலிருந்து உற்பத்தியானவை என்ற மேற்கோள் நீரினது இன்றியமையாத முக்கியத்துவத்தை எடுத்துக் கூறும். இத்தகைய அவசியமான வளமின்றி உயிர் வாழ்வே இல்லை. இந் நீரின்றி மனிதன் வாழவோ, வளரவோ, அபிவிருத்தி காணவோ முடியாது. நீரென்ற கருவி மூலம் மனித இனம் பசியை விரட்டி, கைத்தொழிலை உயிர்ப்பாக்கி, சக்தியை விருத்தி செய்து, நோய்களை ஒழித்து வர்த்தகத்தையும் போக்குவரத்தையும் முன்னேற்றி களிகொள் வழிகளைச் செழிப்பாக்கி இன்னும் அதிக பல வழிகளில் வளம் காண்கிறது.

இக் கிரகத்திலுள்ள நீர்த் தொகை அளவு குறிப்பிட்ட நிலையானது. மரத்தைப் போல் அதிகரித்துக் கொள்ளவோ, கரியைப் போல் குறைத்துக் கொள்ளவோ முடியாது. உபயோகிக்கத்தக்க நீரினதுநிரம்பல் நிலையாக இருக்க இதனது கிராக்கி அதிகளவில் உயர்ந்துள்ளது. அண்மைய வருடங்களில் உலக குடிசனத் தொகை உயர்ந்துள்ளதினால் (இந் நூற்றாண்டின் இறுதியில் இக் குடிசனத் தொகை இரட்டிப்பாகி விடுமென நிபுணர்கள் கூறுகின்றனர்) விவசாயத்திலும், கைத்தொழிலிலும் இதன் உபயோகம் வேகப்படுத்தப்பட்டுள்ளது. இப்போதே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதுவிடில், உலகத்தின் சில பகுதிகளில் ஆபத்தான தட்டுப்பாடு எனப்படுவதும், வேறு இடங்களில் மனச்சட்சிக்கு விரோதமான விரயம் எனப்படுவதும் உலக நெருக்கடி ஒன்றைத் தோற்றுவிக்கும்.

இக் காரணத்தினாலேயே மார்ச்சு மாதத்தில் ஆர்ஜென்டீனாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் நீர் மகாநாடு பாரிய முக்கியத்துவம் பெறுகிறது. மார்ச்சில் அம் மகாநாடு 150 நாடுகளின் பிரதிநிதிகளோடு கூடும் போது எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கைத் தரத்தை அச்சுறுத்தும் பெரிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பம் சர்வலோக சமூகத்திற்கு வழங்கப்படும்.

**இன்றிருக்கும் சூழ்நிலையை ஆராய்தல்:**

* உலக நகர வாசிகளின் ஐந்தில் ஒரு பகுதியினரும், கிராம வாசிகளின் நாலில் மூன்று பங்கினரும் நியாய பூர்வமான குடிநீர் நிரம்பல்களைப் பெறுவதில்லை. பல நாடுகளில் நகரக் குடிசனங்களின் அரைப் பங்குக்கு குறைந்தோரும், கிராமியக் குடித்தொகையில் பத்தில் ஒரு பங்கினருமே போதியளவு பாதுகாப்பான நீர் நிரம்பலைப் பெறுகின்றனர்.
* நிலத்திற்கடியிலுள்ள நீர் நிரம்பல்கள் செலவளிக்கப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் நிலத்தின் அடி வளங்களும், நில மேல் வளங்களும் பல பிராந்தியங்களில் குறைந்து கொண்டே வருகின்றன.
* பரந்து வரும் கைத்தொழில் மயப்படுத்தலும், அதிக சக்தி உபயோகமும், அதிகரித்த விவசாய நடவடிக்கைகளும், நச்சுக் கலவை மூலகங்களினதும் வேறு நச்சுறுத்திகளினதும் உபயோகத்தினால் கிடைக்கக்கூடிய நீரின் தரத்தை வேகமாக மோசப்படுத்தி வருகின்றன.
* அதிகரித்து வரும் கட்டுப்பாடற்ற குடிசனத் தொகைச் செறிவினாலும் பெரிய நகர பாங்கான பிரதேசங்களிலுள்ள நீர் நிரம்பல் மலினப்படுத்தப் படுகின்றது. இது கழிவகற்றுவதில் பிரச்சினையை ஏற்படுத்தி பின் சூழியியல் ஆரோக்கியத்தை அபாயத்திற்குள்ளாக்குகிறது.
* நீர் உபயோகம் அடிக்கடி தேவையற்ற முறையிலும், திறனற்ற முறையிலும், விரையப்பாங்காகவும் மேற்கொள்ளப் படுகிறது.
* நீர் அபிவிருத்திக்கான அதிக விலையுள்ள தொழில் நுட்ப சாதனங்களைக் கொள்வனவு செய்தல் (பற்றாக்குறைக்கு ஈடு செய்வதற்காக). பல பிராந்தியங்களில் போதாக்குறையான வளங்களை இளைப்படையச் செய்கிறது.
* கிடைக்கக்கூடிய தண்ணீருக்கான கிராக்கி உத்வேகப்படுத்தப்படுவதால் உபயோகிப்பாளர் மத்தியில் உரிமைகள் - சலுகைகள் தொடர்பான முரண்பாடுகள் அதிகரிக்கச் செய்யப்படுகின்றன.

கொள்கையளவில் பூமியிலுள்ள நீர் கையிருப்பு விசாலித்த மனிதத் தேவைகளை ஈடுசெய்யக் கூடியதாகும். உப்புச்சார மகற்

றல், ஆவியாக்கி வடிகட்டுதல், ஆறுகளை வழிப்படுத்துதல் போன்ற பாரம்பரியமற்ற நீர் நிரம்பல்கள் உலக நீர் வளங்களை அதிகப்படுத்தலாம். யதார்த்தமாய் பார்க்கையில் நாடுகள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் தர்மார்த்தமாக நீர் விநியோகம் இடம் பெறுவதில்லை. பாரம்பரியமற்ற நீர் நிரம்பல்களும், அவற்றினை அதிகமாக வேண்டி நிற்கும் பல நாடுகளின் தகுதிக்கு மிஞ்சிய அதியுயர்ந்த விலையில் உள்ளன. ஏமாற்றத்துக்குள்ளான நிலையில் நீர் தவறான இடத்திலும், தவறான நேரத்திலும், தவறான தரத்திலும் கிடைக்கக் கூடியதாய்க் காணப்படுகிறது. சகல சமூகங்களும் ஒரு வழியிலோ பிற வழிகளிலோ எவ்வளவுதான் செல்வம் பொருந்தியவையாயோ வறுமையானவையாயோ இருந்தபோதிலும் இதனால் பாதிக்கப்படவே செய்கின்றனர்.

மனித இனத்தை எதிர்நோக்கும் சகல பெரிய சவால்களும், அதிகளவிலான மனித கௌரவம் நீதி, பாதுகாப்பு போன்றவற்றோடு கூடிய சிறந்த வாழ்க்கைக்கான அதிகபட்ச மனித இனத்தின் சகல அபிலாஷைகளும், அதிகப்படியான நீர் உபயோகத்தை வேண்டி நிற்கின்றன. அடிப்படை மனித இன வாழ்விற்கும், ஜீவதாரத்துக்கும் போதுமான நல்ல தரமான நீரை வழங்காது எமது மக்களின் வாழ்க்கைத் தராதரங்களை உயர்த்த நினைப்பது இயலாத தொன்றாகும். சவாலிடும் அக்கிராக்கிகளையும், தேவைகளையும் ஈடு செய்யக்கூடிய தெளிந்த நீரின் வளர்ந்து வரும் நிரம்பல்களை உத்தரவாதப் படுத்துதற்கு அவை தொடர்பான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலன்றி சூழியியல், உணவு, மனித உறைவு போன்றவை மீதான இம் மகாநாட்டின் துணிச்சலான தீர்மானங்களினாலும், ஒரு புதிய சர்வதேசபொருளாதார முறைமைக்கான உலக ஆசைகளினாலும் எந்தவித பயனும் ஏற்படப் போவதில்லை

குடி நீருக்கான அதிக தோற்றப்பாடான தேவை மக்களுக்கும் கால்நடைகளுக்கு மானதாகும். குழாயைத் திருப்பியதும் நீர் பெறுவதற்கு பழக்கப்பட்டவர்கள் சில வேளைகளில் மற்றவர்களுக்கு அந்நீர் விலைமதிப்பற்ற ஒரு பொருள் என்பதை உணர்வதில்லை. அபிவிருத்தி காணும் நாடுகளிலுள்ள கிராமிய குடிசனத்தொகையின் நாலில் மூன்று பங்கிற்கு மதிகமானோர், அவர்களது அத்தியாவசிய தேவைகளை ஈடு செய்யக் கூடிய நியாயமானளவிற்கு நற்தரம் வாய்ந்த நீரின் போதுமான நிரம்பல்களை அடைவதில்லை. இன்று மனித இனத்தை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மிக மோசமான சுகாதாரக் கேடுகள் சிலவற்றின் மூலாதாரமாயிருப்பது தரக் குறைவான நீரும் நீர்த் தட்டுப்பாடும் ஆகும். இத்தகைய மிகப் பரவலான நிலை தொடர்ந்திருப்பது அனுமதிக்கப்படுமானால் இது எமது நாகரிகத்திற்கே ஒரு இழுக்காகும். குடிப்பதற்குத் தேவையான நீருடன் உணவுக்கான நீர்த் தேவையும் சேர்க்கப்பட வேண்டும். உலக விளைச்சல் திறன் கொண்ட பரப்பளவில் ஆகச் சிறிய ஒரு பாகமே நீர்ப்பாசன நிலங்களைக் கொண்டுள்ளன. இச் சிறு பங்கின் ஆக்கத்திறன்கூட முழு அளவில் பெற்றுக் கொள்ளப்படவில்லை. ஐக்கிய நாடுகள் நீர் மாநாடும் ஐ. நா. பாலைவன மயமாதல் மாநாடும் ஒரு வருடத்திலேயே நிகழ்வது குறிப்பிடத்தக்க ஒரு விஷயமாகும். அவை யொன்றுக்கொன்று அனுசரணை யானவை. இவை இரண்டுமே சேர்ந்து உலகத்திற்கு அதன் அடிப்படைப் பெரும் பிரச்சினையான நீர்வளப் பிரச்சினைக்கு புதிய ஒரு தொடக்கத்தைக் கொடுக்க உதவுவதுடன் அதிவேகமான குடிசனத்தொகை வளர்ச்சியின் கீழும் பற்றாக்குறையின்கீழும் நிலம் நீர் நிர்வாகத்தை செவ்வனே கொண்டு நடத்த உதவியளிக்கும்.

இன்று உலகில் ஏற்பட்டிருக்கும் எரிபொருள் நெருக்கடிச் சூழ்நிலையில் பல அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நீர்மின் சக்தி விசேட முக்கியத்துவத்தை உறுதி யளிக்கிறது. அத்தோடு பயன் படுத்தப்படாத பல நிறை திறன்கள் பயன் தருவதற்குக் காத்திருக்கின்றன.

நீர் விடயத்தில் மற்றொரு முதன்மைக் கோரி கைத்தொழிலாகும். இது தனது கைத்தொழிற் சாதனங்களை குளிர்ச்சி யூட்டுதற்கும் சுத்திகரிப்பதற்கும் நீரை வேண்டி நிற்கிறது. கைத்தொழில்களின் இந் நீர்விடாய் அதிக அளவில் அபிவிருத்தி யடைந்துள்ள நாடுகளின் விவசாயத் தேவையையும் வீட்டு உபயோகத் தேவைகளையும் மிஞ்சியதாகும்.

நீர் அபிவிருத்திக் கைங்கரியத்தைக் கையாளத் தேவையான வளங்களைத் திரட்ட சர்வதேச சமூகம் மேற்கொள்ளும் முயற்சியினாலும் அரசாங்கங்கள் மேற்கொள்ளும் பிரதான முயற்சிகளினாலுமே இத்தகைய பாரிய தேவைகளை ஈடு செய்யலாம். இத்தகைய விரிவான அணுகுதலுக்கு இம்மாநாடு உதவ வேண்டும். இது குறிக்கும் இலக்குப் பேற்றை அடைதற்கு 15 முதல் 25 வருட நோக்குத் திட்ட மொன்றை ஏற்படுத்துவது உசிதமாகும்.

தேவைப்படும் முயற்சியின் பரிமாணம் உண்மையில் உறம்ச்சியான ஒன்றாகும். நீரின் தேவையுள்ள சகலருக்கும் நியாயமான தரத்திலுள்ள நீரைப் போதியளவுக்கு வழங்குவதனால் ஏற்படும் செலவு 600 கோடி டாலர் என மதிப்பிடப்பட்டுள்ளது. விவசாயத் துறைக்கான தேவைகள் இதைவிட அதிகமானதாய் இருக்கலாம்.

ஆனால், இத்தகைய பாரிய திட்டங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் படுவதற்கு முன்பிருந்ததை விட அதிக வேகமான வீதத்தில் பொறியியலாளர்களையும், பூவியலாளர்களையும், நிர்வாகிகளையும் விருத்தியலுவலர்களையும் மற்றோரையும் தயார் செய்யும் முன்னீடில்லாத முயற்சிகள் தேவைப்படும்.

எமது நன்றாக அதிகரித்த நீர்த் தேவைகளுக்கு ஈடு செய்வதற்கு புதிய நீர் வளங்களில் மட்டும் நாம் நம்பி இருக்க முடியாது. மித மிஞ்சிய உபயோகம் அல்லது நிலத்திற்குக் கீழுள்ள நீர்வளங்களைத் தேடிப் பிடித்து உபயோகிப்பது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும். அதிர்ஷ்டவசமாக வினைத் திறமையான விநியோகத்தின் மூலமும், உபயோகத்தின் மூலமும், முன்னர் தெளிந்த நீரை உற்பத்தி செய்து, இப்போது அசுத்தமாக்கப்பட்ட சிற்றாறுகளையும், குளங்களையும், ஆறுகளையும் புனராக்கம் செய்வதன் மூலமும் பெறப்பட்ட நீர்ச் சேமிப்புகளில் பாரிய நிறைதிறன் உண்டு.

எமது முயற்சி பலிதமாவதற்கு என்னை நம்பிக்கைகொள்ள வைக்கும் வாய்ப்புக் கருத்து என்னவெனில் மனித இனத்தின் மேம்பாட்டுக்கான எமது சகல சர்வதேச திட்டங்களும், சந்திக்கும் முனையை நீர் பிரதிபலிக்கின்றது என்பதாகும்.

# தேசிய மயத்துக்கு முன்னர் பெருந் தோட்டத்துறை

— டொரிக் டி சூஸா

> பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சின் முன்னாள் காரியதரிசியான திரு. டொரிக் டி சூஸா கம நல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தில் நிகழ்த்திய ஒரு உரையின் சுருக்கமே இதுவாகும்.

பெருந் தோட்டத் துறையில் நெருக்கடியான மாற்றங்கள் ஏற்பட்டு வரும் ஒரு காலகட்டத்தின் ஆரம்பத்தில் நாமிருக்கின்றோம். நூற்றாண்டு பழமை வாய்ந்த இந்த அமைப்பு முறையை பரிசீலிப்பதில் நாம் பெருந் தோட்டத் துறையின் வேறுபட்ட அம்சங்களான அதாவது நிலம், உழைப்பு, மூலதன முதலீடு, முகாமைத்துவம், தொழில் நுட்பம் சந்தை மற்றும் புற அமைப்பு முறைகள் என்பன பற்றி குறிப்பிடல் வேண்டும்.

1972 ம் 1975 ம் ஆண்டுகளின் காணிச் சீர்திருத்தச் சட்டங்களின் மூலம் நாட்டின் மொத்த நிலப் பரப்பின் 1/15 பங்கினதான 10 லட்சம் ஏக்கர்களுக்கு கூடிய பரப்பளவு நிலம் அரசாங்கத்தின் உடமையாகியது. அரசாங்கம் பொறுப்பேற்ற இந் நிலப் பரப்பில் 363,000 ஏக்கர் தேயிலை நிலப் பரப்பும், 176,000 ஏக்கர் இரப்பர் தோட்டங்களாகவும் 120,000 ஏக்கர் தென்னந் தோப்புக்களாகவும் அமைந்துள்ளன. இவற்றுள் ஸ்டர்லிங் மற்றும் ரூபாய்க் கம்பனிகளுக்கு 237,000 ஏக்கர் தேயிலையும், 95,000 ஏக்கர் இரப்பரும், 6,000 ஏக்கர் தென்னையும் சொந்தமாயிருந்தன. இக் கம்பனிகளுள் சில பிரிட்டனிலும் சில இலங்கையிலும் கூட்டிணைக்கப்பட்ட போதிலும், பெருந் தோட்டங்களை நிருவகிப்பதைப் பொறுத்த வரையில் ஸ்டர்லிங் கம்பனிகளுக்கும் ரூபாய் கம்பனிகளுக்குமிடையிலான வேறுபாடுகள் அவ்வளவு அவசியமல்ல.

புராதன இலங்கையில் நிலம் பயன் படுத்தப்பட்ட முறை மண்ணை ஒரு வளமாகப் பேணிப் பாதுகாப்பதாயிருந்தது. அக்காலங்களில் தாழ்ந்த பிரதேசங்களில் வயல் நிலங்களும், மலை நாட்டில் புற்தரைச் செடிகளும் சரிவு நிலங்களில் பெருமரங்களும், வீட்டுத் தோட்டங்களும் (அண்மைக் காலத்தில் கண்டிய வனத் தோட்டங்கள் எனப் பெயர் குறிப்பிடப்பட்டவை) இருந்தன. இந்த முறை நிலம் பயன்படுத்தல் மண்ணைப் பாதுகாக்கக் கூடியதாயிருந்தது. இப்பொழுது கம்பளையிலிருந்து நாவலப்பிட்டிக்கும், ஹட்டனுக்கும் போவீர்களானால் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கை மண்ணுக்கு என்ன செய்துள்ளது என அறிந்து கொள்ளலாம். நீர் போகும் போது உமது இடது புறம் மண்ணே இல்லாது தேயிலை நிலங்களையும், வலது புறம் மண் வளத்தைப் பாதுகாக்கும் முறையிலான கண்டிய வீட்டுத் தோட்டங்களையும் காணலாம். மொத்தத்தில் பெருந் தோட்டத்துறை மண் வளத்தை வீண் விரய நிலைக்கு மாற்றியுள்ளது. 1955 ம் ஆண்டளவில் மண் பாதுகாப்புக்கான திட்டமொன்றை அமுல் நடத்த கம்பனி நிர்வாகங்கள் பொறுப்பேற்ற போதிலும் பெருந் தோட்டத் தேசிய மயம் பற்றிய முதலாவது அச்சுறுத்தல் வந்ததுமே அவைகளை அமுல் நடத்தாது விட்டன.

ஒரே பயிரைப் பயிரிடும் தொழில் நுட்பமும், 20 வருட கால மண் வளப்புறக் கணிப்பும் மண்ணை விரயமடைந்த வளமாக்கியுள்ளது. இந் நிலங்களின் புதிய உரிமையாளர்கள் என்ற முறையில் அரசாங்கத்தை எதிர் நோக்கும் பெரும் பணி இம் மண்ணை புனர்வள மூட்டலாகும்.

இந் நிலங்களின் மற்ற அம்சம் என்னவெனில் தோட்டப் பயிர்ச் செய்கையாளருக்கு வசதியான முறையில் அவர்களுக்கு இந்நிலங்களைப் பெற்றுக் கொடுக்க அன்றைய அரசாங்கம் கையாண்ட சட்ட ஏமாற்று முறையாகும். அரசாங்கம் இந்நிலங்களை முழுமையாகப் பெற்று முன்னணிப் பெருந் தோட்டச் செய்கையாளருக்கு ஏக்கரொன்று 50 சதம் விலையில் பெருங் கண்டங்களாகவும் மொத்தமாகவும் விற்பனை செய்தது. தேயிலை பயிரிடப்பட்ட நிலங்களுக்கும், இரப்பர் அல்லது தென்னை பயிரிடப்பட்ட நிலங்களுக்குமிடையில் தற்செயலான ஒரு வேறுபாடுண்டு. தேயிலை நிலங்கள் மொத்தமாக விற்கப்பட்ட அதே வேளையில் ஏனைய பயிர்களுக்கான நிலங்கள் கிராமவாசிகளிடமிருந்து பெறப்பட்டன.

மூலதன முதலீடு, பரந்தளவில் கூறுவதாயின் உழைப்பும் நிலையான மூலதனமும் உள்ளூரிலிருந்தே பெறப்பட்டன. மிகக் குறைந்தவையே வெளியிலிருந்து கொண்டு வரப்பட்டன. 1948 லிருந்து தனியொரு பென்சு (பிரி. நாணயம்) தானும் பிரிட்டனிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்படவில்லை. பெருந் தோட்டத் துறைக்குத் தேவையான நிதி கூட உள்ளூர் வங்கிகளில் கடன் பெறுவதன் மூலமே நிறைவேற்றப்பட்டன. எனவே தோட்டத் துறையில் வெளிநாட்டார் இட்ட உண்மையான முதலீடு மிகவும் புறக்கணிக்கத் தக்கவவாகும்.

பெருந் தோட்ட அமைப்புக்கு முக்கியமான மற்றுமொரு காரணி உழைப்பாகும். உள்ளூரில் இவ்வுழைப்பைப் பெறமுடியாத நிலையில் இந்தியாவில் பட்டினி நிலைக்குக்கீழ் வாழ்ந்து கொண்டிருந்த பெருந் தொகையான மக்கள் இறக்குமதி செய்யப்பட்டனர். இறக்குமதி செய்யப்பட்ட இந்த உழைப்பாளிகளில் 10 சதவீதத்தினர் வரும் வழியிலேயே மரணித்தனர். சிலர் மன்னாரைக் கடந்ததும் மலைநாடு வரை நடக்க வேண்டியிருந்தனர். தங்களது எஜமானர்களுக்கு அடிமைகளாக அவர்கள் உழைத்துக் கொடுத்தனர். இங்கு வேலையில்லா விட்டால் அல்லது பெருந் தோட்ட வர்த்தகத்தில் வீழ்ச்சி காணப்பட்டாலோ அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிவிட வேண்டும் என்ற நிபந்தனையில் வந்த குடியேற்ற வாசிகளாகவே அவர்கள் இருந்தனர். அவர்கள் வெள்ளையர்களிலிருந்தும், கிராமத்தவர்களிலிருந்தும் வேறுபடுத்தி வைக்கப்பட்ட அந்நியர்களே. அவர்கள் இன்றும் முற்றாக வேற்று நாட்டவர்களாகவே திகழ்கின்றனர். இலங்கையின் வருவாயின் முழு மேலதிகமும் இத் துறையிலிருந்தே கிடைக்கின்றது. குடியேற்ற யுகத்தின் இறுதிக் காலத்தில் இந்திய அரசாங்கம் இந்த இந்திய குடியேற்ற வாசிகள் மீது அக்கறை கொண்டு இந்திய முகவராண்மையொன்றை இங்கு ஏற்படுத்தியது. இந்த உழைப்போர் அணி தனக்குப் பங்கில்லாத உலகைத் தாங்கி நிற்கும் ஒரு பெரும் பூதத்தை யொத்தது. சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இந்நிலையை மாற்றியமைக்குமென நான் கருதுகின்றேன்.

இன்று பெருந் தோட்டத் துறையில் தொழிலாளர் மேலதிகமாயுள்ளனர். உண்மையில் 40 முதல் 50 சதவீதமான தோட்டத் துறை தொழிலாளருக்கு வாரத்துக்கு 3 நாட்களே வேலை வழங்கு

கிறது. 40 சத வீதமானவை வாரம் 4 நாட்களும் 10 சத வீதமானவையே வாரத்திற்கு 5 அல்லது அதற்கு கூடுதலான நாட்களும் வேலை வழங்குகின்றன.

தோட்டத் துறைகளில் விலைகளுக்கும் சம்பளங்களுக்குமான விகிதாசாரம் கடந்த 25 வருடங்களில் பெரும் வேறுபாடு கண்டுள்ளது. 1955 ல் தேயிலைத் தோட்டத் தொழிலாளி ஒருவரின் சம்பளம் நாளொன்றுக்கு 1 ரூபா 50 சதமாக இருந்தது. 1 இருத்தல் தேயிலையின் விலையும் அதுவாகவே இருந்தது. இன்று ஒரு இருத்தல் தேயிலையின் விலை 2-3 ரூபாவாக உள்ளது. சுமார் 9 ரூபா அளவில் ஒரு தொழிலாளிக்கு சம்பளம் கொடுபட வேண்டியுள்ளது. இந் நாட்டில் இம்முறை தொடர்ந்திருக்க வேண்டுமாயின் அது இன்றைய சம்பளத்தில் நடைபெற முடியாது என்பதில் நான் நம்பிக்கையுடையேன்.

### முகாமைத்துவமும் தொழில் நுட்பமும்

உயரம் நிறை, குடும்பத் தொடர்புகளின் அடிப்படையில் ஸ்கொட்லாந்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட இளம் வாலிபர்கள் இங்கு வந்து தொழிலைப் பயின்று கொண்டனர். எமது விவசாயத்தின் மிகவும் திறமைமிக்க துறை பெருந்தோட்டத் துறையாகும். அதன் அசாதாரண குணம்சங்கள் என்னவாயிருந்த போதிலும் இம் முறை நன்கு செயற்பட்டுள்ளது. ஒவ்வொரு பெருந்தோட்டம் செய்கையாளரினதும் பின்னால் கவர்னர் (ஆளுனர்) உட்பட முழு அரச நிறுவகமுமே பூரணபடைப் பலத்துடன் தாங்கி நின்றது. சட்ட வாக்கச் சபையிலும் மற்றும் சமூகத் துறைகளிலும் பெருந்தோட்டச் செய்கையாளர்கள் செல்வாக்கு மிகுந்திருந்தனர். வெள்ளையன் நாட்டை விட்டுச் சென்ற பின்னரும் இந்த முறை தொடர்ந்து செயற்பட்டது. சுதந்திரத்தின் சூழ் நிலைகள் அவர்களுக்குப் பொருந்தவில்லை. எனவே 1950 ம் ஆண்டுகளில் அவர்கள் தம் மூட்டை முடிச்சுகளைக் கட்டத் தொடங்கினர். அவர்களது இடத்திற்கு கறுப்பர் வந்தனர். ஆனால் அவனும் உயரம், நிறை, குடும்பத் தொடர்புகள் என்பவற்றின் அடிப்படையிலேயே தெரிவு செய்யப்பட்டான். புதுமை யென்னவெனில் இப் புது முறையும் செயல்பட்டதுடன் உற்பத்தியும் அதிகரித்துக் காணப்பட்டது. பாரம்பரிய பெருந் தோட்டச் செய்கையாளர் ஒரு விவசாய விஞ்ஞானியல்லாவிடினும் அவன் ஒரு முகாமையாளனாயிருந்தான். புதிய முகாமையாளர்களே இதனைச் செய்யப் போகின்றனர் என்பதை நாம் அனைவரும் அறிதல் அவசியம்.

### புற அமைப்புக்கள்

பாதை நிர்மாணித்தல் போன்ற பணிகளுக்காக அரசாங்கம் முதலில் இந்தியாவிலிருந்து தொழிலாளரைத் தருவித்தது. பெருந் தோட்டத் துறைக்குப் பயன்தரக் கூடியதாகவே பாதைகள் அமைக்கப்பட்டனவே அன்றி பெருந் தோட்டத் துறையின் பிரதான புற அமைப்புக்களுடன் தொடர்புகள் துண்டிக்கப்பட்ட மக்களுக்குப் பயன்படக் கூடிதாக அவை அமையவில்லை. சில கிராமங்கள் பாதைகள் மூலமாக செல்ல முடியாதவையாகும்.

பெருந்தோட்ட உற்பத்திகளுக்கான சந்தை பிரிட்டனாகவே இருந்தது. எமது தேயிலை பெரும்பாலும் நேரடியாகவே பிரிட்டனுக்குச் சென்றது. சுதந்திரத்துக்குப் பின்னரே உள்ளூரில் ஏலமிடும் முறை ஆரம்பித்தது. வங்கி முறைப்படுத்தல், கப்பலேற்றுதல் மற்றும் தன்னலம் பாதுகாப்போரின்நடவடிக்கைகள் போன்ற பல தடைகளையும் மீறி கொழும்பு தேயிலை ஏல விற்பனையை ஆரம்பித்த பெருமை திரு. ஆர். ஜீ. சேனநாயகாவை சாரும்.

பழைய பெருந்தோட்ட அமைப்பு முறையின் சில அம்சங்களை நான் எடுத்துக் கூறி விட்டேன். ஆனால் இம்முறை தனது கடைசிக் கட்டத்தை அடைந்து விட்டது என்பதைக் கூறி முடிக்க விரும்புகிறேன். சமூக, அரசியல் ரீதியாக அம்முறை தொடர்ந்தும் சகிக்க முடியாதது; நீடிக்கவும் முடியாது, சம்பளத் திட்டமும், விலைகளும் இணக்கம் காண முடியாதுள்ளது. ஒன்றில் சம்பளத் திட்டம், அல்லது பெருந்தோட்டத் திட்டத்தை கைவிடுமளவுக்கு அது ஒன்றுக்கொன்று இணக்கம் காண முடியாதுள்ளது.

### 1977 பொருளாதாரத்தின் . . . .

(19ம் பக்கத் தொடர்ச்சி)

#### விலைகள்

1977 ல் வாழ்க்கைச் செலவில் அதிகரிப்பு ஏற்படாதிருக்கலாம். எவ்வாறுயினும் விலை குறைப்புகளுக்கான சில சாதக சாத்தியங்கள் காணப்படுகின்றன. உள்ளூர் உற்பத்தியில் தென்னையின் விலையே கூடியதாக இருக்கும். மே மாதமளவில் இது குறைய ஆரம்பிக்கலாம். உள்ளூர் நுகர்வாளருக்காக தேயிலையின் விலையும் மிக உயர்ந்ததாகவே வருடம் முழுதும் இருக்கும். கூடுதல் நெல்லுற்பத்தி காரணமாக உள்ளூர் பகிரங்க சந்தையில் அரிசி விலை குறையலாம்.

#### தொழில் வசதி

அரசாங்கத் துறை தொழில் வாய்ப்புகளை அதிகரிப்பதற்காக 1976 லிருந்தே பல நடவடிக்கைகளை அரசாங்கம் அமுல் நடத்தி வந்துள்ளது. வேலையற்ற 7000 பட்டதாரிகளையும், க. பொ. த. (உயர்தரப் பரீட்சையில் தேறிய பல்லாயிரக் கணக்கானோர்களையும் ஆசிரிய சேவையில் சேர்த்துக் கொண்டமையும், மத்திய தரத்தில் மேலதிக சௌக்கிய ஆளணியினரைச் சேர்த்துக் கொண்டமையும் தேசிய பயிலுனர் சபையின் திட்டங்களின் கீழ் பல தொழிற் துறைகளில் பயிற்சியளிக்கப்படுவதற்காக பெருந்தொகையினர் இணைத்துக் கொள்ளப்பட்டமையும், மற்றும் பல பயிற்சி நிறுவனங்களில் இணைத்துக் கொண்டமையும் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் இது வரை அமுல்நடத்திய திட்டங்களாகும். மகாவலி திட்டத்தின் கீழான காணிச் சீர்திருத்தம், குடியமர்த்தல் திட்டங்களின் அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டங்களும் மேலதிக தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் இரு திட்டங்களாகும். 1977 - 78 க் கிடையில் மாவட்ட அபிவிருத்திச் சபைத் திட்டங்களின் கீழ் 2800 செய் திட்டங்கள் ஏற்படுத்தப்படும் போது 82,000 நபர்களுக்கு அது தொழில் வாய்ப்புக்களோ ஏற்படுத்திக் கொடுக்கும். இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் 1977 ல் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு பாரிய பிரச்சனையாகவே இருக்கும். சரியான புள்ளிவிவரங்கள் கிடைக்காத போதிலும் நாட்டில் வேலையற்றோர் தொகை 10 லட்சமளவில் உள்ளனர்.

# இலங்கையில் சேமிப்புகளும் கூட்டுறவுத் துறையும்

**( 2ம் பகுதி )**

— ஆர். டி. டி. லிவேரா

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முடுக்கி விடுவதற்கு, சேமிப்புக்களை, ஒன்று திரட்டல் ஒரு முன்னோடி அவசிய நடவடிக்கையாகும். இதில் கூட்டுறவுத்துறை மிக அடிமட்டத்திலேயே செயல்படுகிறது இலங்கையின் அனுபவம் பற்றி மக்கள் வங்கிப் பொது முகாமையாளர் ஆர். டி. டி. லிவேரா ஆராய்கின்றார். கடந்த வாரம் பிரசுரிக்கப்பட்ட இக்கட்டுரையின் முதற் பகுதி இலங்கையில் கூட்டுறவு, சேமிப்புத் துறைகளின் வரலாறு பற்றி ஆராய்ந்தது. இந்த இரண்டாம் பகுதியில் மேற்படி இலக்கு நோக்கி வங்கியின் பங்கும் தொழிற்பாடும் பற்றி எடுத்து விளக்குகின்றார்.

*(சென்ற இதழ் தொடர்ச்சி)*

## கூட்டுறவு வங்கி முறை

இக்கால கட்டத்தின் முக்கிய அம்சம் கூட்டுறவு வங்கி முறையின் அபிவிருத்தியாகும். இது நாம் முன்பு குறிப்பிட்டது போல் 1929 ல் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட இவ்வகை முதல் வங்கியோடு ஆரம்பமாயிற்று. கடன் சங்கங்களின் திரட்சியிலும் இவ்வியக்கத்தின் நிதி வளங்களின் வலுப்பாட்டிலும் குறிப்பிடத்தக்க படியாக கூட்டுறவு வங்கிகளின் பிரவேசம் அமைந்தது. இவ்வங்கிகள் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு பெற்று ஆரம்ப கடன் சங்கங்களை இணைப்பாக்கி அமைக்கப்பட்ட இரண்டாந்தர மட்ட சங்கங்களாகும். இவை பொது மக்களிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்தும் சேமிப்புகளையும் தவணை வைப்புகளையும் ஏற்றுக் கொண்டன. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மட்டுமே இவை கோரிக்கை வைப்புக்களை ஏற்றுக் கொண்டன. இவை கடன் சங்கங்களுக்கு முற்பணங்களை வழங்கி பின்னடியில் வேறு மாதிரியான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் இவ் வசதிகளை விஸ்தரித்தன. 1949 ல் இலங்கைக் கூட்டுறவுச் சமஷ்டி வங்கி லிமிட்டெட் என்ற தலைமைக் கூட்டுறவு வங்கி கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது. கூட்டுறவு வங்கிகளும் வேறு கூட்டுறவுச் சங்கங்களும் இத்தலைமை வங்கியில் பங்குகாரராகச் சேர்வதற்கு தகவுடையனவாயிருந்தன. 1961 அளவில் இக் கூட்டுறவுச் சமஷ்டி வங்கியைக் கையேற்பதற்கு மக்கள் வங்கி நிறுவப்பட்டபோது நாட்டில் 17 கூட்டுறவு மாவட்ட, பிராந்திய வங்கிகள் இருந்தன. 1950 முதல் 1961 வரை கூட்டுறவு வங்கிகளினால் வைக்கப்பட்டிருந்த வைப்பு நிதியின் ஆய்வைத் துறைவாரியாக கீழே தருவோம்:

## 1934ன் வங்கி ஆணைக் குழு

இலங்கை ஒரு உள்நாட்டு சுயாட்சிப் படியை அடைந்து 3 வருடங்களின் பின் 1934 ல் அரசாங்கத்தினால்* நியமிக்கப்பட்ட வங்கி ஆணைக்குழு நிலடங்கிலும் பொதுப் பொருளாதார, நிதி நிலைமையின் மதிப்பீடொன்றை மேற்கொள்ள ஏற்பாடு செய்தது. இவ்வாய்வின் குறிப்பிடத்தக்க அம்சம் கூட்டுறவு இயக்கமாகும். அந்நிய வாதிக்கப் பொருளாதாரத்தில் பிரித்தானிய செலாவணி வங்கிகள் ஆக்கிரமித்திருந்தன என்பதை இவ்வாய்வு பரவலாக எடுத்துக் காட்டியது. இவ்வங்கிகள் பிரித்தானிய இனத்தவர்க்கும் கம்பனிகளுக்கும் பாருபாடு காட்டியதால் இலங்கையர் தாம் பெறும் கடன்களுக்கு செட்டியார்களையும், தனியார் கடன் கொடு முகவர் நிலையகாலையும், நகையடவு பிடிகாரர் கடைக்காரர் போன்ற வழமையற்ற ஈட்டிக்காரர்களையும் நாடவேண்டியதாயிற்று. கூட்டுறவுக் கடன் கொடுமுறை சமூகத்தின் ஒரு சிறு வகையினர்க்கே கடன் கொடுத்துதவிய போதிலும் இலங்கையர்க்கு அது தன்னளவிலே ஒரு அடைக்கலமாக இருந்தது கூட்டுறவு இயக்கம் நல்ல விதத்தில் அபிவிருத்தி கண்டு செழிப்பாகவும் இருந்ததென்பதை இவ்வாணைக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது. கூட்டுறவு இயக்கம் அதன் அங்கத்தவர்களுக்கு தாராளமாக உதவிற்று என்றும் காணிச் சொந்தக்காரரான விவசாயிகளுக்கு மிகப் பொருத்தமான முறையாக இது இருந்திருக்கிறதென்றும் அவ்வங்கி ஆணைக்குழு கருத்துக் கொண்டுள்ளது. கூட்டுறவு இயக்கத்தின் கடன் கொடு கொள்கையைப் பொறுத்தளவில் மட்டுப்படுத்தலில்லாத பொறுப்புள்ள சங்கங்களுக்கு பதிவாளர்களது ஈவற்ற கடன் வரம்புகள் அத்தியாவசியமற்றவையென்று ஆணைக்குழுவினர் கருதினர். அதிக கூட்டுறவு மத்திய வங்கிகள் நிறுவப்படலாமென்பதை அவர்கள் ஒத்துக்கொண்ட போதிலும் கூட்டுறவு இயக்கத்திற்கு அகில இலங்கைத் தலைமை வங்கி ஒன்றை நிறுவுவது அத்தியாவசியமற்றது என்று அவர்கள் கருதினார்கள். பதிலாக கூட்டுறவு வங்கிகள் அவர்கள் உத்தேசித்த அரசு உதவி பெறும் வங்கிகளுடன் நேரடியாகவே தொடர்பு கொள்ளலாம் என்று ஆலோசனை கூறினர். இவ் வங்கி ஆணைக் குழுவினரது அறிக்கை முழு இலங்கையிலுமே ஒரு தாக்கத்தை ஏற்படுத்திற்று. இது பொருளாதார நிதித் துறைகளில் பொதுமக்கள் கவனத்தைப் பெருமளவுக்கு ஊக்குவித்துள்ளதுடன் இதன் விளைவாக 1939 ல் இலங்கையின் முதலாவது வெற்றிகரமான வர்த்தக வங்கியான இலங்கை வங்கி நிறுவப்படலாயிற்று. எனினும், ஆலோசனை கூறப்பட்டதைப் போன்று கூட்டுறவுச் சங்கங்களோடு இலங்கை வங்கி நேரடியாக இணையவில்லை. காலப் போக்கில் விரிவடைந்துவந்த கூட்டுறவுக் கடன்முறை அதன் சொந்த தலைமை வங்கியை, நாம் இலங்கைக் கூட்டுறவு சமஷ்டி வங்கி லிமிட்டெட்டில் கண்டதுபோல் நிறுவலாயிற்று. எனினும், இத்தகைய அபிவிருத்திகளிலிருந்து தெளிவாகக் காணக் கிடைக்கும் ஒரு உண்மை என்னவெனில் கூட்டுறவு இயக்கமானது அதற்கு மட்டுப்படுத்தப்பட்ட கடன் வசதி நடவடிக்கைகள் இருந்தபோதிலும், பொருளாதாரத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சக்தியாக வளர்ந்துள்ளது. 1911 ற்கும் - 1930 க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், அந்நியவாதிக்க பொருளாதாரத்திற்கு வெளியே மக்களுக்கு கிடைக்கக்கூடியதாயிருந்த ஒரே நிதி நிறுவனமான அஞ்சலக சேமிப்பு வங்கியின் வளர்ச்சியோடு சேர்ந்து எப்படி வளர்ந்தது என்பதை நாம் ஏற்கனவே கண்டோம். 1930 க்குப் பின் இவ்விரண்டு நிறுவனங்களும் எப்படி அபிவிருத்தியடைந்து வந்தன என்பதை அறிவது, சுவாரஷ்யமானதும், போதனுபூர்வமானதுமாகும்.

1930 முதல் 1945 வரை அஞ்சலக சேமிப்பு வங்கியின் வளர்ச்சியை கீழுள்ள அட்டவணை விளக்குகிறது.

1930 முதல் 1945 வரையான அதே காலகட்டத்தில் கூட்டுறவு நிறுவனங்களின் சமனையான வளர்ச்சியை கீழ்க்கண்ட திகதிகள் காட்டும். 1930-31 ல் 600 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. 1945 அளவில் மட்டுப்படுத்தப்படாத பொறுப்புள்ள கடன் சங்கங்கள் 1697 இருந்தன. இவற்றின் அங்கத்துவம் 45,636 ஆகவும் தொழிற்பாட்டு மூலதனம் ரூபா 777,307/- ஆகவும் இருந்தன. சகல சங்கங்களும் ஒன்று சேர்ந்து எண்ணிக்கையில் 6382 ஆக இருந்ததுடன் அவற்றின் அங்கத்துவம் 11 லட்சமாகவும் இருந்தது.

## கூட்டுறவு இயக்கத்தில் 2வது உலக யுத்தத்தின் தாக்கம்

இரண்டாவது உலக யுத்தம் ஆரம்பமானதும் கூட்டுறவு இயக்கம் நாடு பூராவும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவ வேண்டும் என்று வேண்டப்பட்டதால் அவ்வியக்கம் தரப்பாடான புதிய ஒரு வடிவை எடுத்தது. இதுவரை கடன் சங்கங்களாக மட்டும் பெயரளவில் மட்டுப்பட்டிருந்த இயக்கம் இப்போது வேறு துறை கவன நாட்டத்தைக் கண்டது. யுத்தச் சூழ் நிலைகளினால் தோன்றிய உணவுப் பற்றாக் குறைப் பிரச்சினையும், குறைந்த அளவிலான உள்நாட்டு உணவுப் பொருள்களையும் இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்களையும் தார்மீக அடிப்படையில் பங்கீடு செய்ய வேண்டிய தேவையையும் எதிர்நோக்கிய அரசாங்கம் அவ்வுணவுப்பொருட்களை நாடு பூராவும் பங்கீடு செய்யும் பொறுப்பை கூட்டுறவு நிறுவனங்களில் சுமத்தி நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அதனை நிறைவேற்றியது. 1942 ல் எண்ணிக்கையில் 33 ஆக மட்டுமிருந்த அத்தகைய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் 1945 அளவில் 4004 ஆக உயர்ந்தன. இத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பங்கீட்டுக் கைங்கரியம் அடுத்தடுத்த வருடங்களில் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்த கூட்டுறவு இயக்கத்திற்கும் அரசாங்கத்திற்குமிடையில் இருந்த முன்னோடி முதல்வர் உறவில் குறிப்பிடத்தக்க புதிய அம்சத்தினைப் புகுத்தியது.

அதே கால கட்டத்தில் உள்நாட்டு உணவுற்பத்தியை அதிகரிக்க வேண்டிய தேவையினால் நெருக்கப்பட்ட அரசாங்கம் கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கங்கள் எனப் பெயரிடப்பட்ட வேறொரு கூட்டுறவு அமைப்பொன்றை உருவாக்கிற்று. கூட்டுறவு அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒன்றாக இது இருந்தபோதிலும் அநேகமாக ஒரு அரசாங்க முகவர் நிலையமாகவே இதுவும் இருந்தது. 1945 ல் அரசாங்கம், விவசாயிகளினால் விற்பனைக்கு வழங்கப்பட்ட பல வகையான விவசாயப் பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகளோடு உத்தரவாத விலைத் திட்டமொன்றைப் புகுத்தியது. புதிய கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனைச் சங்கங்கள் இப் பொருட்களை கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் சரகு முகவர்களாக இயங்கி வந்தன. இச் சங்கங்கள் சந்தைப்

அட்டவணை 1

## சேமிப்பு வைப்புக்கள் — தொடர்பு நிலை

(கோடி ரூபாக்கள்)

| வருடம் | கிராமிய | | | | நகர | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | த.க.சேவ. | இ.சே.வ. | | மொத்தம் | | வர்த்தக வங்கி | | மொத்தம் |
| 1949 | 134.9 | 56.6 | 88.8% | 191.5 | 11.2% | 24.1 | 100% | 215.6 |
| | த.க.சே.வ. | இ.சே.வ. | | மொத்தம் | | வர்த்தக வங்கி | | |
| 1960 | 343.4 | 75.5 | 76.5% | 418.9 | 23.5% | 129.0 | 100% | 547.9 |
| | தே.சே.வ. | ம.க | | மொத்தம் | | வர்த்தக வங்கி | | |
| 1975 | 1,337.5 | 499.9 | 80.4% | 1,837.4 | 19.6% | 447.5 | 100% | 2,284.9 |

மூலம்: பொருளாதார மதிப்பீடு 1975 (அட்டவணை 30)

த.க.சே.வ. — தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி
இ.சே.வ. — இலங்கை சேமிப்பு வங்கி
தே.சே.வ. — தேசிய சேமிப்பு வங்கி
ம.க. — மக்கள் வங்கி
வர்த்தக வங்கி — வர்த்தக வங்கி

குறிப்பு: 1972 ல் த.க.சே.வ. யையும் இ.சே.வ. யையும் ஒன்றிணைந்து தேசிய சேமிப்பு வங்கி உருவாக்கப்பட்டது

படுத்து முகவர் நிலையங்களாக விளங்கிய அதே சமயத்தில் விவசாயிகளுக்கான விவசாயக் கடன்களை வழிப்படுத்தும் ஒரு ஊடகமாகவும் இவை அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்டன. 1948 க்கும் 1955 க்கும் இடையிலான காலகட்டத்தில் கூட்டுறவு விவசாய விளைபொருள் விற்பனை சங்கங்கள் எண்ணிக்கையில் 193 ல் இருந்து 842 ஆக உயர்ந்தன. 1955 ன் இறுதியில் இச் சங்கங்களில் அங்கத்தவர்களாயிருந்தோர் தொகை 217,123 ஆக இருந்தது. அரசாங்கத்தின் இத்தகைய சுறுசுறுப்பான பங்காற்றையோடு கூட்டுறவு விளைபொருள் விற்பனைச் சங்கங்களும் கடன் கூட்டுறவு சங்கங்களைப் போன்று சிறு விவசாயக் குடிசனங்களின் ஒரு சிறு பகுதியினரையே சென்றடைவதில் வெற்றி கண்டன. சிறு விவசாயிகள் குடிசனத்தின் பத்தில் ஒரு பகுதியினர் கூட கூ. வி. வி. சங்கங்களில் அங்கத்தவர்களாக இருக்கவில்லை என்று மதிப்பிடப்பட்டது.

பழைய கூட்டுறவுக் கடன் சங்கங்களுடன் ஒப்பிடுகையில் புதிய கூ. வி. வி. சங்கங்களில் பரஸ்பர உதவி, சுய உதவி போன்ற பூர்விகக் கூட்டுறவின் கோட்பாடுகள் தென்படவில்லை. அங்கத்தவர்களைச் சேமிப்பதற்கு ஊக்குவிப்பதில் இவை மிகக் குறுகிய கவனமே செலுத்தியதாகத் தெரிகிறது. யுத்தத்தின் மிடிகளையும் அதன் விளைவுகளையும் ஈடு செய்வதற்கென அவசர அவசரமாக அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவற்றிடம் இதனை மட்டுமே எதிர்பார்க்கலாம். அங்கத்தவர்கள் தம்மை இச் சங்கங்களோடு இனங்காண்பதற்கும் அங்கத்தவர்கள் என்ற முறையில் அவர்களது பொறுப்புகளை நயப்பதற்கும் அவசியமான கூட்டுறவுக் கல்வியை அவர்களுக்கு ஊட்டுவதற்கு போதிய அவகாசத்தை அனுமதிப்பதற்கு இச் சூழ்நிலை பொருத்தமாக இருக்கவில்லை.

பல வகையான நலவுரிமைச் சேவைகளை ஒரு உபகாரி அரசாங்கம் மக்களுக்கு வழங்க ஏற்படுத்திக் கொண்ட ஒரு சங்கம் என்று இக் கூட்டுறவு விளைபொருள் விற்பனை சங்கங்களை அங்கத்தவர்கள் கருதியிருந்தார்கள் என்று குறிப்பிடுவது தவறான ஒன்றுகாது. உண்மையில் யுத்தத்தை அடுத்த கால முழு அனுபவங்களும் அறுபதுகள் வரை சுய உதவி பரஸ்பர உதவி போன்ற கூட்டுறவுத் தத்துவங்களுக்கு இவ்வியக்கம் பாராமுகமாக இருந்ததையே காட்டுகின்றன. 1962 - 63 க்கான கூட்டுறவு அறிக்கையில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இவ்வியக்கம் அதன் அங்கத்தவர்களிடமிருந்து சேமிப்புகளை கவர்வதன் மூலம் அதன் சொந்த நிதியைக் கட்டியெழுப்புவதில் அதிக அக்கறை செலுத்தவில்லை யென்றும் இது இவ்வியக்கத்தின் விருத்திக்கு முட்டுக்கட்டையாய் இருந்த முக்கிய காரணிகளில் ஒன்றென்றும் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தகால விக்கத்தினுலும் வேலை வாய்ப்பு நிறைவினுலும் கடன் சங்கங்களின் நடவடிக்கைகள் குறைந்திருந்தன. ஆனுல் அதே வேளையில் சிக்கனச் சங்கங்கள் தமது நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி தமது வியாபாரத்தையும் இயக்க மூலதனத்தையும் பெருக்கிக் கொண்டன. யுத்த காலத்தில் மட்டுப்படுத்தப்படாத பொறுப்புள்ள சங்கங்களிடமிருந்து கடன் பெறுவதற்கான நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு இருந்தன என்பதைக் குறிப்பிடுவது சுவாரஸ்யமானதாகும்.

விவசாயத்திற்கு 43.8% வர்த்தகத்திற்கு 24%, காணிக் குத்தகைக்கோவிருத்திக்கோ 6.1%, கால் கொள்வனவு செய்தற்கு 5.2%, மீதியிருந்த வகையான 4.3% விதமே "உற்பத்திப் பாங்கற்ற" கடன்கள் என்றழைக்கப்படுபவற்றிற்கு சென்றன.

யுத்த காலத்திலும் அதனைத் தொடர்ந்த நெருங்கிய காலகட்டத்திலும் மட்டுப்படுத்தப்படாத பொறுப்புள்ள கடன் சங்கங்கள் அநேகமாக இயக்கமின்றி யிருந்தன. ஏனெனில் யுத்த வீக்கம் மக்கள் மத்தியில் வருவாயைப் பெருக்கியிருந்தமையே இதற்குக் காரணமாகும். 1945 முதல் 1949 வரை இச் சங்கங்கள் 1696 ல் இருந்து 1891 ஆக மட்டுமே அதிகரித்திருந்தன. ஆனுல் 1955 அளவில் பங்கீட்டுச் சங்கங்களை விட எண்ணிக்கையில் மிகவும் அதிகமாக இருந்து 1957 ன் இறுதியில் அவற்றின் எண்ணிக்கை 3,581 ஆக இருந்தது.

### கூட்டுறவுக் கடன் சங்கங்களின் வீழ்ச்சி

எவ்வாறுயினும் புதிய கூ. வி. வி. சங்கங்களின் இயக்கமும் 1957 ல் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் அறிமுகமும் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தமது தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. வழமையாகவே கடன் சங்கங்களினுல் கடனுக வழங்கப்பட்ட விவசாயத் தேவைகளுக்கான பெருந் தொகைகள் இப்போது கூ. வி. வி. சங்கங்களினுலும் ப. நோ. கூ. சங்கங்களினுலும் கிடைக்க வழி செய்யப்பட்டன. 1959 அளவில் கூ. கடன் சங்கங்கள் படிப்படியாக தமது நிலையில் தளர்ந்து வந்தது தெளிவாகத் தெரிந்தது. 1956 ல் கடன் சங்கங்களின் மொத்த கடன் கூ. வி. வி. சங்கங்களின் மொத்தக் கடனின் 106% ஆக இருக்க 1959 ல் விதாசாரம் 72.6% க்கு வீழ்ச்சியடைந்துள்ளது. 1969 அளவில் 3,570 கடன் சங்கங்களில் கிட்டமுட்ட 2,010 சங்கங்கள் இயக்கமிழந்தன.

### பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

இலங்கையின் கூட்டுறவு முறையின் பிரதான திருப்புமுனை 1957 ல் மேற்கொள்ளப்பட்ட மறு சீரமைப்பாகும். இம் மறுசீரமைப்பு கிராமிய கடன் பழு மதிப்பீட்டைத் தொடர்ந்துவந்த ஒன்றுகும். 1950 - 51 காலகட்டத்தில் கிராமிய கடன் பழு 30% ஆகவே இருந்தது. இதனுேடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இப்போது கிராமியக் குடும்பங்களில் இருந்த கடன் பழு 54% ஆகியிருந்ததை இம்மதிப்பீடு சுட்டிக்காட்டியது. இக்கால கட்டத்தில் குடும்பமொன்றின் சராசரிக் கடன் பழு ரூபா 263 ல் இருந்து ரூபா 750 க்கு உயர்ந்திருந்தது. அத்தோடு மொத்தக் கடன் ரூபா 51.6 கோடியென்றும் மதிப்பிடப்பட்டது. ஸ்தாபன ரீதியற்ற வழிகளில் மக்கள் எவ்வளவுக்குக் கடன் பெற்றிருந்தார்கள் என்பதையும் இம் மதிப்பீடு வெளிக்காட்டியது. நிலுவையான கடன்களில் அரசாங்கம், வர்த்தக வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய ஸ்தாபன ரீதியான கடன்கொடு நிலையங்களின் பங்காற்றுதல் மிகக் குறைந்த அளவான 7.8% ஆகவே இருந்தது. ஆனுல் இதில் உள்ள ஏமாற்றம் என்னவெனில் கூட்டுறவு இயக்கம் அதன் நான்கு தசாப்த காலக் கடன் நடவடிக்கைகளில் மொத்தக் கடன்களில் 4.1 சதவீதமே பங்காற்றியிருப்பதே. 1957 ல் இருந்த கிராமியக் கடன் வழிகள் கீழ்க்கண்ட அட்டவணையில் தரப்படுகிறது.

| மூலம் | | | மொத்தக் கடன் விதாசாரம் |
|---|---|---|---|
| அரசாங்கம் | .. | .. | 2.6 |
| கூட்டுறவுச் சங்கங்கள் | | .. | 4.1 |
| வர்த்தக வங்கிகள் | | .. | 1.1 |
| உறவினரும் நண்பர்களும் | | .. | 44.2 |
| நிலப்பிரபுக்கள் | .. | .. | 15.5 |
| வர்த்தகர்களும் தரகு முகவர்களும் | .. | .. | 11.5 |
| ஏனையோர் | .. | .. | 13.0 |
| | | | 100.0 |

மூலம்: குடிசனப் புள்ளி விவரத் திணைக்களம்: 1957 ன் இலங்கைக் கிராமிய கடன் மதிப்பீடு.

இம் மதிப்பீட்டை வைத்து ஆராய்ந்த அரசாங்கம் விரிவான ஒரு அடிப்படையில் கிராமியக் கடன் வசதியை விருத்தி செய்யும் நோக்கோடு நாடு பூராவும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கத் தீர்மானித்தது. விற்பனைகளை ஒழுங்கு செய்தற்கும் கடன்களை வழங்குதற்குமான ஒரே சங்கமாக கூ. வி. வி. சங்கங்கள் நிறுவப்பட்டதை ஏற்கனவே கண்டோம். ப. நோ. கூ. சங்கங்கள் இதன் இயற்கை அபிவிருத்தியாகக் கொள்ளப்பட்டது. ஒரு நோக்குக் கூட்டுறவு உருவைவிட, கடன் வசதி, சந்தைப் படுத்தல் நுகர்ச்சிப் பொருள்கள் வழங்கல், சேவைகள் வழங்கல் ஆகியவற்றை ஒன்றிணைந்து உள்ளடக்கிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உரு கிராமத்தவர்களுக்கு அதிக பொருத்தமானது என்று கொள்ளப்பட்டது. இந் நிறுவனத்தின் பிரதான வலியுறுத்தல் என்னவெனில் இலங்கையின் சூழ்நிலைகளில் கூட்டுறவு

இயக்கம் அதன் சொந்த வளங்களோடு தானாக வளராது என்பதும் அதன் அபிவிருத்திக்கு அரசாங்க தலையீடு துரிதமாக உந்துதல் அளிக்க வேண்டும் என்பதுமாகும். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பல வகையான குறிக்கோள்களுமுண்டு. ஒரு கிராம அபிவிருத்தியை மேற்கொள்ளும் அபிவிருத்தி அலகைப் போன்று சேமிப்புகளை நகர்த்தி கடன்களை வழங்கி ஒரு கிராமிய வங்கியைப் போன்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க வேண்டும்.

## மக்கள் வங்கி நிறுவப்பட்டது

*1961* ல் மக்கள் வங்கி நிறுவப்பட்டது அரசாங்கம் *1957* ல் ஏற்படுத்திய சீரமைப்பின் பிரதான அம்சமாகும். இச் சீரமைப்பின் குறிக்கோளை அடைவதற்கு இவ்வியக்கத்திற்கு நிதியுதவி செய்வதற்குரிய வலிமையான அபிவிருத்தி வழிப்பட்ட வங்கியொன்று அத்தியாவசியமானதெனக் கருதப்பட்டது. அப்போதிருந்த மாகாண, மாவட்ட மட்டத்திலான கூட்டுறவு வங்கிகள், தலைமைக் கூட்டுறவுச் சமஷ்டி வங்கி ஆகியவற்றை உள்ளடக்கிய கூட்டுறவு வங்கியமைப்பு போதாத ஒன்றாகக் கருதப்பட்டது. தனி அலகு வங்கிகளான அவற்றின் அமைப்பும் அவற்றின் வங்கிப்படுத்தல் வியாபாரம் கூட்டுறவு இயக்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்ததும் அவற்றுள்ளேயே அவற்றினைத் தடைப்படுத்திய காரணிகளாகும். எனவே அதன் நோக்கம் கூட்டுறவு இயக்கத்திற்கு உதவக்கூடிய சிறப்புத் தேர்ச்சி பெற்ற வங்கியொன்றை நிறுவுவதாகும். ஆனால் அதே நேரத்தில் அவ்வங்கி அவ்வியக்கத்திற்கு போதுமான நிதியுதவி செய்யக்கூடியதாகவும் அதன் கடன் கொடு நடவடிக்கைகளில் ஏற்படும் ஆபத்துக்களை தாங்கிக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வலுவளிக்கும். அமைப்பொன்றைக் கொண்டிருக்கத் தக்கதாகவும் இருக்க வேண்டும் என்பதும் அந் நோக்கத்தில் ஒன்றாகும். மேற்கண்ட வழிகளில் அவ்வமைப்பு வலு வழங்கப்பட வேண்டுமென்றிருந்தது.

(அ) பங்கு மூலதனத்தில் அரசாங்க பங்காற்றல்.

(ஆ) வர்த்தக வங்கிப் படுத்தலின் சகல அம்சங்களிலும் ஈடுபடுதற்கு வசதி அளித்தல்.

(இ) கிளைப் பின்னல்களை நிறுவுவதற்கான வசதியளித்தல்.

(ஈ) கூட்டுறவு இயக்கத்தின் குறுகிய வளங்கள் ஒரு நிதி நிறுவனத்தில் செறிவூன்றல் பெறக் கூடியதாக இப் புதிய வங்கியோடு வங்கிப்படுத்தற் கைங்கரியத்தை வைத்துக் கொள்ள உதவும் வகையில் சட்ட வசதி செய்தல்.

மக்கள் வங்கியின் மூலதனம் அரசாங்கத்தினாலும் கூட்டுறவு சங்கங்களினாலும் சம அளவில் உடமை கொள்ளப்பட்டது. இதன் இயக்குனர் சபை இவ்விரு உடமையாளரையும் பிரதிபலிக்கும். இயக்குனர்கள் பங்குகள் வைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்களினாலும் நியமிக்கப்படுவர். கூட்டுறவு அபிவிருத்தியாணையாளர் இதற்கொரு உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராக இருப்பார். எஞ்சிய மூன்று இயக்குனர்களும் அரசாங்கத்தின் நியமித்தர் ஆவர்.

இப் புதிய வங்கியின் குறிக்கோள்கள் சட்டத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளன:

''இவ்வங்கியின் நோக்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கும் விவசாயக் குழுக்களுக்கும், வேறு ஆட்களுக்கும் நிதி யுதவியும் வேறு உதவிகளும் வழங்குவதன் மூலம் இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தையும், கிராமிய வங்கிப்படுத்தலையும், விவசாயக் கடன் வசதிகளையும் அபிவிருத்தி செய்வதாக இருக்கும்.''

இத்தகைய குறிக்கோளுடன் இவ்வங்கி கூட்டுறவு மாகாண, மாவட்ட வங்கிகளைச் சுவீகரித்து அவற்றினை அதன் கிளைகளாக ஆக்குதற்கு முன்வந்தது. *1963* செப்டெம்பர் அளவில் *17* கூட்டுறவு மாகாண, மாவட்ட வங்கிகளில் 9 வங்கிகள் மக்கள் வங்கியுடன் இணைந்தன. எஞ்சிய 9 வங்கிகளும் அடுத்து வந்த வருடங்களில் உள்ளிணைக்கப்பட்டன.

இன்று, இலங்கைக் கூட்டுறவு இயக்கத்திற்கு வங்கிப்படுத்து நிறுவனமாக இயங்கும் பிரதான பணியோடு மக்கள் வங்கி பல அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும் வர்த்தக தனியார் துறைகளின் பல பகுதிகளுக்கும் வங்கிப்படுத்து நிறுவனமாக இயங்கி வருகிறது.

சமூகத்தின் இவ்வகைப் பிரிவினரின் சேமிப்பு ஆற்றலைப் பயன்படுத்துவதற்காக மக்களின் சேமிப்புக்கான வழிமுறைகளின் பொதுக் குணும்சங்களோடு ஒத்துப் போகக்கூடிய பொருத்தமான சேமிப்பு நுட்பங்களை வரையறுத்து வழி காண்பதற்கு இவ்வங்கியின் நாட்டம் செலுத்தப்பட்டது. உதாரணமாக முதலீட்டுச் சேமிப்பு என்ற பெயரில் ஒப்பந்த சேமிப்புத் திட்டமொன்று சிறு வருவாய்ச் சம்பாத்தியம் பெறுவோரின் நன்மைக்காக பிரத்தியேகமாக வடிவாக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. இத் திட்டத்தின் கீழ் *60* மாத காலத்தில் அரை வருடமாகவோ, மும்மூன்று மாதமாகவோ, மாதாந்தமோ ஒரு குறிப்பிட்ட தொகை பணத்தை சேமிப்பதற்கு வைப்புக்காரர்கள் ஒப்பந்தமாகிறார்கள். மாதாந்தம் வைப்பிடும் திட்டம் நகரவாசிகளான குறிப்பிட்ட ஊதிய வருவாய்க்காரருக்குப் பொருந்தக் கூடியதாகவும் அரை வருட அல்லது மும்மூன்று மாதத் திட்டம் விவசாயிகளது தவணைச் சேமிப்பைக் கவரக்கூடியதாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ் வொப்பந்த சேமிப்புத் திட்டம் இவ்வங்கியின் கிளைகளினால் மட்டுமன்றி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினாலும் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. (இக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் இயல்பு பின்னர் ஆராயப்படும்)

முதலீட்டுச் சேமிப்பு தற்போது 7½% வட்டி வழங்குகிறது. சாதாரண ஒரு சேமிப்புக் கணக்கிற்கு வழங்கப்படும் வட்டியை விட இது 2% அதிகமானதாகும். இத் திட்டத்திற்கு வேண்டிய உழைக்கும் போதே சேமிக்கும் ஒழுங்குக்கு அமைவோர்க்கு சுலபமான முறையில் பெறக்கூடிய கடன் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் நோக்கமென்னவெனில், எவ்வளவு தான் சிறு தொகையாக இருந்தாலும் ஒழுங்காகச் சேமிக்கும் நடைமுறையானது பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துதற்கான கடன்காரரின் ஆற்றலையும் விருப்பையும் ஓரளவுக்கு மதிப்பீடு செய்வதற்கு மக்கள் வங்கிக்கும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கும் உதவுகிறது என்பதாம். வீடு கட்டுதற்கோ அல்லது அபிவிருத்தித் திட்டமொன்றிற்கோ நீண்டகாலக் கடன் பெற எதிர்பார்த்திருக்கும் ஒருவர் அவற்றிற்கான திட்டமிடலை முன்கூட்டியே செய்துகொள்ள இத் திட்டம் உதவுகிறது. ஒழுங்கு முறையான வைப்பாளர்கள் அதிக பட்சம் ரூபா 25,000 வரை வீடு கட்டுதற்கு கடனை இவ் வங்கியிடமிருந்து பெறலாம். அதே போல் கைத்தொழில் விவசாயத் திட்டங்களுக்கு ரூபா 50,000 வரை பெறலாம். கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் இந்த அளவுக்கோ நீண்டகால அடிப்படையிலோ கடன் வழங்காதிருப்பதால் கூ. கி. வங்கிகளுக்கும் இவ் வங்கிக்கு மிடையில் விசேட ஒழுங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ் வொழுங்கின் பிரகாரம் மக்கள் வங்கி கூ. கி. வங்கிகளில் வைப்பு வைத்திருக்கும் அவற்றின் அங்கத்தவர்களுக்கு அவர்களது சேமிப்புக் கணக்குகளை மக்கள் வங்கிக்கு மாற்றிக் கொள்ளப் பணிக்காமலே கடன் வழங்குகிறது. *1970* ல் புகுத்தப்பட்ட இத் திட்டத்தின் வெற்றியைக் கீழ்க்கண்ட எண்கள் குறிப்பிடும்:

| | | | கணக்குகள் | தொகை 10 லட்சம் ரூபாயில் |
|---|---|---|---|---|
| டிசம்பர் | 1970 | .. | 14,986 | 2.5 |
| டிசம்பர் | 1971 | .. | 53.791 | 10.7 |
| டிசம்பர் | 1972 | .. | 70,945 | 21.7 |
| டிசம்பர் | 1973 | .. | 104,859 | 41.5 |
| டிசம்பர் | 1974 | .. | 174,027 | 73.2 |
| டிசம்பர் | 1975 | .. | 217,462 | 103.2 |
| ஜூன் | 1976 | .. | 236,242 | 119.8 |

சிறு வர்த்தகர்களின் நன்மைக்காக மேற்கொள்ளப்பட்ட நாளாந்தக் கடன் திட்டம் மக்கள் வங்கியாலும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளாலும் அண்மையில் புகுத்தப்பட்ட புதுவகை ஏற்பாடாகும். இத் திட்டம் ஒரு ஒழுங்கான சிறு சேமிப்பு வளமாக அபிவிருத்தியடையக்கூடிய வாய்ப்பைக் கொடுக்கிறது. பாரம்பரியமாக ஒரு சிறு வர்த்தகன் தனது நாளாந்தச் செயற்பாட்டு மூலதனத்திற்குத் தேவையான பணத்தை பெரிய வர்த்தகர்களிடமிருந்தோ ஈட்டிக்காரரிடமோ இருந்துதான் கடனைப் பெற்றுக் கொள்கிறான். இதற்காக அவன் 'அநி' வட்டி செலுத்த வேண்டியவனாகின்றான். இதில் கடைப்பிடிக்கப்படும் வழமையான நடைமுறையென்னவெனில் காலையில் கடனாக வாங்கப்படும் கடன் மாலையில் வட்டியும் முதலுமாகத் திரும்பச் செலுத்தப்பட வேண்டியிருப்பதே. வட்டி வீதமும் வழக்கமாக நாளொன்றிற்கு 10 சதவீதம் வரை இருக்கும். இவ்வங்கியின் கிளைகளும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும் ஈட்டிக்காரன் தொழிலை மேற்கொண்டு நியாயமான வட்டியில் சிறு வர்த்தகர்களுக்குக் கடன் வழங்குதற்கு முன்வந்திருப்பதன் மூலம் மேலதிகமொன்றை அவன் உருக்கொள்ளச் செய்யக்கூடியதாயுள்ளது. இம் மேலதிகத்தின் ஒரு பகுதியை அவன் தான் கடன் பெற்ற நிறுவனத்திற்கு கடனாகப் பெற்ற தொகையையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தும் அதே சமயத்தில் இம் மேலதிகத்தின் ஒரு பகுதியை சேமிப்பாக வைப்பிலிடவும் பொறுப்பேற்றுக் கொள்கிறான்.

## கிராமிய வங்கிப்படுத்தல் தொழிலில் பங்காளர்களாக மக்கள் வங்கியும் கூட்டுறவுச் சங்கங்களும்

சேமிப்புகளுக்கான கிராமிய வளப்பாடுகளில் அபிவிருத்திக்குரிய வங்கியின் திட்டங்கள் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் கூட்டுறவுச் சங்கங்களுடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டவை. கிராமிய வங்கிப்படுத்தலினதும் கிராமியக் கடன்களினதும் அபிவிருத்தி பிரதான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுடனும் இயன்ற அளவிற்கு வேறு பிரதான கிராமிய அளவிலான கூட்டுறவுச் சங்கங்களுடனும் பங்காளித்துவ அடிப்படையில் தொடரப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேயே மக்கள் வங்கி

கருமமாற்றி முன்னேறி வருகிறது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒரு கிராமிய வங்கியாகவும் இயங்குவதில் உள்ள நல் வாற்றலை இவ்வங்கி உணர்ந்துள்ளது. அதற்கு இயக்கச் செலவுகள் குறைவானவை. உள்ளார்ந்த சூழ்நிலைகளையும் மக்களையும் பற்றிய நெருங்கிய அறிவு அதற்குண்டு. இதற்கும் மேலாக உற்பத்தியுடனும் சந்தைப்படுத்தலுடனும் கடனைத் தொகையிட்டு செய்யும் அதன் திறம், கடன் வழங்கலிலும் அதனைத் திருப்பிப் பெறுவதிலும் உள்ள பிரச்சினைகளுக்கு குறிப்பிடத்தக்களவு நன்மை அளிக்கிறது. மேலும் சந்தைப் படுத்தல் நடைமுறையை ஒரு செழிப்பான விவசாயச் சேமிப்பு வளமாக அபிவிருத்தி செய்யக்கூடிய ஏதுண்டு. அங்கத்தவர்களுக்கு சிறிய தொகையினதானதும் குறுகிய காலத்தினதுமான கடன் வசதியை கூட்டுறவுச் சங்கங்கள் செய்யக் கூடியதாகவும் பெரிய, நீண்டகாலக் கடன் வசதிகளை மக்கள் வங்கிக் கிளைகள் ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாகவும் ஒரு தொகையிட்டுக் கிராமிய கடன் அமைப்பொன்றை வகுக்கக்கூடிய முன்முயற்சியில் இவ் வங்கியின் கொள்கை நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

விரிவாக்கப்பட்ட கிராமியக் கடன் என்ற கருத்தில் 1963 ல் புதிய திட்டமொன்று புகுத்தப்பட்டதோடு வங்கியின் இக் கொள்கையின் முதற் கட்ட நடவடிக்கை உருக்கொள்ள ஆரம்பமாயிற்று. இத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுத் திணைக்களத்தினது உதவியோடு நாணயமாகக் கடன் பெற்றுத் திருப்பிக் கட்டிய கூட்டுறவுச் சங்கங்கள் தெரிவு செய்யப்பட்டு, அக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது அங்கத்தவர்களுக்கு அவர்கள் வேறு வழிகளில் பெறக் கூடியதை விட அதிகமாகவே அங்கீகரிக்கப்பட்ட தேவைகளுக்கென மீண்டும் கடனுகக் கொடுப்பதற்காக மேலதிகப் பற்று வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. தனியே உற்பத்தித் திறன் வாய்ந்தவைக்கு மட்டுமன்றி குடிசைக் கைத்தொழில்கள், கால்நடை வளர்ப்பு, புதிய காணிகளைத் திருத்தி விவசாயம் செய்தல், மின்சாரத் தொடர்பு ஏற்படுத்தல், வீடமைத்தல், கடனைத் திருப்பிச் செலுத்துதல், நுகர்ச்சித் தேவை போன்ற பல்வேறு விஷயங்களுக்கும் இக் கடன்கள் வழங்கப்பட்டன. காணி திருத்திக்கமஞ்செய்தல், கால்நடை வளர்த்தல், குடிசைக் கைத்தொழில் ஆகியவற்றிற்கு அதிகபட்சம் ரூபா 3,000/- மும் நுகர்ச்சித் தேவைகளுக்கு அதிகபட்சம் ரூபா 500/- ம் கடனுக வழங்கப்பட்டன. இக் கடன்கள் ஐந்து வருடங்களுக்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை.

1970 முடிவில் இவ்விரிவாக்கப்பட்ட கடன் திட்டம் 76 கூட்டுறவுச் சங்கங்களினுல் நடைமுறைப் படுத்தப்பட்டது. 1970 இறுதியில் இச் சங்கங்களுக்கு மக்கள் வங்கியினுல் அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப் பற்றுத் திரட்டு எல்லை ரூபா 19 இலட்சமாகும். விரிவாக்கப்பட்ட கடன் திட்டத்தின் வளர்ச்சியைக் கீழேயுள்ள அட்டவணை காட்டும்:

விரிவாக்கப்பட்ட கிராமியக் கடன் திட்டம் 1973 ல் இடை நிறுத்தி வைக்கப்பட்டதும் கிராமியத்துறையில் இது ஆற்றவிருந்த சேவைகள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளால் பெருவாரியாக மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் பற்றி நாம் இப்பொழுது ஆராய்வோம்.

## கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்

கூட்டுறவுக் கடன், சேமிப்புகள் முறையின் பிரதான சேவைகள் தற்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இயக்கம் பெறும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினுல் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம், உற்பத்திக்கும், வீடமைப்பிற்கும், அத்தியாவசிய தேவைக்கும், கடன்களை அடைப்பதற்குமென சிறு வர்த்தகர்களுக்கும், வேறு கிராமிய மட்ட உற்பத்தியாளர்களுக்கும் கைவினைஞர்களுக்கும் விவசாயிகளுக்கும் கடன் வசதி செய்யும் நோக்குடன் 1964 ம் ஆண்டில் மக்கள் வங்கியினுல் ஆரம்பித்து வைக்கப்பட்டதாகும். 1971 வரை இத்திட்டம் பொருளாதார வலுவும் சிறிய கடந்தகாலச் சேவையும் கொண்ட தெரிந்தெடுக்கப்பட்ட சங்கங்களினுல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த அடிப்படையில் 1970 ல் 90 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் இயங்கி வந்தன. ஆனுல் 1971 ல் 5884 சங்கங்களைக் கொண்டிருந்த பலநோக்குக் கூட்டுறவு இயக்கம் 371 பெரிய அலகுகளாக கூட்டிணைப்புப் பெறக்கூடியதாக செய்யப்பட்ட புனரமைப்போடு அரசாங்கம் ஒவ்வொரு புதிய சங்கத்திலும் ஒரு கூட்டுறவுக் கிராமிய வங்கியை நிறுவத் தீர்மானித்தது.

கூட்டுறவுக் கிராமிய வங்கி என்ற பதம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமொன்றின் கடன், வங்கிப் படுத்தற் பகுதிக்கு இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ஒரு பதவிப் பெயராகும். கூட்டுறவுக் கிராமிய வங்கி தலைமை பணிமனையகத்தின் மூலமும் தெரிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தின் கிளைகளின் மூலமும் நடைமுறைப்படுத்தப்படும் ஒன்றாகும். 1976 மார்ச்சு 31 ம் திகதியில் மொத்தம் 340 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும், கூ. கி. வங்கிச் சேவைகளை மேற்கொண்ட 120 சிறப்புக் கிளைகளும் இருந்தன.

(அ) அங்கத்தவர்களதும் அங்கத்தவர்கள் அல்லாதோரதும் வைப்புகளின் திரட்டல்.

(ஆ) உற்பத்தி, நுகர்வுத் தேவைகளுக்காக அங்கத்தவர்களுக்கு கடன் வசதிகளும் வேறு வசதிகளும் ஏற்பாடு செய்தல்.

(இ) அங்கத்தவர்களுக்கும் அங்கத்தவர்கள் அல்லாதோருக்கும் அடவு பிடித்தல் வசதி யேற்பாடு.

(ஈ) பணம் கொடுப்பனவு மற்றும் மாற்றீட்டுச் சேவைகள் ஏற்பாடு.

கிராமிய வங்கிப்படுத்தலையும் கிராமியக் கடனையும் அபிவிருத்தி செய்தலில் பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களோடு கலந்து கொள்ளும் வங்கியினது கொள்கை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஒரு குறுகிய பிராந்தியத்தில் இயங்கும் கூட்டுறவுக் கிராமிய வங்கிக்கு உள்நாட்டு மக்களை தெரிந்து வைக்கக்கூடிய நெருக்கமான அறிவைக் கொண்டிருக்கும் வாய்ப்புண்டு. பாரம்பரியமான பிணைகள் குறைவாயுள்ள ஒரு சூழ்நிலையில் இதற்கொரு முக்கியத்துவம் உண்டு. இப்பிணை தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று கடன் கொடு நிலையங்களால் வலியுறுத்தப்படுவது வறுமையை வளர்த்துக் கொண்டு செல்லத் தூண்டுவதாகும். எனவே மக்கள் வங்கியின் கூட்டுறவுக் கிராமிய வங்கியுடனுன இணைத் தொடர்பு உள்நாட்டுச் சூழ்நிலை அறிவின் மூலம் ஒரு கிராமிய நிறுவனம் கொண்டிருக்கும் நன்மைகளோடு இன்று இருப்பது போல வெவ்வேறு பிராந்தியங்களுக்கிடையிலான வளங்களின் பரிமாற்றத்தை அனுமதிக்கும் கிளை வங்கிப் படுத்தல் முறையின் நன்மைகளை ஒன்று சேர்க்கும் ஒரு வழியாகும். கிராமியக் கூட்டுறவு வங்கிகளின் நோக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன:—

(அ) உற்பத்தி, சந்தைப் படுத்தல்களோடு கடனைத் தொகையிடு செய்தல்.

(ஆ) சந்தைப் படுத்தல் தகவல், பண்டசாலைப் படுத்தல், கொண்டு செல்லல் போன்றவற்றிற்கான ஏற்பாடு.

(இ) உள்நாட்டு திறன்களினதும், வளங்களினதும் மதிப்பீடும் இனங்காணுதலும். இது அபிவிருத்திக்கான நிறைதிறனேடு செய்யப்படும் ஒன்று.

(ஈ) அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தலும், நடைமுறைப் படுத்தலும்.

(உ) அங்கத்தவர்களது சகல அடிப்படைத் தேவைகளையும் ஒட்டியதாக பரிமாற்றக் கடன் வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் மாதிரிகளும், கடன் எல்லைகளும் கீழுள்ள அட்டவணையில் தரப்படுகின்றன:

| | | | எல்லை |
|---|---|---|---|
| உற்பத்தி (கைத்தொழில் விவசாய கால்நடை வளர்ப்புப் போன்றவை) | .. | ரூ. | 7500 |
| நுகர்வு | .. .. | ரூ. | 1000 |
| கட்டிட அமைப்பு (வீடு, வேலைத்தளம், பண்டசாலை போன்றவை) | .. .. | ரூ. | 7500 |
| வர்த்தகம் | .. .. | ரூ. | 1000 |
| கடன் அழித்தல் | .. .. | ரூ. | 5000 |
| மின்சார, மயப்படுத்தல் (வீடு, வேலைத்தளம் முதலியவை) | | ரூ. | 1000 |
| அவசர தேவைகள் | .. | ரூ. | 200 |

| காலாண்டு முடிவு | | கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கை | திரட்டு மேலதிகப் பற்று மக்கள் வங்கியால் அங்கீகரிக்கப்பட்டது | வசதிகள் சங்கங்களில் உபயோகப்படுத்தப்பட்டது |
|---|---|---|---|---|
| 1967 | மார்ச்சு | 55 | 1,638,568 | 1,275,450 |
| | ஜூன் | 56 | 1,651,068 | 1,279,757 |
| | செப்டம்பர் | 58 | 1,685,268 | 1,254,471 |
| | டிசம்பர் | 67 | 1,901,118 | 1,295,673 |
| 1968 | மார்ச்சு | 66 | 1,796,818 | 1,211,925 |
| | ஜூன் | 67 | 1,829,818 | 1,231,479 |
| | செப்டம்பர் | 69 | 1,872,818 | 1,293,536 |
| | டிசம்பர் | 69 | 1,873,118 | 1,162,904 |
| 1969 | மார்ச்சு | 72 | 1,892,818 | 1,166,789 |
| | ஜூன் | 72 | 1,914,818 | 1,224,288 |
| | செப்டம்பர் | 71 | 1,856,318 | 1,210,672 |
| | டிசம்பர் | 72 | 1,861,950 | 1,163,384 |
| 1970 | மார்ச்சு | 73 | 1,878,450 | 1,229,580 |
| | ஜூன் | 74 | 1,903,450 | 1,207,662 |
| | செப்டம்பர் | 73 | 1,854,450 | 1,183,657 |
| | டிசம்பர் | 76 | 1,903,450 | 1,200,847 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை, 1970.

## நோக்கங்கள்

கூட்டுறவுக் கிராமிய வங்கியின் கடன் கொடுக்கும் கொள்கை உற்பத்தி வழிப் பட்டதாகும். ஆனல், உற்பத்திக்கான கடனுக்கு கிராமத்தோர் ஸ்தாபன சார்பற்ற வழிகளை பாரம்பரியமாக நம்பியிருக்கும் கட்டத்திலும், வேறு அத்தியாவசிய தேவைகளுக்கும் மேற்கூறப்பட்ட பல வகையான தேவைகளுக்கு அதிகப்படியான கடன் வசதியை வழங்குவதும் இதன் வகையான தேவைகளுக்கு அதிகப்படியான கடன் வசதியை வழங்குவதும் இதன் நோக்கமாகும். இவ்வசதிகள் ஒரு அங்கத்தவருக்கு அவர் விரும்பும் இணைப்பில் அவரது பெயரில் திறுவப்பட்டுள்ள கடன் எல்லை உருவில், கிடைக்கக்கூடியதாக செய்யப்பட்டுள்ளன. இதன்படி உற்பத்திக்கும் வேறு தேவைகள் ஏற்படும் போதும் அக் கிராமத்தவன் தன் கடனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## அரசாங்கக் கடன்களும் கிராமிய கூட்டுறவு வங்கிக் கடன்களும்

பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கடன் நடவடிக்கைகளோடு கூடவே விவசாயிகளுக்கு நெல்லுக்கும், வேறு பல அத்தியாவசிய உணவுப் பயிர்களுக்கும் ''புதிய விவசாயக் கடன் திட்டம்'' என்ற அரசாங்கத் திட்டத்தின் கீழ் பயிரிடல் கடன்களை வழங்குகின்றன. இது சாதனை வழியில் ஏற்கனவே ஆராயப்பட்ட பழைய கூட்டுறவு விவசாய உற்பத்திச் சங்கங்களின் மூலம் இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து ஆரம்பிக்கப்பட்ட விவசாயிகளுக்கான அரசாங்கக் கடன்களின் ஒரு தொடர்ச்சியாகும். 1967 ல் அரசாங்கம் இறுக்கப்படாத கடன்கள் சம்பந்தமாக 75 சதவிதம் வரையிலான கடன் உத்தரவாதத்தை மக்கள் வங்கிக்கு அளித்து அதன் கடன் கொடு நடவடிக்கைகளை மக்கள் வங்கிக்கு அளித்தது. மக்கள் வங்கி விவசாயிகளுக்கு கடனாக திருப்பிக் கொடுப்பதற்கென பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்குகின்றது. ஆனல், மக்கள் வங்கிக்கோ, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கோ கடனைத் தீர்மானிப்பதில் உண்மையான சுயாதீனம் கிடையாது கடன்கள் அரசாங்க கோட்பாட்டிற்கிணங்கவே வழங்கப்படுகின்றன. கடன் கொடுத்தலின் அடிப்படைப் பரிசீலனைகளைக் கூட நடைமுறைப் படுத்துதலுக்கு இவை சந்தர்ப்பமளிப்பதில்லை. அடிக்கடி கடனைத் திருப்பிச் செலுத்தாது தவறு இழைப்போர் புதுது புதிதாக ஏற்றுக் கொள்ளப்படுவர். இத் திட்டத்தின் கீழ் கடன் திருப்பிச் செலுத்தாதோர் எண்ணிக்கை மிக உயர்ந்ததாகும்.

இத்தகைய கடன்களுக்கிடையிலும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் கடன் நடைமுறைகளுக் கிடையிலும் ஒரு தெளிவான வேறுபாடு வரையப்பட வேண்டும். பின்னையதில், ஒரு செம்மையான கிராமிய கடன் முறையை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம் முயற்சியில் கடன்களைத் திருப்பிச் செலுத்த போதுமான மேலதிகத்தை உருவாக்குவதற்கு திறமைகளைப் பயன்படுத்தும் திறனேடு கூடிய திறமைகள் கடன் பெறுவோரது குணநலன்கள் ஆகிய அடிப்படைக் கடன் கொடு பரிசீலனைகள் கவனத்திற் கெடுத்துக் கொள்ளப்படுகின்றன. அரசாங்கக் கடன் திட்டத்தின் கீழ் திருப்பிச் செலுத்தாது தவறிழைப்போரின் வீதம் 45.3 சதவீதமும், கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கடன்களின் திருப்பிச் செலுத்தாது தவறிழைப்போரது வீதம் கிட்டமுட்ட 9 சதவீதமாகவும் இருப்பதிலிருந்து இவற்றில் உள்ள பாரிய முரண்பாட்டினைக் காணலாம்.

## வைப்புகள் திரட்டல்

கூட்டுறவுக் கிராமிய வங்கியின் நிதி வளவாய்கள் கீழ்க்கண்டவையாம்:

(அ) அங்கத்தவர், அங்கத்தவர் அல்லாதோர் வைப்புகள்.

(ஆ) மக்கள் வங்கியிடமிருந்து பெறப்படும் கடன்கள்.

கூட்டுறவுக் கிராமிய வங்கியின் வைப்புத் திரட்டல் கைங்கரியம் இரட்டைக் குறிக்கோள் கொண்டதாகும். இதில் ஒன்று அதனது சொந்தக் கடன் கொடுத்தல் நடவடிக்கைக்கு உள்நாட்டு வளவாய்களை அதிகபட்சமாக்கிக் கொள்ளுதலும் மற்றது கிராமிய மட்டத்தில் சேமிப்புப் பழக்க வழக்கங்களை விருத்தி செய்வதும் ஆகும். கடந்த காலங்களில் இலங்கையின் கிராமப் பிரதேசங்கள் அரசாங்கத்தின் அதிகப்படியான அபிவிருத்திச் செலவினங்களால் பெரிதும் பயனடைந்துள்ளன. பெருந்தொகையான நிதிகள் விவசாயக் கடனாக வழங்கப்பட்டுள்ளன. அத்தோடு அரசாங்கம் அதன் உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான விலைகளை முன்னேற்றகரமாக அதிகரித்துள்ளது. உதாரணமாக நெல்லு தற்போது புசல் ஒன்று ரூபா 33/- ஆகக் கொள்வனவு செய்யப்படுகிறது. ஆனல் அறுபதுகளில் இவ்விலை ஆக ரூபா 12/- ஆகவே இருந்துள்ளது. அபிவிருத்தி யடைந்த விவசாயப் பண்புகளைக் கடைப்பிடித்ததனுலும் உரம் கிருமி நாசினி முதலியவற்றையும் சிறந்த விதை நெல்லை உபயோகித்ததனுலும் ஏற்பட்ட விவசாய உற்பத்தி வளர்ச்சி விவசாயிக்கு அதிகரித்த வருமானத்தைக் கொடுத்துள்ளதேயானுலும் கடந்த சில வருடங்களில் நிலவிய கடும் வரட்சி நாட்டின் சில பகுதிகளில் குறிப்பிடத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் கிராமப்புறங்களில் குறிப்பிடத்தக்களவு சேமிப்புத் திரட்டல் திறைதிறன் இருந்திருப்பது தெளிவாகத் தெரிகிறது. இந்த வகையில் மக்கள் வங்கிக் கிராமியக் கிளைகள் அடைந்துள்ள தொடர்பூக்க வெற்றி இதன் சாத்தியப்பாட்டிற்கு ஒரு கைகாட்டியாகும். கூட்டுறவுக் கிராமிய வங்கி ஒரு கிராமிய மட்டத்திலான முகவர் நிலையமாயிருத்தலால் அது தேவையான நம்பிக்கையைக்கட்டியெழுப்பக் கூடியதாக இருக்குமாயின் ஒரு மக்கள் வங்கியை விடவோ வேறு வர்த்தக வங்கிக் கிளைகளை விடவோ இத்திறைதிறனை உபயோகப்படுத்திக்கொள்ள உண்மையில் பல வழிகளில் அதிக அனுகூலம் பெற்றதாக இருக்கிறது. நகரப்புற வாழ்வோடு ஒட்டிப்போன வர்த்தக வங்கி ஊழியர்கள் கூட்டுறவுக் கிராமிய வங்கி ஊழியர்களால் இயலக்கூடிய அளவுக்கு கிராமாந்தரச் சமூகங்களோடு சரியான முறையில் உணர்வு பூர்வமான ஆதரவைப் பேண முடியாதிருக்கும். அடிக்கடி கிராமத்தவர்களின் பணத்தைப் பூட்டிவைக்கும் பழம் பழக்க வழக்கங்களை கைவிடும்படி தூண்டுவதாகவும் திருமணம், மரணம் போன்ற கிரியைகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும்படி தெண்டிப்பதாகவுமே முயற்சிகள் மேற்கொள்வதாக இருந்திருக்கிறது. இதை நிறைவேற்றுதற்கு நம்பிக்கையை வளர்க்க வேண்டியிருந்திருக்கிறது. இத்தகையகைங்கரியத்திற்கு சரியான அணுகுதல் முறையும் புரிந்துணர்வும் தேவையான ஒன்று. வைப்புவிகிதங்களைப் பொறுத்த மட்டிலும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் தாமே

அட்டவணை III

### கிராமிய வங்கிகளின் வைப்புகளும் முற்பணங்களும்

| | வங்கிகள் எண்ணிக்கை | | வைப்புக் கணக்குகள் | | | | | | முற்பணங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிராமிய வங்கிகள் | கிளைகள் | சேமிப்புகள் | | நிலையானவை | | மொத்தம் | | கடன்கள் | | அடவு | | மொத்தம் | |
| | | | எண். | தொகை ரூ.ப.ல. | எண். | தொகை ரூ.ப.ல. | எண். | தொகை ரூ.ப.ல. | எண். | தொகை ரூ.ப.ல. | எண். | தொகை ரூ.ப.ல. | எண். | தொகை ரூ.ப.ல. |
| 1965 டிசம்பர் | 8 | — | 2,924 | .5 | 9 | — | 2,933 | .5 | 1,153 | .9 | n.a. | .3 | — | 1.2 |
| 1966 டிசம்பர் | 13 | — | 4,636 | .7 | 15 | — | 4,651 | .7 | 1,783 | 1.3 | 4,222 | .4 | 6,005 | 1.8 |
| 1967 டிசம்பர் | 27 | — | 8,792 | 1.3 | 41 | — | 8,833 | 1.4 | 2,897 | 2.0 | 6,598 | .6 | 9,495 | 2.7 |
| 1968 டிசம்பர் | 44 | — | 17,359 | 3.1 | 287 | .2 | 17,646 | 3.3 | 5,586 | 3.6 | 9,507 | 1.1 | 15,093 | 4.7 |
| 1969 டிசம்பர் | 68 | — | 28,626 | 5.7 | 724 | .5 | 29,350 | 6.2 | 7,893 | 5.6 | 14,325 | 1.5 | 22,218 | 7.1 |
| 1970 டிசம்பர் | 90 | — | 49,939 | 16.1 | 892 | .8 | 50,831 | 170 | 10,017 | 7.0 | 18,092 | 2.0 | 28,109 | 9.1 |
| 1971 டிசம்பர் | 111 | — | 60,371 | 17.2 | 838 | .7 | 61,209 | 17.9 | 10,725 | 7.0 | 21,044 | 2.2 | 31,769 | 9.2 |
| 1972 டிசம்பர் | 242 | — | 172,822 | 22.7 | 812 | .6 | 103,634 | 23.3 | 11,515 | 8.2 | 70,735 | 7.0 | 72,250 | 15.2 |
| 1973 டிசம்பர் | 341 | 62 | 206,970 | 44.3 | 748 | .9 | 207,718 | 45.2 | 20,548 | 16.2 | 150,118 | 22.7 | 170,666 | 38.9 |
| 1974 டிசம்பர் | 332 | 71 | 366,205 | 61.5 | 1,271 | 1.2 | 367,474 | 62.7 | 26,819 | 29.0 | 235,115 | 38.4 | 261,934 | 67.4 |
| 1975 டிசம்பர் | 338 | 109 | 499,969 | 72.8 | 783 | 1.4 | 499,969 | 74.2 | 35,052 | 37.4 | 298,583 | 49.9 | 333,635 | 87.3 |
| 1976 மாச் | 340 | 120 | 524,242 | 80.1 | 926 | 1.4 | 525,168 | 81.5 | 37,839 | 40.6 | 307,328 | 51.6 | 345,167 | 92.2 |

கவர்ச்சிகரமான வழிகளைப் பின்பற்றலாம். இது மத்திய வங்கியின் பணிப்புகளினால் கட்டுப்படுத்தப்படுவதில்லை. வர்த்தக வங்கிகளைப் போலல்லாமல் வட்டி வீதங்களின் மீதான வங்கிகளுக் கிடைப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளிலிருந்து இது விதிவிலக்குப் பெற்றதாகும். உத்தியோகபூர்வமற்ற கிராமியப் பணச் சந்தைகளில் நிலவும் நாணய விகிதங்கள் நகர வைப்பு வீதங்களை விட பொதுவாகவே உயர்ந்திருப்பதால் கிராமத்தில் இயங்கி வரும் பண நிறுவனங்கள் போட்டியிட்டு நகர நிறுவனங்களை விட அதிக வீதங்களை வழங்க வேண்டியுள்ளது. நகரக் கிளைகளுக்கும் கிராமக் கிளைகளுக்குமிடையில் இத்தகைய வேறுபட்டு நிற்கும் வீதக் கொள்கையை வர்த்தக வங்கிகள் மேற்கொள்ள முடியாது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளோவெனில் வைப்பு வீதத்தை வெவ்வேறாகக் கொள்வதில் சுயாதீனமாயுள்ளன. உண்மையில் கூ. கி. வங்கியின் சேமிப்பு வைப்புகளின் மீதான வட்டி விகிதம் 6 முதல் 8 சதவீதம் வரை வேறுபட்டதாகும். தற்போது வர்த்தக வங்கிகளில் நிலவி வரும் 5½% வீதத்தை விட அதிகமானதாகும். கூட்டுறவுக் கிராமிய வங்கியின் வேலை நேரமும் மிகவும் நீண்டதாக இருப்பதனால் இயக்கச் செலவினமும் மிகவும் குறைந்ததாகும். மேலும் கூட்டுறவுக் கிராமிய வங்கி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு பகுதியாக இருப்பதனால் சங்கத்தினால் வழங்கப்படும் கிராமிய விளைபொருளுக்கான சந்தைப்படுத்தல் வசதிக்கூடான விற்பனைகளோடு சேமிப்புகளையும் இணைக்கக்கூடிய ஒரு நிலையில் உள்ளது. இது உண்மையில் இன்று நெல்லு மற்றும் ஏனைய உணவுப் பயிர்களை பயிரிடும் விவசாயிகளின் சேமிப்புகளைப் பயன்படுத்துதற்கு பல கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் ஒரு உபாயமாகும்.

உண்மையான இயங்கு நிலையில் இத்தகைய நன்மைகளைப் பயன்படுத்துவதில் கூட்டுறவுக்கிராமிய வங்கிகள் எந்தளவுக்கு வெற்றி கண்டுள்ளன என்பதை ஆராய்வது உபயோககரமான ஒன்றாகும். இக்கட்டுரையில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை கூட்டுறவுக் கிராமிய வங்கியில் 1965 முதல் 1976 மார்ச்சு 31 ம் திகதி வரைக்கான காலகட்டத்தின் சேமிப்புகளினதும் கடன்களினதும் விவர எண்களைத் தருகிறது. வைப்புகளினது உயர்ச்சியின் சீரான மேற்போக்கை இது காட்டுகிறது. 1976 மார்ச்சு 31 ல் கூ. கி. வங்கிகளின் சேமிப்புகளினதும் நியதி - வைப்புக்களினதும் தொகை ரூபா 8.15 கோடியாகவும் வைப்புக் கணக்குகள் எண்ணிக்கை 525,168 ஆகவும் சராசரி வைப்புக்கள் ரூபா 150/- ஆகவும் இருந்திருக்கிறது. ஒவ்வொரு கணக்கும் 5 பேர் கொண்ட ஒரு வீட்டைப் பிரதிபலிப்பதாகக் கொண்டால் இது 26 லட்சத்தைக் கொண்ட ஒரு குடித்தொகுதியைப் பிரதிபலிக்கும். மேலும் கிட்டமுட்ட ஒரு கோடியே 30 லட்சமான இலங்கையின் குடிசனத் தொகையில் 75% வீதமானோர் கிராமங்களில் வசிப்பவர்கள் என்று கொண்டால் இது கிராமத்தரக் குடித்தொகையின் 28.2 சதவீதமாகும்.

இதுவரை அடையப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதாயின் மனதில் வைக்கப்பட வேண்டிய முக்கிய விடயமென்னவெனின் கூட்டுறவுக் கிராமிய வங்கி இதுவரை 5 வருடங்களுக்கு மட்டுமே இயங்கி வந்துள்ளதென்பதாம். கூட்டுறவுக் கிராமிய வங்கி 1964 வரையிலேயே ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 1971 ன் ஒருங்கிணைப்பிற்கு முன் இத் திட்டம் அன்று இயங்கிவந்த சங்கங்களில் 90 சங்கங்களுக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் 5884 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இருந்தன என்ற உண்மையைக் கருத்துக் கெடுத்துக் கொண்டால் இந் 90 சங்கங்களும் உள்ளடக்கிய பூவியல் வர்த்தமானம் மிகக் குறுகிய ஒன்றே. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது அமைவு பெற்றுள்ள நிலையில் அவற்றில் பல்வேறு காரணிகள் இயக்கத்தில் உள்ளன. அக் காரணிகள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் வளர்ச்சியை பெரிதும் தடுப்பவையாகும். இவற்றில் பிரதானமானது பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் நுகர்வோர் - வியாபார நடவடிக்கையாகும். யுத்த காலத்தில் அரசாங்கம் பற்றாக்குறையில் இருந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோக முகவர்களாக இயங்க எப்படி நாடு முழுதும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கப் பின்னலை ஏற்படுத்திற்று என்பதை ஏற்கனவே கண்டோம். இச் சூழ்நிலை யுத்தம் நின்றதும் மாறிவிடவில்லை. ஏனெனில் அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாடு மேலும் நிலவியதால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு விவசாய விளைபொருள் சங்கங்களின் இடத்தை எடுத்து முழு இலங்கைக்குமே அரசாங்கத்தினது விநியோக முகவராக இயங்க ஆரம்பித்தன. இன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் கையாளப்படும் நுகர்வோர் - வியாபாரத்தின் கனபரிமாணம் மிகப் பெரிதாயுள்ளது. இதன் விளைவாக பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குனர் சபைகளின் நேரமும் சக்திகளும் இந்த வேலைக்கே அர்ப்பணிக்கப்படுகின்றன. இதிலே கவனம் செலுத்தியிருப்பதனால் இயக்குனர் சபைகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கடன் வங்கிப்படுத்தல் போன்ற கடமைகளை அநேகமாக உதாசீனம் செய்கின்றன. அத்தோடு கடன் கொடு கொள்கைகளில் உள்ளார்த்தமான ஒரு பாதுகாவலும் இருந்து வருகிறது. இதற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றின் இயக்குனர் சபைகளின் ஆதரவுண்டு. இப் பாதுகாவல்கள் அபிவிருத்தி வழிப்பட்ட கடன்களிலும் பார்க்க பிணைவழிப்பட்ட கடன்களுக்கு மிகை நாட்டம் வழங்குகின்றன.

இது தவிர கூட்டுறவுக் கிராமிய வங்கி நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள் மற்றொரு காரணியைக் கொண்டுள்ளன. தற்போதைய பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக உயர் மட்டத்தில், கூட்டுறவுக் கிராமிய வங்கி முகாமையாளர், சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அலுவல்களுக்கு பொதுப் பொறுப்பாளராயிருக்கும் ப. நோ. கூ. சங்கப் பொது முகாமையாளரின் கீழேயே கடமையாற்ற வேண்டியவராயிருக்கின்றார். சில கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் அவற்றின் முகாமையாளர்கள் தக்க முன்னேக்கையும் ஊக்கத்தையும் வெளிப்படுத்தி கூ. கி. வங்கியின் நோக்கத்தினை அடைவதற்குக் காட்டும் முயற்சி கட்டுப்படுத்தப்படுகின்றது. கூ. கி. வங்கி முகாமையாளரைப் பொறுத்தளவில் போதிய வங்கிப் படுத்தல், கடன் கொடு அனுபவம் குறைந்திருந்ததும் பல கூட்டுறவுக் கிராமிய வங்கிகளது வளர்ச்சி மந்தமடைவதற்கு ஏதுவாய் அமைந்திருக்கிறது. பல கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் பல்கலைக் கழகப் பட்டதாரிகளை முகாமையாளர்களாய் நியமித்திருந்தன. ஆனால் இதிலுள்ள ஆச்சரியமென்னவெனில் இது ஒரு எதிர்மறை உற்பத்தித்திறன் கொண்ட காரணியாய் பல கூ. கி. வங்கிகளில் மாறிவிட்டதே. இது பெரும்பாலும் ஏன் இப்படி நிகழ்கிறது என்றால், உத்தியோகம் கிடைக்காத காரணத்தால் கிராமத்தில் இவ் வேலையை ஏற்றுக்கொண்ட பட்டதாரிகள் அரசாங்கத்திலோ ஒரு கூட்டுத்தாபனத்திலோ அல்லது தனியார் துறையிலோ நல்ல வருவாயும் சுபீட்சமும் எதிர்கால உத்தியோக உயர்வு வாய்ப்புகளும் உள்ள தொழில்களை நாடி விரும்பிக் காத்திருப்பதனாலேயாம்.

### கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கு மக்கள் வங்கியின் ஆலோசனைச் சேவைகள்

மேற் கூறப்பட்ட காரணிகள் காரணமாக கூட்டுறவு கிராமிய வங்கிகளின் நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு பணிப்பிடுதல், தொடக்கி வைத்தல் போன்ற பிரதான செயல் முறைகளில் மக்கள் வங்கியின் வெளி அலுவலர்கள் முக்கிய பங்கினை ஆற்ற வேண்டுமென்று பொதுவாக உணரப்பட்டது. 1964 ல் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு கிராமிய வங்கித் திட்டத்தின் ஆரம்ப காலப் படிமுறையில், கூட்டுறவுக் கிராமிய வங்கி நிறுவனத்தின் அப்போதிருந்த அமைப்பு முறை இந்த வகையான பங்காற்றுதலுக்கு வசதி செய்தது. வங்கியினது அலுவலர்கள் சில காலங்களுக்கு கூட்டுறவுக் கிராமிய வங்கி முகவர்களாக அவ்வப்போது கடமையாற்றினர். இத்தகைய அமைவில் இக் கூட்டுறவுக் கிராமிய வங்கி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு சுயாதீன அலகாக இயங்கியது. இது வெவ்வேறு கணக்கிடு பதிவுகளைப் பேணியதுடன் இதன் முகவர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆட்சி சபைக்கு நேரடியாகவே பொறுப்புள்ளவராகவும் இருந்தார். ஆனால், 1971 ல் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்ட பின் கூட்டுறவுக் கிராமிய வங்கிக் கணக்குகள் ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பகுதிகளுடன் தொகையிடு செய்யப்பட்டன. அதன் முகவர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளருக்குக் கீழ்க்கொண்டு வரப்பட்டார். இதனால், கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சுயாதீனமாக இயங்கும் அலகாக இருந்த நிலை அர்த்தசாரமாக முற்றுப் பெற்றது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் வளர்ச்சியைத் தடைபண்ணும் பிரச்சினைகள் உத்தியோகச் சார்புடையதும், உத்தியோக சார்பற்றதுமான கூட்டுறவுத் தலைமையின் கவனத்தை ஈர்த்ததனால் எதிர்காலத்தில் மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். தற்போது மக்கள் வங்கி தனது பங்குக்கு கிராமியத் துறையில் அபிவிருத்தி வேலைகளின் மீதான அதன் குவிநோக்கைக் கூர்மைப் படுத்தக் கூடியதாக, அதன் கிளைகளின் செயற் திட்டத்தைப் புனரமைப்பு செய்வதற்கான திட்ட மொன்றை நடைமுறைப் படுத்தியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்களின் தொடர் இயக்கத்தையும், நடைமுறைப் படுத்தலையும், உருவாக்கலையும், இனங் காணுதலையும் செய்வதற்கென அபிவிருத்தி உதவியாளர்கள் வெளிக்களத்தில் வேலைக்கு வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் வேலைக்கு அமர்த்தப்படுவர். கூட்டுறவுக் கிராமிய வங்கி கிராமத்தில் அவர்களது நடவடிக்கைகளின் கேந்திர நிலையமாக அமையும். அபிவிருத்தி உதவியாளர்கள் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கு அளிக்கும் மேற்பார்வை மற்றும் ஆலோசனைச் சேவைகளினால் கூட்டுறவு வங்கிகள் பெரிதும் பயனடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினால் மேற்கொள்ளப்படும் சேமிப்புகள் திரட்டலின் விஷயத்திற்குத் திரும்பின், சேமிப்புகளுக்கான கிராமிய சந்தையின் சில அம்சங்கள் மேலும் பரிசீலனையை வேண்டி நிற்பதைக் காணலாம். கிராமத்தில் அதிகமாவ செல்

வம் படைத்த கமக்காரர்களும், மேலதிக நிதியுள்ள வேறு சில நபர்களும் உள்ளனர். இவர்கள் கிராமத்தில் வைப்பு வைக்கக் கூடிய வெளிப்படைச் சந்தையின் அங்கங்கள். எனவே, இவர்களை கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் தமது மேலதிக நிதிகளை வைப்பிலிட தூண்டுவதில் குறிப்பிடத்தக்களவு வெற்றி காணப்பட்டுள்ளது. ஆனுல், வறுமை மட்டத்திலும், அன்றன்று வயிறு கழுவும் வாழ்க்கை மட்டத்திலும் உள்ள கிராமிய சமூகத்தின் கீழ்மட்ட வகுப்புகளின் சீவனம் சம்பந்தப்பட்ட விஷயமும் அங்கிருக்கவே செய்கிறது. இத்தகைய மட்டங்களில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சேமிப்பு விருத்திக் கைங்கரியம் மிகக் கூர்மையான அணுகுதல் முறையே வேண்டி நிற்கிறது. இப்படியான கட்டத்தில் சேமிப்புகளுக்கு முன் கடன் வழங்கல் இடம் பெற வேண்டும். இங்கு தேவைப்படுவது வருவாய் மேலதிகங்களை விருத்தி செய்யக்கூடியதாக அதிகப்படியான உற்பத்தித் திறத்தின் பால் திருப்பப்பட்ட நெருக்கிறுதி உபயோக மேற்பார்வையினுல் அனுசரணை யாக்கப்பட்ட கடன் வசதிகளை விவசாயிகளுக்கும், கைவினைஞர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதாகும். இத்தகைய வழியொற்றிய கூட்டுறவுக் கிராமிய வங்கியின் கடன் நடவடிக்கைகள் வறிய வகுப்பினரது வருவாயை அதிகரிப்பதோடு மட்டும் அமையாது, நிலச் சொந்தக்காரர்கள், சட்டிக்காரர்கள், செல்வந்த விவசாயிகள் போன்ற உள்நாட்டு தனியார் வளவாய்களிலிருந்து கடன் பெறும் கிராக்கியை அதிகரிக்கவும் செய்கிறது. இது கிராமிய மட்டத்திலான வட்டி வீதத்தை குறைத்து மேலதிகம் வைத்திருப்போரது பணத்தை கூட்டுறவுக் கிராமிய வங்கியின் பால் ஈர்க்க உதவும்.

## கிராமத்தில் உள்ள கீழ்மட்ட வகுப்பினர்

கூட்டுறவுக் கடன் எந்த அளவுக்கு கிராமியக் குடிசனங்களின் குறைந்த மட்ட வகுப்பினரைச் சென்றடைகின்றது என்ற கேள்வியை இது கிளப்புகிறது. கூட்டுறவுக் கிராமிய வங்கிகளதும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களதும் நடைமுறை இயக்கத்திலுள்ள நிறுவன சார்பானதும் நிர்வாகச் சார்பானதுமான பல பலவீனங்களை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். கடன் கொடு கொள்கை சம்பந்தமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பல ஆளுநர் சபைகளின் உள்ளார்ந்த வைதிகத் தன்மை பற்றியும் நாம் குறிப்பிட்டுள்ளோம். இது சம்பந்தமாக இலங்கைக் கமத்தொழில் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளும் மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பிரிவினுல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் சில சுவாரஸ்யமான தகவல்களை வெளிப்படுத்துகின்றன. மத்தியபீட பூமியில் உள்ள கண்டி மாவட்டத்தில் கமத்தொழில் ஆராய்ச்சிப் பயிற்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வு, புதிய விவசாயக் கடன் திட்டத்தின் கீழ் விவசாயக் கடன்களைக் குறைவாகப் பயன்படுத்திய வகுப்பு 2 ஏக்கர் காணி வரை உடமை கொண்டுள்ள சிறு விவசாயிகள் வகுப்பே என்று எடுத்துக் காட்டியுள்ளது. ஆறு ஏக்கர் காணிக்கு அதிகமாக உடமை கொண்ட கமக்கார வகுப்பினரின் கடன் உபயோக எண் 89% ஆக இருக்க சிறு விவசாயிகள் உபயோக எண் 35% ஆக இருந்துள்ளது. கூட்டுறவு இயக்கத்தினுல் வழங்கப்பட்ட வேறு சேவைகளிலும் இதே போக்கையே காணக் கூடியதாயுள்ளது. உதாரணமாக விதை நெல்லுப் பயன்பாடு 2 ஏக்கர் உடமை கொண்டுள்ள சிறு விவசாய வகுப்பினருக்கு 38% ஆகவும் 6 ஏக்கர் வகுப்பினர்க்கு 67% ஆகவும் இருந்துள்ளது. சிறு கமக்காரர்கள் அவர்களது குறைந்த சமூக பொருளாதாரத் தரம் காரணமாக கூட்டுறவு நிறுவனங்களை விட தனியார் வளவாய்களையே தமது கடன் தேவைக்கு நம்பி அவர்களை நாடிச் செல்கிறார்கள் என்று தெரிகிறது. கடன்கள் போதிய அளவில் அதனை வேண்டி நிற்கும் வறிய கமக்காரர்களைச் சென்றடைவதில்லை என்ற உண்மை, இது கமக்காரர்கள் புதிய தொழில் நுட்பங்களைக் கடைப்பிடித்தல் என்ற ஆய்வோடு (சாமுவெல் 1974) இணங்குவதாய் உள்ளது. கிராமியப் பொருளாதாரத்தில் செலுத்தப்படும் உதவிகள் உண்மையில் அவற்றின் தேவையிலுள்ள வறிய வகுப்பினரை விட செல்வந்த வகுப்பினராலேயே அதிகமாக உறிஞ்சப்படுகின்றன என்று இவ்வாய்வு சுட்டிக் காட்டுகிறது.

கிராமத்தில் அலுவலர் எதேச்சாதிகாரத்தின் தாக்கம் பற்றிய வங்கியினுல் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு சிறு கமக்காரர்களுக்கு இவ்வுதவி மறுக்கப்பட்ட முறையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது. கிராமிய மட்டத்தில், அரசாங்க அதிகார அம்சங்களினதும் நிலப்பிரபுத்துவ அம்சங்களினதும் பிரதிபலிப்பான கூட்டுச் சக்திகள் சில ஒன்று சேர்ந்து சிறு கமக்காரரைச் சென்றடையக்கூடிய கடன் தாவல்களை அவர்களை அடையாதபடி தடங்கல் ஏற்படுத்தும் முட்டுக் கட்டையாக இருந்துள்ளன என்றும் இவ்வாய்வு காட்ட முனைகிறது. மத்தியபீட பூமி, வெளிமடை ஆகிய பிரதேசங்களின் காய்கறிப் பயிர் வளர்ப்புப் பிராந்தியங்களில் மக்கள் வங்கி நடாத்திய காய்கறிச் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் ஆய்வும், சிறு கமக்காரர் கடன் பெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்ததும், நியாய விலையில் விளைவுற்பத்திகளை விற்கும் சாத்தியத்தைத் தடுத்ததுமான, இத்தகைய ஒரு கூட்டிணைப்பு இருந்திருப்பதை உறுதிப்படுத்துவதாக இருக்கிறது.

மக்கள் வங்கி தனது பங்கிற்கு, கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் இத்தகைய முட்டுக்கட்டைகளை ஊடறுத்துச் சென்று வறுமை நிலையில் உள்ள கமக்காரர்களையும், கைவினைஞர்களையும், சிறு வர்த்தகர்களையும் சென்றடையக் கூடிய உபாயம் ஒன்றை 'வகுப்பதில் கவனம் செலுத்தி காரியமாற்றி வருகிறது. மக்கள் வங்கிக் கிளைகளில் அலுவற் பகிர்வுப் புனர்அமைப்பிற்கும் கிராமிய மட்டத்தில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் பணியாற்றுதற்கு அபிவிருத்தி உதவியாளர்களை வேலைக் கமர்த்துவதற்கும் ஏற்கனவே பணிப்புரைச் செய்யப்பட்டுள்ளது. அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு அலுவலர்களைத் தெரிவு செய்வதிலும் அவர்களது தொழிற் பிடிப்பு நாட்டம், கிராமத்தவர்களுடனுன சரியான ஒத்திசைவை நிறுவப் போதுமான அவர்களது திறன் ஆகியவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. மக்கள் வங்கியின் பயிற்சித் திட்டங்கள், விரும்பத்தக்க ஒழுக்க நெறி மாதிரிகளினை வளர்ப்பதில் வெளிக்கள அலுவலர்களுக்கு உதவக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டவையாகும். இப்போதிருப்பதைப் போலல்லாது கூட்டுறவுக் கடன் வசதி விருத்தியில் தோன்றும் பிரச்சினைகள் அதிக சாத்தியபூர்வமாகக் கையாளப்படுவதற்கு ஏதுவாக தேசிய மட்டத்திலும் கிராமிய மட்டத்திலுமான கூட்டுறவு இயக்கத்தோடு தொடர்பிணைப்புப் பெறும் நானுவித முகவர் நிலையங்களுக்கு மத்தியில் ஒரு நெருங்கிய இயைபுபடுத்தலைக் கொண்டு வருவதற்கான முயற்சியிலும் இவ்வங்கி ஈடுபட்டுள்ளது.

## பொழிப்பு

சேமிப்புகளை உத்வேகப் படுத்துதல் எமது நாட்டில் கடன் கொடு நிறுவனங்களோடு நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருப்பதால் அக்கடன் முறையின் விவரணமின்றிச் சேமிப்பு முறையின் விவரணத்தை செய்ய முடியாது என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டுள்ளோம். எனவே இலங்கையின் கூட்டுறவுச் சேமிப்புகள் வரலாற்றைத் தேடும் முயற்சியில் கூட்டுறவுக் கடன் வரலாற்றையும் ஆராய வேண்டி ஏற்பட்டு விட்டது.

கூட்டுறவுக் கடன் சங்கங்களே ஆரம்ப கால கூட்டுறவு நிறுவனங்களாயிருந்தன என்பதை ஏற்கனவே நாம் கண்டுள்ளோம். சமூக, பொருளாதார தடுப்பு முறைகள் காரணமாக பொருளாதாரத்தின் மீதான அவற்றின் தாக்கம் குறைவானதாகவே இருந்துள்ளது. ஆனுல் அவை நிறுவப்பட்டதோடேயே இலங்கையில் பாரம்பரிய கிராமியப் பொருளாதாரம் நாணயமயப்படுத்தப்பட்டதுடன் சேமிப்புகள் திரட்டலும் ஆரம்பமாயின. 1931 ல் இருந்து அதிகமான அரசியல் சுயாதீனம் வழங்கப்பட்டதோடு இடம் பெற்ற பிரதான மாற்றங்கள், குடியேற்ற வாதிக்க மாதிரியிலிருந்து வேறுபட்ட உள்நாட்டுப் பொருளாதாரத்தை புனரமைப்புச் செய்யும் முயற்சியில் உறுதிப்பாட்டைத் தோற்றுவித்தன. உள்ளூர் வங்கிகள் நிறுவப் பெற்றதும் கிராமிய நிதி நிறுவனங்களுக்கு அதிகப்படியான முக்கியத்துவம் அளிக்கப்பட்டதும் இவ்வபிவிருத்திகளின் முக்கிய அம்சங்களாகும்.

தேசமளாவிய பொருளாதார நடவடிக்கைகளிலும் இக் கைங்கரியங்களோடு ஒத்துப் போகக் கூடியதான அவற்றின் நோக்கெதிர்பார்ப்புகளை விசாலிப்பதற்கெனப் புகுத்தப்பட்ட நிறுவன மாற்றங்களிலும் அரசுடன் சேர்ந்து கூட்டுறவுச் சங்கங்கள் ஆற்றும் வளர்ச்சியுறும் பங்காற்றலையும் நாம் கண்டோம்.

சேமிப்புகள் துறையின் மிக முக்கியமான விருத்தியொன்று, கூட்டுறவு இயக்கத்தையும் கிராமிய வங்கிப்படுத்தலையும் அபிவிருத்தி செய்யும் விரைவான குறிக்கோளுடன் மக்கள் வங்கி உருவாக்கப்பட்டமையாகும். மக்கள் வங்கி பல கடன் வகைகளிலும் சேமிப்புகள் திரட்டல் திட்டங்களிலும் பரிசோதனை மேற்கொண்டிருக்கிறது. அதன் வெற்றிகரமான பரிசோதனைகளில் ஒன்று கூட்டுறவு இயக்கத்தில் அடியொற்றிய கிராமிய வங்கிகளை முன்னிறுவல் செய்ததாகும். கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் எனப்படும் இவ்வங்கிகள் தற்போது 460 கிளைகளாக, கிராமிய சமூக பொருளாதார அமைப்போடு மிக நெருக்கமான தொடர்போடு திகழும் முக்கிய நிறுவனமொன்ருகச் சேவையாற்றியுள்ளன. கடந்த சில வருடங்களாக இவை, கிராமியக் குடிசனத் தொகையின் 20 முதல் 30 சத வீதமானோரை அவற்றின் சேமிப்புகள் கடன் கொடுத்தல் முதலிய வியாபாரங்களில் பங்குகொள்ளச் செய்து கிராமிய நிதிச் சூழ்நிலையில் ஒரு முக்கிய காரணிகளாக இயங்கி வந்துள்ளன. சேமிப்புகள் துறையில் மக்கள் வங்கியின் நடவடிக்கைகள், அரசுத் துறைகளுக்குள்ளும் கூட்டுறவுத் துறைகளுக்குள்ளும் தனியார் துறையினது வைப்புகளைப் பெருமளவில் செலுத்தி பொருளாதாரத்தில் மறுவிநியோகக் கைங்கரியம் ஒன்று நடைபெறுவதற்கான மிக முக்கிய கருவி யொன்ருக மக்கள் வங்கியை இயங்க வைத்திருக்கின்றன. மக்கள் வங்கி அதன் அபிவிருத்தி சார்ந்த நடவடிக்கைகளில் தொடர்ச்சியான புனர் ஆய்வொன்றை நடைமுறையில் வைத்து வருகிறது. முன்பு சுட்டியது போன்று, அண்மை மாதங்களில் கீழ் மட்டத்திலுள்ள கிராமியக் குடித் தொகையின் 40% ஆனோரைச் சென்றடையக் கூடிய முயற்சியில் மேலும் தீவிரம் அளிக்கப்பட்டுள்ளது.